# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் **மு.குலாம் முஹம்மத்**

Volume-15
Issue-12

டிசம்பர்-2022 (ஜமாதிலவ்வல்-1444)

விலை ரூ. **40 /-**




# பாபரி மஸ்ஜித்

## வரலாற்றுத் தடம்



**தமிழகம் முழுவதும், முஸ்லிம்களின் வீடுகளில் காவல்துறை அதிரடி சோதனை..! - எதிராக அணிதிரண்ட மக்கள் அமைப்புகள்**

## சங்கப்பரிவாரத்தின் வெடிகுண்டு பயிற்சி முகாம்கள்

**எஸ்.எம்.முஷ்ரிஃப், ஐ.பி.எஸ். - ஆய்வறிக்கை**

**முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(5:08)


பாபரி மஸ்ஜித் வரலாற்றுத் தடம் - 4

பாபரி மஸ்ஜித் என்றும் நம் நினைவில் - 32

இந்தியாவில் முஸ்லிம்கள் தொடர் - 35

தமிழகம் முழுவதும், முஸ்லிம்களின் வீடுகளில் காவல்துறை அதிரடி சோதனை..! எதிராக அணிதிரண்ட மக்கள் அமைப்புகள்.!! - 42

தமிழகமெங்கும் காவல்துறையின் ரெய்டுகள் - 46

சங்கப் பரிவாரத்தின் வெடிகுண்டு பயிற்சி முகாம்கள் - 50

துருக்கியின் இரக்கமும் இஸ்ரேலின் கெடுபிடியும் - 56

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு - Follow Up - 58

சிலுவைப் போர் 2.0 - 60

ஓர் நீதிபதியின் நீதியான தீர்ப்பு - 62

மருத்துவம் - 64

தலையங்கம் - 65



# வைகறை வெளிச்சம்

டிசம்பர்-2022 ஜமாதிலவ்வல்-1444

ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது,M.A.,**
**Journalism & Communication**

துணை ஆசிரியர்

**கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,**



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

**தனி இதழ்: ரூ.40/-**
**ஆண்டுச் சந்தா**
**உள் நாடு: ரூ.480/-**
**வெளி நாடு: ரூ.5000/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in

**1528 கி.பி. பாபரி மஸ்ஜித் கட்டப்பட்ட வரலாறு. இப்பள்ளிவாசல் உண்மையில் மிர்பக்கி என்பவரால் கட்டப்பட்டது.**

இந்த மிர்பக்கி பேரரசர் பாபர் அவர்களின் கீழ் பணிபுரிந்த ஒரு படைத்தலைவர். இவரது சொந்த ஊர் தாஷ்கண்ட்.

இப்பள்ளிவாசல் அந்தப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் (ஷியா - சுன்னி இருவரும்) தங்கள் தொழுகையை நிறைவேற்றிடும் முகத்தான் நிறுவப்பட்டது.

ஆட்சியாளர் ஜகாங்கீர் அவர்களின் காலம் முதற்கொண்டுதான் இந்தப் பள்ளிவாசல் "பாபரி பள்ளிவாசல்" என வழங்கப்பட்டது. பள்ளி வாசல் கட்டி முடிக்கப்பட்ட அந்த நாள் முதல், முஸ்லிம்கள் இரு தரப்பாரும் (ஷியா - சுன்னி) தங்கள் தொழுகைகளைக் கூட்டாக இந்தப் பள்ளிவாசலில் நிறைவேற்றி வந்தார்கள்.

1950ம் ஆண்டு, பைஸாபாத் சிவில் நீதிமன்றம் ஒரு தடை உத்தரவைப் போட்டு முஸ்லிம்கள் பள்ளிவாசலுக்குள் நுழைவதைத் தடுத்தது. அன்று வரை முஸ்லிம்கள் தங்கள் தொழுகையை அந்தப் பள்ளி வாசலில் நிறைவேற்றியே வந்தார்கள்.

**1855 ஹனுமான்கார்ஹி வழக்கு**

19ம் நூற்றாண்டின் நடுவில் அதாவது 1855ம் ஆண்டில், ஹனுமான் கார்ஹி என்பது குறித்து வழக்கொன்று எழுந்தது.

இந்த வழக்கு சுன்னி முஸ்லிம்களுக்கும், நாகா சாதுக்களுக்குமிடையே எழுந்தது.

அப்போது அப்பகுதி, நவாப் வாஜித் அலீ ஷா என்பாரின் ஆட்சியின் கீழிருந்தது.

இந்த ஹனுமான்கார்ஹி அயோத்தியில் இருக்கின்றது.

இந்த ஹனுமான்கார்ஹியில் பள்ளிவாசல் ஒன்று இருந்தது எனவும், அது இடிக்கப்பட்டு



கோயில் கட்டப்பட்டுள்ளது என்றும் முஸ்லிம்கள் கூறினார்கள்.

இது குறித்து எழுந்த கலவரங்களில் 200 பேர் இறந்தார்கள்.

பல முஸ்லிம்கள் உயிரைத் தந்தும் பள்ளிவாசல் இடத்தை மீட்க இயலவில்லை.

முஸ்லிம்கள் ஹனுமான்கார்ஹியிலிருந்த பள்ளிவாசலை மீட்க முயற்சி செய்தார்கள் என்பதற்காக, இந்துக்கள் எதிர் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டார்கள்.

பாபரி பள்ளிவாசல் முன்பு 'ராம் சாபுத்ரா' ஒன்றிருந்தது என்பதே அந்த எதிர் நடவடிக்கை.

முஸ்லிம்கள் தங்கள் பள்ளிவாசலை மீட்க நடவடிக்கை எடுக்கின்றார்கள் என்று கோபங் கொண்டெழுந்த அந்தப் பகுதி பூர்வீக இந்துக் கள்கூட 'ஜென்மஸ்தான்' என்றொரு முழக்கத்தை முன் வைக்கவில்லை .

அவர்கள் ஓர் எதிர் நடவடிக்கையாகத்தான் பள்ளிவாசல் முன்பாக ஒரு இடத்தை இட்டுக் கட்டிப் பேசினார்கள்.

ஆகவே பாபரி பள்ளிவாசல், இராமர் பிறந்த இடம் என்பது ஆதாரமற்ற அரசியல் பிழைப்புக் கோஷம் என்பதே உண்மை.

(ஆதாரம் : பேராசிரியர் சு. சம்பத் லஷ்மி, வரலாறு மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர் மற்றும் டெல்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் வரலாற்று ஆராய்ச்சி மையத்தின் தலைவர்)

### 1857 ராம் சாபுத்ரா

பாபரி பள்ளிவாசல் முன்பாக சற்றுத் தொலைவில் மேடு போன்றிருக்கும் இடம் 'ராம் சாபுத்ரா' என்றும், அதுவே 'ராம் ஜென்மஸ்தான்' என்றும் சாமியார் ஒருவர் திருவாய் மலர்ந்தார். அத்தோடு அங்கு பூஜா புனஸ்காரங்கள் செய்யும் வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்றார்.

1857ல் பாபரி பள்ளிவாசல் முன்பாக சற்று தொலைவில் மேடு போன்றிருந்த இடம் ராம் சாபுத்ரா என்ற பெயரில் உயர்த்தப்பட்டு இந்துக்கள் பூஜா புனஸ்காரங்களைச் செய்து வந்தார்கள்.

ஒரே வளாகத்திற்குள், முஸ்லிம்கள் பள்ளி வாசலில் தங்கள் தொழுகையை நிறைவேற்றி னார்கள்.

இந்துக்கள் தங்கள் பூஜா புனஸ்காரங்களை நிறைவேற்றினார்கள்.

இரு வகுப்பாரிடையேயும் பிரச்சனைகள் எழுந்துவிடக்கூடாது என்பதற்காக, ஆங்கிலே யர்கள் இரண்டு வணக்க இடங்களை வேறுபடுத் திடும் அளவில் ஒரு சுவரை எழுப்பிட விரும்பி னார்கள். அதன்படி 1859ல் இந்தச் சுவர் எழுப்பப் பட்டும் விட்டது.

1883ம் ஆண்டு, மே மாதம் ராம் சாபுத்ராவில் இராமர் கோயில் கட்டும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

பின்னர், பைஸாபாத் துணை ஆணையாள ரிடம் இந்த இராமர் கோயில் கட்ட அனுமதி கேட்டு விண்ணப்பம் தரப்பட்டது.

இந்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

'பட்டவர்த்தனமான வகுப்பு வெறியேயன்றி வேறு எண்ணங்கள் இதற்குப் பின்னால் இல்லை. இதனால் அனுமதி வழங்கப்படவியலாது' எனக் கூறிவிட்டார் பைஸாபாத் துணை ஆணையாளர்.

### 1885 ராம் சாபுத்ராவில் கோயில் கட்ட வழக்கு

ஜனவரி 15, 1885ல் ஜென்மஸ்தான் காப் பாளராகக் காட்டிக்கொண்ட ரகுபீர் தாஸ், பைஸாபாத் கீழ் நீதிமன்றத்தில் ராம் சாபுத்ராவில் இராமர் கோயில் கட்ட அனுமதி கேட்டு வழக்குத் தொடர்ந்தார்.

பள்ளிவாசலுக்கு முன்னால் கோவில் கட்டுவது இரண்டு வகுப்பாருக்குமிடையே கொந்தளிப்பு களை ஏற்படுத்தும் என்பதால் அனுமதி மறுக்கப் பட்டது. மாவட்ட நீதிபதி முன்பு தொடரப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் எதிலும் பாபரி பள்ளிவாயில், சர்ச்சையாக்கப்படவில்லை என்பது தெளிவு.

1934ல் நடந்த வகுப்புக் கலவரங்கள் அயோத் தியையும் தாக்கியது.

சில தீவிரவாதிகள் முஸ்லிம்களைத் (தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருந்த முஸ்லிம்களையும் தாக்கி, பள்ளிவாயிலையும்

தாக்கினார்கள்.

எனினும் முஸ்லிம்கள் தொடர்ந்து தொழுகை களை நிறைவேற்றி வந்தார்கள்.

**1940ல்...**

1940ல் இந்தப் பாபரி பள்ளிவாசல் சுன்னி முஸ்லிம்களுக்குச் சொந்தமா? ஷியா முஸ்லிம் களுக்குச் சொந்தமா? என்றொரு சர்ச்சை எழுந்தது.

இது நீதிமன்றம் சென்றது.

நீதிமன்றம் பள்ளிவாசல் சுன்னி முஸ்லிம் களுக்கே சொந்தம்' எனத் தீர்ப்பு வழங்கிற்று.

இதுதான் பாபரி பள்ளிவாயில் யாருக்குச் சொந்தம் என்பது சம்பந்தமாக வழங்கப்பட்ட முதல் தீர்ப்பு.

**இராமர் சிலைகள்**

1949 டிசம்பர் 23ல் இராமர் லாலா சிலைகள் மூடநம்பிக்கையின் அடிப்படையில் பள்ளிவாயி லுக்குள் வைக்கப்பட்டன.

'இது சட்ட விரோதமான செயல்' என அப்போதே அறிவிக்கப்பட்டது.

இந்தக் கிரிமினல் குற்றம் சம்பந்தமாக ஒரு முதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

22.12.1949 அன்று சுதந்திர இந்தியாவில் ஒரு பள்ளிவாசல் கோயிலாக மாற்றப்பட்டுவிட்டது.

**K.K. நய்யார்**

பாபரி பள்ளிவாசலினுள் சிலை வைக்கப் பட்டது குறித்து தொடரப்பட்ட வழக்கு கே.கே. நய்யார் (K.K.Nayar) என்பவர் நீதிபதியாக இருந்த நீதிமன்றத்தில்தான் நடந்தது.

இவர் பிற்றை நாட்களில் ஜனசங்க், அதாவது முன்னாள் பி.ஜே.பி. யின் நாடாளுமன்ற உறுப்பி னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் மட்டுமல்ல. அவருடைய மனைவி சகுந்தலா அம்மையாரும் அதே ஜனசங்கின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

ஆக, முஸ்லிம்கள் ஒரு பி.ஜே.பி. குடும்பத் திடம்தான் பாபரி பள்ளிவாசலில் சிலை வைக்கப்பட்டது சம்பந்தமாக நியாயம் கேட்டிருக்கின்றார்கள்.

இந்த K.K. நய்யார் பைஸாபாத்திலும், உத்தர பிரதேச அரசு பொறுப்புகளிலும் பல ஆண்டுகள் இருந்தார். முஸ்லிம்கள் - இந்துக்கள் இடையே ஏற்பட்ட பல பிரச்சனைகளில் அமைக்கப்பட்ட விசாரணை கமிஷன்களின் தலைவராக இருந்தார். அப்போதெல்லாம் இவர் நீதியைப் பற்றி கிஞ்சிற்றும் கவலைப்படாத ஓர் இந்து தீவிரவாதி என்பதை யாரும் அறிந்திடவில்லை.

பள்ளிவாயிலுக்குள் சிலைகள் வைக்கப்பட்ட வுடன் அவற்றை அகற்றி விட்டு தொழுகையை நிறைவேற்றிக் கொண்டே இருந்திருக்க வேண்டும் முஸ்லிம்கள்.

பாவம்... அவர்கள் இந்த நாட்டு நீதிமன்றமும் நீதிபதிகளும் நியாயம் வழங்குவார்கள் என எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

**சிலைகள் வைக்கப்பட்டவுடன் வழங்கப்பட்ட (அ) நீதி**

"சிலைகள் வைக்கப்பட்டவுடன், மாவட்ட நீதிபதி சில நடவடிக்கை களை மேற்கொண்டார். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 145 பள்ளிவாசலைக் கைப்பற்றினார். பள்ளிவாசலை நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஒரு நீதிபதியைக் கொண்டு நிர்வாகம் என்ற பெயரில் பள்ளிவாசலுக்குள்ளிருந்த சிலைகளுக்குப் பூஜா புனஸ்காரங்களை அனுமதித்தார்.

**நீதிபதி K.K. நய்யாரின் இராஜ துரோகச் செயல்**

பாபரி பள்ளிவாயிலுக்குள் சிலை வைக்கப் பட்டுவிட்டது. அவற்றை அப்புறப்படுத்திட வேண்டும் என்ற வழக்கு தன் முன்னால் வந்த போது, அதனை சட்டை செய்யலாமலிருந்தார் இவர்.

மாவட்ட நீதிபதி என்ற அளவில், அவர் செய்ததெல்லாம், பள்ளி வாசலுக்குள் பூஜைகள் நடத்த ஆவன செய்ததுதான்.

தொழுகைகள் முறையாக நடைபெற்று வந்த பள்ளிவாசல் சிலைகளின் இருப்பிடமாக ஆக்கப் பட்டு விட்டது என்பதை அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களுக்குத் தெரிவித் தார்கள் முஸ்லிம்கள்.

ஜவஹர்லால் நேரு அவர்கள் 23.12.1949 அன்று உத்திரபிரதேச முதலமைச்சா ஜி.பி. பந்த் அவர்களுக்கு ஒரு தந்தியை அனுப்பினார்.

அந்தத் தந்தியில் இப்படிக் குறிப்பிட்டிருந்தார் :

"Dangerous example is being set there, which will have bad consequences."

("மிகவும் ஆபத்தான முன்மாதிரி ஒன்று அங்கே அமைக்கப்பட்டுள்ளது. அது மிகவும் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும்.")

பாபரி பள்ளிவாசல் விவகாரத்தில் அக்கறை காட்டிக் கொண்டதாகக் கண்ணீர் வடித்தவர்கள் யாரும், அங்கிருந்து சிலைகளை அகற்றிடுவதில் ஆர்வம் காட்டவில்லை என்பதை முஸ்லிம்கள் கவனிக்க வேண்டும்.

பிரதமர் நேருவின் தந்தி கிடைத்ததும், உத்திரபிரதேச முதல்வர் ஜி.பி. பந்த் ஒரு நடவடிக் கையை மேற்கொண்டார்.

அவர் பைஸாபாத் நீதிபதி K.K நய்யார் அவர்களிடம் இரண்டு கேள்விகளை வைத்து விளக்கம் கேட்டார்.

அந்தக் கேள்விகள்:

1. சிலைகளை பள்ளிவாசலுக்குள் வைத்து விடாமல் தடுத்திட ஏன் முன் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை ?

2. சிலைகளை ஏன் இன்னும் அகற்றிட வில்லை?

இந்த வினாக்களுக்கு விளக்கம் கேட்ட கடிதத்தில் அப்போதைய உத்திர பிரதேச அரசின் முதன்மை செயலர் பகவான் ஷாகே அவர்கள் கையெழுத்திட்டிருந்தார். இந்தக் கடிதம் டிசம்பர் 27, 1949 அன்று அனுப்பப்பட்டது.

இதற்கு விளக்கம் தந்த K.K. நய்யார், "முஸ்லிம் களிடம் பேசி. அப்பள்ளிவாசலை இந்துக்களுக்கு விட்டுக் கொடுத்திட செய்திடலாம்" என்று கூறிவிட்டார்.

அத்துடன் முஸ்லிம்கள் போல் தோற்றந்தந்த சிலரைத் தனது லட்சியம் நிறைவேற தயாரித் தார். அவர்களில் 15 பேரை ஒன்று திரட்டி ஒரு குழுவை அமைத்தார்.

அந்தக் குழுவின் கையில் ஒரு விண்ணப்பத்தை வடிவமைத்துத் தந்தார்.

அந்த விண்ணப்பத்தில், "பள்ளிவாசலுக்குள் சிலைகள் வைக்கப்பட்டு விட்டதால், பள்ளி வாசல் பள்ளிவாசலாகச் செயல்படவில்லை.



**K.K. நய்யார்**

அது கோயிலாகவே செயல்படுவதால் அதை இந்துக்களுக்கே தந்துவிடலாம்" என முஸ்லிம் களே முறையிடுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆதாரம் : "அயோத்தியா முழு உண்மைகள்" - பக்கம் 3,
வெளியீடு: United Academics International, Vidyanagar, Hyderabad-500044.

பள்ளிவாசலை இந்து அராஜகவாதிகளிட மிருந்து மீட்டே தீர வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்ட முஸ்லிம்கள், கவர்னர் ஜெனரல் இராஜகோபால் ஆச்சாரியார் அவர்களுக்குத் தகவல்கள் தந்தார்கள்.

இராஜகோபால் ஆச்சாரியார் அவர்கள் பிரதமர் நேரு அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், பள்ளிவாசலைச் சுற்றி நடப்பவை தனக்கு அதிர்ச்சியைத் தருகின்றன. முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து தான் கலங்கிப் போயிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கவர்னர் ஜெனரல் கடிதத்திற்கு நேரு அவர்கள் உடனேயே பதில் எழுதினார்.

அந்தப் பதில் இதுதான்: "CM of U.P. intended taking action. ("உத்திரபிரதேசத்தின் முதலமைச்சர்



நாடு முழுவதும் கலவரத்தை உண்டாக்கி, முஸ்லிம்களின் ரத்தத்தை ஓட்டி, பள்ளிவாசலை இடிக்கத் தூண்டிய அத்வானியின் ரத யாத்திரை

நடவடிக்கை எடுக்கும் எண்ணத்திலிருக் கின்றார்.")

*5.12.1950* அன்று ஜவஹர் லால் நேரு அவர்கள் தான் அயோத்தியாவுக்கு வர விரும்பு வதாகக் கடிதம் எழுதினார்.

அவரை வரவிடாமற் தடுத்துவிட்டார் உ.பி. முதல்வர் G.B. பந்த்.

முஸ்லிம்களுக்கு நீதி வழங்குவதற்கு பதில், *1950*ல் நீதிமன்றம் இன்னொரு தீர்ப்பை வழங்கிற்று. அது வேறொன்று மில்லை. இந்துக்கள் பூஜை நடத்துவார்களாம். முஸ்லிம்கள் அதில் எந்த இடையூறுகளையும் செய்துவிடக் கூடாதாம்.

உத்திர பிரதேச முதல்வர் G.B. பந்த் அவர்களும் ஓர் இந்து மதவெறியர் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள நீண்ட காலமாகிவிட்டது.

*1959*ல் அரசு பொறுப்பாளரை அகற்றிவிட்டு, பள்ளிவாசலை இந்துக்களிடம் ஒப்படைத்திட வேண்டும் என்றொரு வழக்கு தொடரப்பட்டது.

*1961*ல் சுன்னி வக்ஃப் போர்டு, பள்ளிவாசலை யும் அதைச் சுற்றியுள்ள முஸ்லிம்களின் அடக் கஸ்தலத்தையும் முஸ்லிம்களிடம் ஒப்படைத்திட வேண்டும் என்று கோரி வழக்கைத் தொடர்ந்தது.

இந்த வழக்கில் இன்று வரை தீர்ப்பு வழங்கப் படவில்லை.

பாபரி பள்ளிவாசலைக் கோயிலாக மாற்றிட வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்குகளில், உடனுக்குடன்தீர்ப்புகள்வழங்கப்பட்டுவிட்டன.

ஆனால் முஸ்லிம்கள் தங்கள் நியாயமான உரிமைகளுக்காகத் தொடாந்த வழக்குகளில், இதுவரை தீர்ப்புகள் வழங்கப்படவில்லை.

இன்னும் முஸ்லிம்கள் இந்த நீதிமன்றங்களை நம்புகின்றார்கள். இதேபோல்தான் *1986*ல் பள்ளி வாசலில் கதவுகளைத் திறந்து, பொது பூஜைக்காக அனுமதி வழங்கிடவேண்டும் என்ற தீர்ப்பும்!

பள்ளி வாசலைத் திறந்து பொது மக்களின் பூஜையை அனுமதிக்க என வழக்கு தொடர்ந்தவர் உமேஷ் சந்திர பாண்டே என்பவர்.

இவர் பாபரி மஸ்ஜித் சம்பந்தமாக தொடரப் பட்ட எந்த வழக்கோடும் சம்பந்தப்பட்டவரல்ல.

*1986*ம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதியில் பள்ளிவாயிலைப் பொதுமக்கள் பூஜைக்காகத் திறந்திடவேண்டும் என்றொரு வழக்கைப் பதிவு செய்கின்றார்.

மூன்றே நாட்களில் அதாவது பிப்ரவரி மாதம் *1*ம் நாள் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் பூட்டு திறக்கப்பட்டுவிட்டது.

பாபரி மஸ்ஜித் சம்பந்தப்பட்ட அடிப்படை வழக்குகள் பல உயர்நீதி மன்றத்தில் கிடப்பில் போடப்பட்டுள்ளது பல ஆண்டுகளாக!

அடிப்படை வழக்குகளை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி, தீர்த்து வைக்காத வரை அது தொடர்பான எந்த வழக்குகளிலும் கீழ் நீதிமன் றங்கள் தீர்ப்பு வழங்கிடக் கூடாது. இந்த நீதி மன்ற நெறிமுறைகளையெல்லாம் எடுத் தெறிந்துவிட்டு, பைஸாபாத் கீழ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகின்றது. அந்தத் தீர்ப்பு உடனேயே செயல்படுத்தவும் படுகின்றது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்தும் உடனேயே உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள் முஸ்லிம்கள்.

உயர்நீதிமன்றம் பிப்ரவரி *3*ம் நாள் *(1986)* முஸ்லிம்களின் முதுகில் குத்தி ஒரு தீர்ப்பை வழங்கிற்று.

அதாவது, "பாபரி பள்ளிவாசல் இருக்கும் சொத்தின் அப்போதைய நிலை அப்படியே பாதுகாக்கப்படவேண்டும்" என்பதே அந்தத் தீர்ப்பு.

இதன் பொருள், "பள்ளிவாசலில் தொடர்ந்து பூஜை நடத்தலாம்" என்பதே.

1985 முதல் அயோத்தியாவை மையமாகக் கொண்டு RSS, VHP. BJP முதலிய கட்சிகள் ஒரு பெரும் இயக்கத்தைத் துவங்கின.

1989ம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்த 'கும்பமேளா' திருவிழாவைப் பயன்படுத்தி கிராமம், கிராமமாக இந்த இயக்கத்தைக் கொண்டு சென்றார்கள்.

ஒவ்வொருகிராமத்திலிருந்தும், 'ஸ்ரீராம்' எனப் பொறிக்க செங்கல்கள் அயோத்தியா நோக்கி அனுப்பப்பட்டன.

1989ம் ஆண்டு இராமர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது. நவம்பர் மாதம் 9ம் நாள் நடைபெற்ற இந்த கால்கோள் விழாவில் இராஜீவ் காந்தி அரசு முஸ்லிம்களின் முதுகில் குத்தியது.

நீதிமன்றங்களால் தடை செய்யப்பட்ட ஒரு இடத்தில் கோயில் கட்ட அடித்தளம் அமைக் கப்பட்டது.

பண்பாடு, நாகரிகம் இவற்றின் அடிப்படை யில் பார்த்தால், மிகவும் கீழ்த்தரமான தோர் செயல் இது.

இந்தக் கீழ்த்தரமான செயலை இந்து வட்டா ரங்களில் மிகப்பெரிய சாதனை எனப் பீற்றிக் கொண்டன சங்கப் பரிவாரங்கள்.

நவம்பர் 1989ம் ஆண்டு அலகாபாத் உயர்நீதி மன்றம், அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்ற இடம் சர்ச்சைக்குரிய இடம் என்றும், அதன் அந்தஸ்தில் எந்த மாற்றமும் கொண்டு வந்திடக் கூடாது; அதில் ஒரு துரும்பைக் கூட மாற்றிடக் கூடாது என அறிவித்தது.

எனினும், அந்த இடம் பாழ்படுத்தப்பட்டது. இந்த நாட்டின் நீதிமன்றத்தை ஒட்டு மொத்த மாக அவமானப் படுத்தினார்கள் இந்து மத வெறியர்கள். வெறி கொண்ட இந்த நாட்டுத் துரோகத்திற்குப் பெயர், தாய் நாட்டின் மீதுள்ள மாளாத பற்று.

## 1989ம் ஆண்டு தேர்தல்கள்

1989ம் ஆண்டு நடந்த தேர்தல்களில், பா.ஜ.க. நாடாளுமன்றத்தில் 80 இடங்களைப் பிடித்தது. அதற்கு முந்தைய நாடாளுமன்றத்தில் அது பெற்றிருந்தது வெறும் 2 இடங்களே!

அப்போதைய அரசியல் கதாநாயகனாகவும், சமூக நீதியின் காவலனாகவும் காட்டப்பட்ட V.P. சிங், போஃபர்ஸ் ஊழலில் காங்கிரஸ் கட்சி சிக்கிக் கொண்டது - இவையெல்லாம் இந்தத் தேர்தலை நிர்ணயித்தன.

தேசிய முன்னணி என்ற பெயரில், BJP V.P. சிங்குடன் இணைந்து நின்றது, இவையெல்லாம் BJP இதில் அதிகமான இடங்களைப் பிடித்திட வகை செய்தன.

ஆனால் பா.ஜ.க.வினர் இது கோயிலுக்காகக் கிடைத்த ஓட்டு என்று பொய்ப் பிரச்சாரம் செய்தார்கள்.

BJP கூட்டுடன் பணியாற்றிய தேசிய முன்னணி பல பிரச்சனைகளை BJPயினராலேயே சந்திக்க வேண்டியதாயிற்று.

பாபரி பள்ளிவாசல் பிரச்சனையை BJP பெரிதாக்கவே, V.P. சிங் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை உடனேயே செயல்படுத்துவதாக அறிவித்தார்.

இந்நிலையில்தான் BJPன் உயர்ஜாதி வெறி வெளிப்பட்டது.

1990ல் விஷ்வ ஹிந்து பரிஷத் பாபரி பள்ளி வாசல் இருக்குமிடத்தில் கோயில் கட்டும் பணி ஜனவரி 21ம் தேதி ஆரம்பமாகும் என அறிவித்தது. வி.பி. சிங் அவர்களின் வேண்டுகோளின் கீழ் இது நான்கு மாதம் தள்ளிப் போடப்பட்டது.

1990ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அத்வானி மண்டல் கமிஷன் பரிந்துரை மூலம் கிடைக்க விருந்த சமூக நீதியிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பிடவும், இராமர் கோயில் மீது மக்களின் கவனத்தைக் கொண்டு வந்திடவும் ரத யாத்திரையை மேற்கொண்டார்.

இந்த ரத யாத்திரையின் பெயரால் நடை பெற்ற வகுப்புக் கலவரங்களினால், பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் உயிர் துறந்தார்கள். ரத யாத்திரை நாடு முழுவதும் ஏற்படுத்திய கொந்தளிப்புகளின் அடிப்படையில் அதைத்

தடை செய்திடவேண்டும் என விண்ணப்பித்தனர் மக்கள்.

ரத யாத்திரையைத் தடை செய்தால் வி.பி.சிங் அவர்களின் அரசுக்கு அளித்து வரும் ஆதரவைப் பின்வாங்குவோம் என அறிவித்தார்கள் BJPயினர்.

அப்போது உத்திர பிரதேசத்தில் முலாயம் சிங் யாதவ் அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருந் தார்கள்.

பீகார் மாநிலத்தில் லல்லு பிரசாத் யாதவ் அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அத்வானியும் அவருடைய பரிவாரங்களும் உத்திர பிரதேசத்திற்குள் புகுந்து கலவரங்களை உருவாக்குவதற்கு முன்னால், ரத யாத்திரையைத் தடுத்திட வேண்டும் என முடிவு செய்து, ரத யாத்திரை பீகாரில் சமஸ்திப்பூர் வந்தபோது 23.10.1990 அன்று அத்வானி கைது செய்யப் பட்டு, அரசு விருந்தினர் மாளிகையில் காவலில் வைக்கப்பட்டார். அத்வானியைக் கைது செய்த தும், ஒரு பெரும் கூட்டம் அயோத்தியை நோக்கிப் பாய்ந்தது. முலாயம் சிங் யாதவ் அவர்களின் தலைமையிலான உத்திர பிரதேச அரசு உறுதி யான நடவடிக்கையை மேற்கொண்டது.

இதே அக்டோபர் மாதம் 30ம் நாள் (1990) நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் முலாயம் சிங் யாதவ் கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதனால் பள்ளிவாசல் இடிக்கப்படாமல் தடுக்கப்பட்டது.

ஆனாலும், பள்ளிவாசலின் வெளிச் சுவர்கள் சேதப்படுத்தப்பட்டன.

சிலர் பள்ளிவாசலின் மேல் காவிக் கொடியை யும் ஏற்றினார்கள்.

இப்படிப் பள்ளிவாசலைத் தகர்ப்பதைத் தடுத்துவிட்டது, மண்டல் கமிஷன் பரிந்துரை யைச் செயல்படுத்த முனைந்து சமூக நீதி வழங்கிட முனைந்தது - இவற்றை மனதிற் கொண்டு BJPJயினர் வி.பி.சிங். அரசுக்குத் தந்த ஆதரவைப் பின் வாங்கினர்.

வி.பி.சிங் பதவி இழந்தார். ‘பாபரி பள்ளிவாசல் விவகாரத்தில் சுமூகமான முடிவு காண்போம்‘ எனத் தொடர்ந்து வந்த காங்கிரஸ் அரசு சூளுரைத்தது.



விஷ்ணு ஹரி டால்மியா, முரளி மனோகர் ஜோஷி, எல்.கே. அத்வானி, உமா பாரதி. (பள்ளிவாசலை இடித்தக் கூட்டம்)

பாபரி பள்ளிவாசல் பள்ளிவாசல்தான் என்பதற்கான ஆதாரங்களை முஸ்லிம்கள் தந்திட வேண்டும். அது கோயில் என்பதை நிரூபித்திட ஆதாரங்கள் இருந்தால், இந்துக்கள் தந்திட வேண்டும்‘ என்றொரு அறிவிப்பு இரு தரப்பா ரையும் நோக்கி வைக்கப்பட்டது. பாபரி பள்ளிவாசல் நடவடிக்கைக் குழு’ என்ற முஸ்லிம் களின் அணி ஆதாரங்களோடு வந்தது.

இந்துத் தீவிரவாதிகளோ, “இது மத நம்பிக்கை. இதற்கு ஆதாரங்கள் என எதுவும் தர தேவை இல்லை” என்று அறிவித்தார்கள்.

அத்தோடு மதுரா, வாரணாசி ஆகிய இடங் களிலிருக்கும் பள்ளிவாசல்களையும் இந்துக்களி டம் ஒப்படைத்திடவேண்டும் எனவும் இந்துத் தவிரவாதிகள் அறிக்கை விட்டார்கள்.

இதிலிருந்து இந்துத் தீவிரவாதிகளிடம் ஆதாரங்கள் ஏதும் இல்லை என்றும், ஆதாரங் களால் சாதிக்க இயலாதவற்றை அடாவடித் தனங்களால் சாதிக்க முனைகின்றார்கள் என்பதும் தெளிவானது.

### 1991 தேர்தல்களும் பள்ளிவாசல் இடிப்புகளும்

V.P. சிங் அவர்களின் அரசு வீழ்ந்தவுடன், சந்திரசேகர் தனது அரசை அமைத்தார்.

சந்திரசேகரை அரசு அமைக்க பணித்தது காங்கிரஸ்தான். பின்னா இதே காங்கிரஸ் சந்திர சேகர் அவர்களைப் பதவியிலிருந்து வீழ்த்திற்று.

1991ம் ஆண்டு ஜூன் மாதம் பொதுத் தேர்தல்கள் நடந்தன. பாரதீய ஜனதா கட்சி இதில் தன்னுடைய எண்ணிக்கையைச் சற்று அதிகப் படுத்திக்கொண்டது. அதாவது, 80 அங்கத்தினர் களிலிருந்து 117 அங்கத்தினரானார்கள். நாடாளு மன்றத்தில் இடம் பெற்றார்கள்.

அத்தோடு பாரதீய ஜனதா கட்சி உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஹிமாச்சலப் பிரதேசம் ஆகிய இடங்களில் ஆட்சிக்கு வந்தது.

P.V. நரசிம்மராவ் இந்தியாவின் பிரதமர் பதவியை ஏற்றார்.

பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் லால் கிருஷ்ண அத்வானி எதிர்க்கட்சித் தலைவரானார்.

உத்திரப்பிரதேசத்தில் பாரதீய ஜனதா கட்சிக்குக் கிடைத்த வாக்குகளின் விகிதம் 32% மட்டுமே. எனினும், 'கல்யாண் சிங்' என்பவரை முதல்வராகக் கொண்டு அங்கே பாரதீய ஜனதா கட்சி அமைச்சரவையை 24 ஜூன் 1991ல் அமைத்தது.

பதவி ஏற்ற மறுநாள் பாரதீய ஜனதா கட்சியின் முதல்வர் கல்யாண் சிங் தன்னுடைய அமைச்சரவைப் பரிவாரத்துடன் அயோத்தியா சென்று பாபரி பள்ளிவாசலுக்குள் நுழைந்தார். அங்கே அவர் உறுதிமொழியையும் எடுத்தார். அதில், "இதில் (பள்ளிவாசலில்) நிச்சயமாக ஓர் கோயில் கட்டப்படும்" என சூளுரைத்தார்.

**வழிபாட்டுத்தலங்களின் சட்டம்**

1991ல் நரசிம்மராவ் அரசு ஓர் சிறப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

அந்தச் சட்டத்தின் பெயர் Places of Worship (Special Provisions Act) 1991. இந்தச் சட்டம் செப்டம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டம் எந்தப் பள்ளிவாசலும் ஆலயமாகவோ, கோயிலாகவோ மாற்றப்படலாகாது என்றும், எந்தக் கோயிலும் ஆலயமாகவோ, பள்ளிவாசலாகவோ மாற்றப்பட முடியாது என்று பறைசாற்றியது.

இந்தச் சட்டம் 15.8.1947 அதாவது இந்தியா விடுதலை அடைந்த நாள் முதற்கொண்டு, வழிபாட்டுத்தலங்கள் எப்படி இருந்தனவோ அப்படியே பாதுகாக்கப்படும் என்றும் அறிவித்தது.

அதே நேரத்தில் பாபரி பள்ளிவாசலை, இந்தச் சட்டம் கட்டுப்படுத்தாது என்றும் சொல்லிற்று.

அதாவது பாபரி பள்ளிவாசலை வேண்டுமானால் கோயிலாக மாற்றிக் கொள்ளலாம் என்பதைச் சொல்லாமற் சொல்லிற்று.

இந்தச் சட்டத்தை மீறுவோருக்கு 3 ஆண்டுகள் வரை தண்டனைகள் தரப்படுமாம்.

அதாவது மூன்று ஆண்டுகள் சிறையிலிருக்க சித்தமாக இருப்போர் தங்கள் விருப்பம் போல் செயல்படலாம்.

இந்தச் சட்டம் இன்னொரு ஏமாற்று வேலை அவ்வளவுதான்.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததும், முஸ்லிம்களுக்கு ஒரு சிறு ஆறுதல். வாரணாசியிலும் மதுராவிலும் இருக்கும் பள்ளி வாயில்கள் காப்பாற்றப்படும் என்பதுதான் அந்த ஆறுதல்.

**பள்ளிவாயிலைச் சுற்றியுள்ள நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன**

1991ம் ஆண்டு அக்டோபர் மாதம் பாரதீய ஜனதாவின் உத்திர பிரதேச அரசு, பாபரி பள்ளி வாயிலைச் சுற்றியுள்ள 2.774 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்திற்று.

இதற்கு அது கூறிய காரணம், சுற்றுலாவை வளர்ப்பதும், அயோத்தியா வரும் புனித யாத்திரீகர்களுக்கு வசதிகள் செய்து தருவதுமாகும்.


இந்தப் பாரதீய ஜனதா அரசு பிறப்பித்த அரசாணைகளின் படையில், அக்டோபர் மாதம் 12ம் நாள் 1991 முதல் பாபரி பள்ளிவாயிலைச் சுற்றியுள்ள 2.774 ஏக்கர் நிலம் அரசுக்குச் சொந்தம்.

இதன் உள்நோக்கம் என்னவெனில், பாபரி பள்ளிவாயிலை இடித்து விட்டு இராமர் கோயில் கட்டுவதே!

அக்டோபர் 17, 1991 அன்று அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த ரிட் மனு, "உத்திர பிரதேச அரசின் ஆணை, அதாவது பாபரி மஸ்ஜித் உட்பட்ட இடத்தில் 2774 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்திய ஆணை செல்லாது' என அறிவிக்கும்படி வேண்டியது.

இதன் அடிப்படையில் அலகாபாத் உயர் நீதிமன்றம் 1991 அக்டோபர் 25ம் நாள் அந்த ஆணை செல்லாது என்று சொல்லாமல், கையகப்படுத்திய இடத்தில் நிரந்தரமான கட்டடங்கள்



எதையும் கட்டிடக் கூடாது என்றும், இறுதித் தீர்ப்பு வரும் வரை அந்த இடத்தை யாருக்கும் சொந்தமாக்கிப் பெயர் மாற்றம் செய்திடக் கூடாது என்றும், அத்தோடு அந்த இடத்தில் நடக்கும் அத்தனை கட்டுமானப் பணிகளையும் உடனேயே நிறுத்திவிடவேண்டும் என்றும் ஆணையிட்டது.

ஆனால், கல்யாண் சிங் அரசு பாபரி பள்ளி வாயிலைச் சுற்றியுள்ள *2774* ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியதும் VHP தொண்டர்கள் அசோக் சிங்கலின் மேற்பார்வையின் கீழும், பஜ்ரங் தள் தொண்டர்கள் வினய் கட்டியார் தலைமையிலும் இந்த நிலப்பரப்பிலிருந்த சிறு சிறு கோயில் களையெல்லாம் இடித்தார்கள்.

இந்தச் சிறு கோயில்களை இவர்கள் இடித் தற்குக் காரணம், பெரிய இராமர் கோயிலைக் கட்டுவதேயாகும்.

இதே வேகத்திலும், வெறியிலும் அவர்கள் இராமர் கோயில் கட்டுவதற்கான பிரதான வாசலை எழுப்புவதற்கு அடிக்கல்லும் நாட்டி விட்டார்கள்.

இந்த அடிக்கல் நாட்டும் பணி *22*, அக்டோபர் *1991*ல் நடைபெற்றது.

நரசிம்மராவ் அரசு இத்தனையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு கைகட்டி வாய் பொத்தி நின்றது. இத்தனையும் முடிந்த பின்னர் தான் நீதிமன்றம் தனது ஆணையை அக்டோபர் *25*ல் பிறப்பித்தது.

நீதிமன்ற ஆணைக்குப் பின்னரும் அங்கு கட்டுமானப் பணிகள் தொடர்ந்தன. *1991* அக்டோபர் *30*ல் கொடியேற்றினார்கள்.

இந்நாளில் VHP தொண்டர்கள் பள்ளிவாசல் முன் கூடி *1990*ல் அங்கு வந்த கர சேவைக்காரர் களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடத்தினார்கள்.

இதில், இந்து வெறி தலைவர்கள் குழுமி இருந்தோரைத் தூண்டிவிடும் அளவில் வன்முறைப் பேச்சுக்களைக் கட்டவிழ்த்திட்டனர்.

ஆத்திரம் கொண்ட கூட்டத்தினர், பள்ளிவாச லின் மேல் ஏறி காவிக் கொடியைக் கட்டினர்.

கல்யாண் சிங் அரசு அவர்களுக்கு ஊக்கம் தந்தது. நரசிம்மராவ் அரசு அமைதி காத்தது.

**1992 பிப்ரவரி**

*8*ம் நாள், உத்திரபிரதேச அரசு தான் கையகப் படுத்திய இடத்தைச்சுற்றித்தடுப்புச்சுவர்எழுப்பும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

**1992 மார்ச்**

*கல்யாண்சிங்கின் பா.ஜ.க. அரசு, பாபரி பள்ளி வாசலைச் சுற்றி இன்னும் 42 ஏக்கர் நிலத்தை இராமஜன்ம பூமி அறக்கட்டளைக்குக் குத்தகைக்கு விட்டது. இந்த இடம் இராமர் கதை சொல்லும் பூங்கா அமைத்திட பயன்படுத்தப் படும் எனவும் அறிவித்தது அரசு.*

**1992 மார்ச் 22**

*இதில் உற்சாகம் பெற்ற VHP, பஜ்ரங் தள் தொண்டர்கள் இன்னுமிருந்த சிறு, சிறு கோயில் களை இடித்து இராமர் கதை சொல்லும் பூங்கா அமைத்திட வகை செய்தனர்.*

*இந்தச் சாக்கில் சுற்றி இருந்த வீடுகளையும், கடைகளையும் இடித்துத் தரை மட்டமாக்கினர்.*

*இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் விவாதிக் கப்பட்டது.*

*மத்திய அரசு, மாநில அரசை (உ.பி.) மிரட்டி சில அறிக்கையை வெளியிட்டு விட்டு வாளாவிருந்தது.*

**1992 ஏப்ரல்**

*7ம் நாள் நாடாளுமன்றம், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட 35 உறுப்பினர்கள் அயோத்தியாவில் பாபரி பள்ளிவாயில் வளாகத்திற்குள் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைப் பார்வையிடச் சென்றனர்.*

*இந்தப் பார்வைக் குழுவுக்கு ஜனதா தளத் தலைவர் S.R. பொம்மை அவர்கள் தலைமை தாங்கினார்கள்.*

*இந்தக் குழு, அயோத்தியாவிலும் பாபரி பள்ளிவாயில் வளாகத்திற்குள்ளும் நீதி மன்ற ஆணைகளும், நீதி நெறிகளும் தொடர்ந்து மீறப் பட்டிருக்கின்றன என்று அறிக்கை சமர்ப்பித்தது.*

*இந்த அறிக்கையின் அடிப்படையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.*

**கரசேவை ஜூலை 1992**

*9ம் நாள் 2774 ஏக்கர் நிலத்தில் அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் ஆணைகள் புறக்கணிக்கப் பட்டு, கரசேவைகள் நடைபெற்றன. நீதிமன்ற ஆணை புறக்கணிப்புக்கு நடவடிக்கை ஏதுமில்லை.*

*15ம் நாள் VHPக்கு அலகாபாத் உயர் நீதி மன்றம் ஓர் ஆணையிட்டது.*

*அந்த ஆணை, பாபரி பள்ளிவாசல் வளாகத் திற்குள் நடக்கும் அத்தனை கட்டுமானப் பணிகளையும் உடனேயே நிறுத்திட வேண்டும் என்பதே!*

*நீதிமன்ற ஆணை புறக்கணிக்கப்பட்டது. நடவடிக்கை ஏதுமில்லை.*

*ஜூலை 22, 1992 அன்று உச்சநீதிமன்றம் ஓர் ஆணையைப் பிறப்பித்து, கட்டுமானப் பணிகளை நிறுத்திட வேண்டும் எனப் பணித்தது.*

*23 ஜூலை, 1992ல் கல்யாண் சிங் உச்சநீதி மன்றத்தில், இனி அதன் ஆணைகளை நிபந்தனை களின்றி அடிபணிந்திட சித்தமாய் இருப்பதாக அறிவித்தார்.*

**பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் சாதுக்களுக்குத் தந்த உறுதிமொழி**

*ஜூலை 22, 1992 அன்று நரசிம்மராவ் அவர்கள் சாதுக்களை சாமியார்களை அழைத்துப் பேசினார்.*

*நீதிமன்ற ஆணைகளைச் செயல்படுத்த மனமில்லாத அவர், சாதுக்களை அழைத்துச் சமாதானம் பேசினார். அந்தச் சாதுக்களிடம் கரசேவையை நிறுத்திடவேண்டும் என்று முறை யிட்டார். நான்கே மாதங்களில் தான் மொத்தப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்டுபிடித்து விடுவேன் என்றும் வாக்களித்தார். கரசேவையை நிறுத்திட வேண்டும் என முறையிட்ட அவர், கரசேவை செய்பவர்கள் மீது எந்தப் பலப் பிர யோகமும் செய்யப்படமாட்டாது என்றும் ஒரு தேவையற்ற யாரும் கேட்காத வாக்குறுதியைத் தந்தார்.*

*இந்தக் கடைசி வாக்குறுதியின் பொருள் நீங்கள் கரசேவையைத் தொடர்ந்து நடத்தலாம் என்பதே!*

*பிரதமர் மீது இரக்கப்பட்டு சாதுக்கள் மூன்று மாதம் அவகாசம் கொடுத்தார்கள். அத்தோடு சாதுக்கள் கரசேவையாளர்களை பக்கத்தில் கிருஷ்ணனுடைய கோயிலைக் கட்டுவதற்கு அனுப்பினார்கள்.*

நாடாளுமன்றத்தில் பிரதமர் பொய் சொன்னாரா?

சாதுக்களைச் சந்தித்து ஒரு வாரத்திற்குப் பின், பிரதமர் நாடாளுமன்றத்தில் ஒரு தகவலைச் சொன்னார்.

தான் சாதுக்களைச் சந்தித்துப்பேசி விட்ட தாகவும், பல்வேறு நீதிமன்றங்களிலும் கிடப்பி லிருக்கும், பாபரி பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட வழக்குகளை உச்சநீதிமன்றத்திடம் ஒப்படைக்கப் போவதாகவும், உச்சநீதிமன்றத்திடம் இந்த வழக்கில் விரைந்து தீர்ப்பளிக்க வேண்டிடப் போவதாகவும் அறிவித்தார்.

அத்தோடு பாபரி பள்ளிவாசலைக் கட்டுவதற்கு முன் அங்கிருந்தக் கோயில்கள் ஏதேனும் இடிக்கப்பட்டதா? என்றொரு வினாவை உச்ச நீதிமன்றத்திடம் வைத்து விடை கேட்கப்போவதாகவும் அறிவித்தார்.

பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்தில் முன்னர் ஒரு கோயில் இருந்தது என உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கினால் இந்து வகுப்பு வாதிகள் சொல்வதைக் கேட்டாக வேண்டும்.

இல்லையேல் இந்து வகுப்புவாதிகள் வேறொரு இடத்தில்தான் இராமர் கோயிலைக் கட்டிட வேண்டும்.

இந்த அறிவிப்பைச் செய்த மறுநாள் சாதுக்கள் மிரண்டார்கள்; பிரதமரை மிரட்டினார்கள்.

பிரதமர் தங்களிடம் (சாதுக்களிடம்) பேசிடும் போது நீதிமன்ற விவகாரங்கள் எதையும் பேச வில்லை. ஆகவே பிரதமர் பொய் சொல்லு கின்றார். எனவே நாங்கள் பிரதமரிடம் ஒப்புக் கொண்டவற்றிலிருந்து பின்வாங்குகின்றோம் என்றும் அறிவித்தனர்.

ஆனால், பாபரி பள்ளிவாசல் செயல்பாட்டுக் குழு (AIBMAC : All India Babri Masjid Action Committee) நீதிமன்றம் சொல்வதை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது.

ஆனால் இந்துத் தீவிரவாதிகள் மத நம்பிக்கை என்பது நீதிமன்ற முடிவுகளுக்கு அப்பாற்பட்டது. ஆகவே இந்த விவகாரத்தில் நீதிமன்றம் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று அறிவித்தார்கள்.

**1992 அக்டோபர் 30,31 நாட்களில்....**



நரசிம்மராவ்

VHPயின் சாதுக்களின் அவை டெல்லியில் கூடி, பின்வருமாறு அறிவித்தது:

“நீதிமன்ற ஆணைகளைப் பற்றிக் கவலைப் படாமல் டிசம்பர் 6, 1992 முதல் கர சேவை துவங்கும். அது கர்ப்பக்கிரகத்திலிருந்து - அதாவது பாபரி பள்ளிவாசலின் மத்திய (டூம்) பகுதியிலிருந்து ஆரம்பிக்கும் அந்தக் கரசேவை கோயில் கட்டி முடிக்கப்படும் வரை தொடரும்.

**1992 நவம்பர் உச்ச நீதிமன்ற உத்தரவு**

இந்நாளில் உச்ச நீதிமன்றம், உத்திர பிரதேச அரசுக்கு 2.774 ஏக்கரில் எந்தக் கட்டுமானப் பணிகளும் நடக்கக்கூடாது என்றும் ஆணை யிட்டது. அத்தோடு அந்தக் கட்டுமானப் பணிகளை அரசு எப்படித் தடுக்கப் போகின்றது என்பதை எழுத்து மூலம் உச்சநீதிமன்றத் தில் தெரிவித்திட வேண்டும் என்றும் கூறியது.

உச்சநீதிமன்றம் பிறப்பித்த இந்த ஆணையின் கீழ், உத்திரப் பிரதேச பாரதீய ஜனதா கட்சித் தலைவர் ஓர் அறிக்கையை உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்தார்.

அந்த அறிக்கையில், “டிசம்பர் 6, 1992 அன்று நடக்கவிருக்கும் கரசேவை சமிக்ஞை அளவில் தான் நடைபெறும். அத்துடன் கீர்த்தனைகளும் பாடப்படும்” எனத் தெரிவித்தார்.

ஆனால் பி.ஜே.பி. தலைவர்களான எல்.கே. அத்வானி அவர்களும், முரளி மனோகர் ஜோஷி அவர்களும், “கரசேவைக்காரர்கள் பஜனைகளை யும் கீர்த்தனைகளையும் பாடவரவில்லை. அவர்கள் முழு அளவில் கோயில் கட்டவே வருகின்றார்கள்” என அறிவித்தார்கள்.

ஆனால் பள்ளிவாயிலை இடிப்பதற்குத் தேவையானவற்றையெல்லாம் சங்கப் பரிவாரம் முழு அளவில் ஏற்பாடு செய்து கொண்டிருந்தது.

இதனை அறிந்தும் அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றது.

டிசம்பர் 6, 1992 ஞாயிறு அன்று சுமார் 11 மணி அளவில் ஆரம்பித்து மாலை 6 மணி அளவில் பாபரி பள்ளிவாயில் முழுமையாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

இதை பா.ஜ.க. தலைவர்கள் நேரில் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

குடியரசுத் தலைவருக்கும் பிரதமர் அவர் களுக்கும் தவறாமல் செய்திகள் வந்து கொண்டி ருந்தன. இடித்து முடித்த பின்னர் அந்த இடத்தில் இராமர் - சீதை (குழந்தைகள்) சிலையை வைத்தார்கள்.

1992 டிசம்பர் 8ம் நாள் மத்திய அரசின் செலவின் கீழ் கரசேவைக்காரர்கள் இலவசமாக அவரவர் இல்லங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

கரசேவைக்காரர்களை இலவசமாக இல்லங் கொண்டு சேர்த்திட ரயில்வே துறைக்கு மட்டும் ரூபாய் 300 கோடி செலவு என ரெயில்வே அமைச்சகம் தெரிவித்தது.

**எதிரொலி**

1992, டிசம்பர் 6 அன்று மாலை உத்திர பிரதேச முதல்வர் கல்யாண் சிங் முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.

எல்.கே.அத்வானி அன்றுவரை தான் வகித்து வந்த நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்தார்.

உத்திர பிரதேச சட்டசபை கலைக்கப் பட்டது. குடியரசுத்தலைவர் ஆட்சி அங்கே அமல் படுத்தப்பட்டது.

பாபரி பள்ளிவாசல் இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயிலுக்கு பலத்த பாதுகாப்புகள் போடப்பட்டன. இதற்கிடையே அயோத்தி யிலிருந்த முஸ்லிம்கள் அப்புறப்படுத்தப் பட்டனர்.

நாடு முழுவதும் முஸ்லிம்கள் தங்கள் ஆதங் கத்தை வெளிக்காட்ட அறப் போராட்டங்களை நடத்தினர்.

பல்லாயிரம் முஸ்லிம்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாக்கப்பட்டனர்.

இன்னும் பல ஆயிரம் முஸ்லிம்கள் 'தடா' வின்



கீழ் கைது செய்யப்பட்டு நிரந்தரமாகச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

**பாபரி பள்ளிவாசல் இடிக்கப்பட்ட பின்னணி**

மக்கள் விசாரணை குழுவின் (People's Inquiry Commission) அறிக்கை இது. இந்த அறிக்கை பாபரி பள்ளிவாசல் இடிக்கப்பட்ட பின்னர் நடத்திய விசாரணையின் கீழ் தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கை எப்படியெல்லாம் முஸ்லிம்கள் நாடாளுமன்றம், நீதிமன்றங்கள், நிர்வாகத்துறை ஆகிய துறைகளால் ஏமாற்றப்பட்டார்கள் என்பதை எடுத்துரைக்கின்றது அதேபோல் பள்ளிவாசல் இடிப்பின் முன், பின் நிகழ்வு களையும் படம் பிடித்துக் காட்டுகின்றது.

பாபரி பள்ளிவாசல் இடிக்கப்பட்டபோது கிடைத்த அத்தாட்சிகள், பாபரி பள்ளிவாசல் இடிப்பு திட்டமிடப்பட்ட ஒன்று என்பதைத் தீர்க்கமாகத் தெளிவுப்படுத்துகின்றன.

பள்ளிவாசல் இடிக்கப்பட்ட பின்னால், அது சில கட்டுப்பாடற்றவர்களின் செயல், அதற்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்று சங்கப் பரிவாரத்தினர் அறிவித்தது, வேண்டு மென்றே ஆடிய அரசியல் சதுரங்கம்.

இவர்கள் சட்டப்படியான நடவடிக்கை களிலிருந்து தப்பித்துக் கொள்ளவே இவ்வாறு கூறினார்கள்.

சங்கப் பரிவாரத்தைச் சார்ந்த தலைவர்கள், வெளிப்படையாக பள்ளி வாசலை இடிப்போம், அந்த இடத்தில் இராமர் கோயிலைக் கட்டுவோம்

என முழங்கி வந்தார்கள்.

நீதிமன்றங்களின் ஆணைகளுக்கு எதிரானது இந்த முழக்கம்.

நீதிமன்றங்கள், மத்திய அரசு, நாடாளு மன்றம், அரசியல்வாதிகள், பத்திரிகை உலகம் ஆகிய அனைத்து தரப்பாரும் இதை நன்றாக அறிவார்கள்.

ஆனால் அனைத்து தரப்பாரும் ஒன்று போல் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கத் தவறி விட்டார்கள்.

இதில் மிகவும் வருத்தமான செய்தி என்ன வெனில் ஜனநாயகத்தின் தூண்களான நீதிமன்றம், குடியரசுத் தலைவர், நாடாளுமன்றம், நிர்வாகத் துறை அனைத்துத் தரப்பாரும் செயல்படாமல் பள்ளிவாசல் இடிக்கப்பட்டுத் தரைமட்டம் ஆகும் வரைக்கும், அதே இடத்தில் கோயில் எழுப்பப்படும் வரைக்கும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததுதான்.

உலகில் ஜனநாயகம் தலையெடுத்துத் தழைத்த நாள் முதல் இன்று வரை எங்கேயும் ஜனநாயகத்தின் பெயரால் இத்துணை பெரிய அநியாயம் நடந்ததில்லை.

அரசியல் நிர்ணயச் சட்டம், சட்டம் - ஒழுங்கு, இவை இதைப்போல் எப்போதும் எங்கேயும் தோற்றதில்லை.

இதைப்போன்றதொரு ஜனநாயக அவலம் இதற்கு முன்னால் எங்கேயும் நடந்ததில்லை. இனிமேல் நடக்குமா என்பதும் சந்தேகமானதோ?

டிசம்பர் 6, 1992 அன்று பள்ளிவாசல் இடிக் கப்படுவதற்கு முன்பு, பள்ளிவாசல் பாதுகாப்புப் பற்றி நாடாளுமன்றம், உத்திரப்பிரதேச சட்டப் பேரவை, அலகாபாத் உயர்நீதிமன்றம், உச்சநீதி மன்றம், தேசிய ஒருமைப் பாட்டு அவை (National Integration Council), மத்திய அரசின் அமைச்சர் களின் அவை - இவை அனைத்திலும் விவாதிக் கப்பட்டன.

அதேபோல் பள்ளிவாசல் பாதுகாப்புப் பற்றி பத்திரிகைகளிலும் மிக ஆழமான விவாதங்களும் சர்ச்சைகளும் இடம்பெற்றன.

இதேபோல், சாதாரண குடிமகனுக்குக் கிடைக்கும் செய்தி அத்தனையும் மக்கள் மன்றத்திலும் விவாதிக்கப்பட்டன.

இத்தனை அவைகளிலும், மக்கள் மன்றங்களி லும், பிஜேபி அல்லாத உறுப்பினர்கள் நடக்க விருக்கும் மிகப்பெரிய ஆபத்து பற்றி எச்சரித் தார்கள்.

குறிப்பாக, 1992 நவம்பர் மாதம் கடைசியில், பல எச்சரிக்கைகள் அரசுக்குப் பறந்தன. இந்த எச்சரிக்கைகள் அனைத்தும் பாபரி பள்ளி வாசலுக்கு நேரவிருக்கும் அபாயத்தைக் குறித்தே அமிழ்ந்திருந்தன.

1992, நவம்பர் மாதம் 23ம் நாள் நடந்த தேசிய



ஒருமைப்பாட்டு அவைக்கூட்டத்தில் பிஜேபி நீங்கலாக அனைத்து அரசியல் கட்சிகளும் கலந்துகொண்டன.

இதில் எல்லா அரசியல் கட்சிகளும் பள்ளி வாசலைப் பாதுகாக்க அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளையும் அங்கீகரிப்பதாகவும், அரசு எந்த நடவடிக்கையை வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம் என்று கூறி அரசுக்கு எல்லா விதமான அதிகாரத்தையும் தந்ததோடு, எல்லா ஒத்துழைப்பையும் தருவதாகவும் ஒத்துக் கொண்டன.

பாபரி பள்ளிவாசல் பிரச்சனையில் பிரதிவா திக்காக வாதாடிய.. ஷாமா என்ற வழக்கறிஞர் பாபரி பள்ளிவாசல் இடிக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு பல தகவல்களை உச்சநீதி மன்றத்திற்கு முன்னால் வைத்தார்.

அந்தத் தகவல்களில் குறிப்பிடத்தக்கவை:

1. சங்கப் பரிவார் என்ற RSS, BJP, VHP முதலிய இயக்கங்கள் பல முறை நீதிமன்றங்களை அவமதித்திருக்கின்றன.

இவர்கள் கரசேவை என்று அயோத்தியில் கூடுவதில் பல கீழான நோக்கங்கள் இருக்கின்றன. இவர்கள் பள்ளிவாசலை இடித்துவிட்டு, 'அது கட்டுப்பாடற்ற சிலரால் நிகழ்ந்தது. நாங்கள் முயன்றும் அவர்களைத் தடுக்க இயலவில்லை" என்று கூறித் தப்பித்து விடுவார்கள். உண்மையில் பள்ளிவாயிலை இடிப்பதற்குரிய சூழலை இவர்களே உருவாக்கிக் கொடுப்பார்கள்.

பின்னால் இதுதான் அப்படியே நடந்தது என்பதை உலகம் அறியும். இதில் மிகவும் வருந்தத் தக்க விஷயம் என்னவெனில், உச்சநீதிமன்றம் நீதிபதி தேஜ் சங்கர் என்பவரை உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பாளராக நியமித்தது. அவர் தன்னு டைய பணிகளை மிகவும் குறுகிய கண்ணோட் டத்தில் எடுத்துக் கொண்டார். அவர் அயோத்தி யில் அளவுக்கதிகமாக நடந்து கொண்டிருந்த வகுப்புக் கலவரங்களைப் பற்றி எந்தத் தகவலையும் தரவில்லை.

அவர் அயோத்தியாவில் தங்கி இருந்த நாட்களில், சங்கப் பரிவாரத்தினர் பள்ளிவாயிலை இடித்துவிடுவோம் எனத் திரும்பத் திரும்ப கத்தியதைக் கண்டு கொள்ளவில்லை.

டிசம்பர் 1, 1992 முதல் அவர்கள் பள்ளி வாயிலை இடிப்பதை அல்லும் பகலும் விவாதித்துக் கொண்டே இருந்தார்கள்.

இந்த நீதிபதி தேஜ் சங்கர் அவர்களிடம் இது குறித்து தகவல் தரப்பட்டும், அவர் அதை உச்சநீதி மன்றத்திற்குத் தெரிவிக்கவில்லை.

நீதிபதி ஷங்கர் அவர்களிடம் இதுபற்றி விசாரித்தபோது, "என்னிடம் 2.774 ஏக்கர் நிலப் பரப்பின் பௌத்தீக நிலை என்ன என்பதைக் கண்காணித்து அறிக்கை தரவேண்டும் என்று கூறி இருக்கின்றார்கள். நான் அதைக் கண்காணித்து அறிக்கை தருவேன் அவ்வளவு தான்" என்று கூறிவிட்டார்.

மத்திய அரசு இந்த மொத்தப் பிரச்சனை யையும் ஓரங்க பார்வையே பார்த்தது. ஆனால் அரசு தந்த அறிக்கைகள் அனைத்திலும் இந்தக் குற்றச்சாட்டு மறுக்கப்பட்டது. அரசு தந்த வெள்ளை அறிக்கையிலும் இது மறுக்கப்பட்டது.

மத்தியப் புலனாய்வுத்துறை, வட்டார காவல் துறையினர், மாநில புலனாய்வுத் துறையினர் இவர்கள் அனைவரும் மத்திய அரசுக்கு அனைத்துத் தகவல்களையும் தந்தார்கள். இந்தத் தகவல்களில், பாபரி பள்ளிவாயிலை இடிப்பதற்கு வகுக்கப்பட்ட திட்டங்களும் அடங்கும்.

இந்தத் தகவல்கள் அனைத்தும் அரசுக்குத் தரப்பட்டுவிட்டன என்பதற்குப் போதுமான சூழ்நிலை சாட்சியங்கள் இருக்கவே செய்தன.

இந்தத் தகவல்கள் 1992, நவம்பர் 26ம் நாளே அரசுக்குத் தெரியும்.

ஆனால் மத்திய அரசு இந்தத் தகவல்களை உச்சநீதிமன்றத்திற்குச் சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்தது.

உச்சநீதி மன்றத்திற்கு இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்படவில்லையென்றாலும், உச்சநீதிமன்றம், மத்திய அரசுக்கு ஓர் தகவலைத் தந்தது.

அந்தத் தகவல், மத்திய அரசு தனக்குக் கிடைக்கும் செய்திகளின் அடிப்படையில் தகுந்த- நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அப்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எந்தத் தடையுமில்லை என்பதாகும்.

இப்படி உச்சநீதிமன்றம் மத்திய அரசை

செயல்பட பணித்தவுடன் மத்திய அரசு பல கடிதங்களை மட்டும் உத்திரபிரதேச அரசுக்கு அனுப்பியது. இதைத் தவிர வேறு எந்த உருப்படியான நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்கவில்லை.

மக்கள் தொடர்புத் துறை (பத்திரிகைத் துறையினர்) இவர்களின் பிரதிநிதிகள், அயோத்தியாவிலும், பைஸாபாத்திலும் இருந்தார்கள். பள்ளி வாசலை இடிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முன் நடவடிக்கைகளையும் இவர்கள் கவனித்துக் கொண்டேதான் இருந்தார்கள். இவர்களும் இந்த விஷயத்தில் ஏனோ அசட்டையாக இருந்தார்கள்.

இதுகுறித்து விசாரித்தபோது பத்திரிகைத் துறையினர் தந்த பதில்:

“சங்கப் பரிவாரம் இதேபோல் கனல் பறக்கப் பேசி கேள்விப்பட்டிருக்கின்றோம். அவர்களின் வழக்கமான வார்த்தை ஜாலங்கள்தான் இந்தப் பேச்சுக்களும் எனக் கருதினோம். ஆனால் அவர்கள் அந்தப் பேச்சுக்களை அப்படியே நிறைவேற்றுவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை.”

இவையெல்லாம் சாக்குப்போக்குகளாகச் சொல்லப்பட்டாலும், மக்கள்தொடர்பு கருவிகள் - பத்திரிகைத் துறையினர் இவர்களெல்லாம், நடக்கவிருந்த அதிர்ச்சியான நடவடிக்கைகளுக்கு நடந்த முன் எச்சரிக்கைகளை சரியாகக் கணித்துச் சொல்லத் தவறிவிட்டார்கள் என்பது உண்மையே!

கரசேவைக்காகப் போனவர்கள், பள்ளி வாசலை இடிப்போம், கோயிலைக் கட்டுவோம் என்ற கோஷத்தைக் காலமெல்லாம் எழுப்பி வருகின்றார்கள்.

அவர்களெல்லாம் பள்ளிவாசலுக்கு முன் குழுமி இருக்கின்றார்கள். அவர்கள் அத்தனை வசதிகளும் இருக்கும்போதும், பள்ளிவாசலை விட்டு வைப்பார்கள் என்ற அனுமானங்களெல்லாம் அசட்டையானவை.

பாபரி பள்ளிவாசலில், அக்டோபர், நவம்பர் (1990) மாதங்களில் நடந்து கொண்டதைப் பார்த்தால், 1992ல் அவர்கள் பள்ளிவாசலை விட்டு வைப்பார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை.

**அப்போதைய தமிழகத்தின் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் டிசம்பர் 6, 1992ல் நடக்கவிருந்த கரசேவையை ஆதரித்தார்.**

**இந்தத் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவில்தான் அப்போதைய “தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் கரசேவையை அழுத்தமாக ஆதரித்துப் பேசினார். ஆனாலும், தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் இறுதித் தீர்மானத்தில் கையெழுத்திட்டார்**

1990ல், மத்தியிலும், மாநிலத்திலும் பள்ளி வாசலை ஜனநாயக நெறிமுறைகளை காப்பாற்றியே தீரவேண்டும், என்பதற்காக வரிந்து கட்டிக் கொண்டு செயல்பட்ட தலைமைகள் இருந்தன.

இருந்தும் கரசேவை நடத்தியவர்கள் நாலா பக்கங்களிலும் மறைந்திருந்து வந்து திடீர் தாக்குதல்களை நடத்தினார்கள். கடினமான பாதுகாப்பு நடவடிக்கைகளை இரண்டு அரசுகளும் மேற்கொண்டதால் தான் பள்ளிவாசல் தப்பிற்று.

இந்த முறை மாநில அரசு எல்லா விதத்திலேயும் உதவி செய்வதாக இருந்தது. மத்திய அரசு வேண்டுமென்றே தலையிட தயங்கிற்று. பாதுகாப்பு ஏற்பாடுகள் ஒரு நெறிமுறையின் கீழ், நிரந்தர ஏற்பாடுகள் கீழ் பக்குவமாகக் குறைக்கப்பட்டன.

காசேவைக்கு வந்தவாகள் அந்த வட்டாரத்தில் வாழ்ந்த முஸ்லிம் பீதிக்குள்ளாக்கவும், கதிகலங்கச் செய்திடவும் தாராளமாக அனுமதிக்கப்பட்டார்கள். அத்துடன் நீதிமன்றத்தில் வழக்கின் கீழிருக்கும் பூமியை ஆக்கிரமிக்கவும் குழுமவும் தாராளமாக அனுமதிக்கப்பட்டார்கள்.

கண்டிப்பான தீர்க்கமான மத்திய அரசு நடவடிக்கை மட்டுமே பாபரி பள்ளிவாசலைக் காப்பாற்றியிருக்கவியலும். நிச்சயமாக அது அங்கே வருவதாகத் தெரியவில்லை. ஆகவே



பள்ளிவாசலை இடித்துத் தரைமட்டமாக்குவது தடுக்க இயலாத ஒன்றாக ஆகிவிட்டது.

பள்ளிவாசல் இடிப்பை ஓர் ஆச்சர்யமான செயல் (Chamatkar) என்றார் இராம சந்திர பரம் ஹம்ஸ் இந்த மக்கள் விசாரணை குழுவிடம், இது உண்மையல்ல. அத்தனை வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் பள்ளிவாசல் இடிப்பு தவிர்க்க இயலாத ஒன்றாக ஆகிவிட்டது.

இராமர் கோயிலை, பாபரி பள்ளிவாசல் இருக்குமிடத்தில் கட்டுவோம் என்ற வாக்குறுதியை வழங்கித்தான் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது.

மாநில அரசின் தலைமை, தீர்க்கமான ஓர் முடிவை எடுத்தது.

அந்த முடிவு பள்ளிவாசல் இருக்கும் இடத்தில் கோயில் கட்டும் விவகாரத்தில் தலையிடும் சட்டங்கள், ஆணைகள் அனைத்தும் உதாசீனப் படுத்தப்பட வேண்டியவையே! இந்த இலக்கை நோக்கி, அதாவது பள்ளிவாசல் இருக்குமிடத்தில் கோயிலைக் கட்டும் இலக்கை நோக்கி, மெல்ல மெல்ல ஆனால் முறையாக அடியெடுத்து வைத்தது.

அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கும் நீதிமன்ற ஆணைகளுக்கும் எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கும் போதே, அந்த (உ.பி.) மாநில அரசு தான் நீதிமன்ற ஆணைகளின் படியும் அரசியல் சட்டத்தின்படியும் நழுவாமல் நடந்து கொண்டிருப்பதாக பிரஸ்தாபித்துக் கொண்டே இருந்தது.

இதேநேரத்தில் அது பாபரி பள்ளிவாசலைச் சுற்றி எழுப்பி இருந்த தடைகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பலவீனப்படுத்திக் கொண்டே இருந்தது. CPMF என்ற பாதுகாப்புப் படைதான் பாபரி பள்ளிவாசலைப் பாதுகாக்க, பாபரி பள்ளி வாசலைச் சுற்றிப் போடப்பட்டிருந்தது.

மாநில அரசு (கல்யாண் சிங் தலைமையி லான பிஜேபி அரசு) இந்தப் பாதுகாப்புப் படையை கொஞ்சம் கொஞ்சமாய் பின்னால் தள்ளி விட்டு PAC என்ற பாதுகாப்புப் படையைப் பள்ளிவாசலைச் சுற்றி நிறுத்தியது.

இந்த PAC என்ற பாதுகாப்புப் படை முஸ்லிம் களுக்கு எதிரானது என்றும், இந்துமயமானது என்றும் காலமெல்லாம் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்ட ஒன்று.

இந்த PAC என்ற பாதுகாப்புப் படைக்குப் பக்கபலமாக மாநில காவல்துறை நிறுத்தப்பட்டி ருந்தது. இந்த மாநில காவல்துறை வகுப்பு வெறி கொண்டதாக இருந்தது...

இந்த பிஜேபி - அரசு அயோத்தியில் குழுமிய கரசேவகர்களிடம், அவர்கள் முஸ்லிம்களை எத்துணைதான் பீதிக்குள்ளாக்கினாலும், எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட மாட்டா என பகிரங்க மாகவும், தெளிவாகவும் வாக்குறுதிகளை வழங்கியது.

கரசேவகர்களிடம் எந்தெந்த அதிகாரி களெல்லாம் அனுதாபத்தோடும் பரிவோடும் நடந்து கொள்வார்களோ அவர்களெல்லாம், அயோத்தியில் அதிகாரிகளாக அமர்த்தப்பட் டார்கள். பல அதிகாரிகள் பகிரங்கமாகவே கரசேவைக்கு ஒத்துழைத்தார்கள்.

உத்திர பிரதேச முதலமைச்சர் பாபரி பள்ளி

வாசலைப் பாதுகாக்க எல்லா நடவடிக்கை களையும் எடுத்திருப்பதாக எல்லோருக்கும் உறுதி அளித்தார். என்றாலும் அந்த அமங்கல நாள் நெருங்கிடும்போது எல்லா அதிகாரிகளும் அந்த இடத்தை விட்டு அகன்றுவிட்டார்கள்.

கரசேவை செய்வோரின் வசதிக்காகவே அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டார்கள். மேலே சொன்ன ஆதாரங்களின் அடிப்படையில் ஒரு விஷயத்தை நாம் தீர்க்கமாகச் சொல்லிட இயலும்.

அதாவது, பாபரி பள்ளிவாசல் இடிக்கப்பட்ட தற்கான குற்றச்சாட்டு முழுமையாக உத்திர பிரதேச அரசைச் சாரும்.

நீதிமன்ற ஆணைகளை அது புறக்கணித்தது. அரசியல் நிர்ணயச் சட்டத்தை அது அவமதித்தது.

எப்படி இந்தக் குற்றச்சாட்டுகளெல்லாம் உத்திரபிரதேச அரசைச் சாருமோ, அதேபோல், இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் மத்திய அரசையும் சாரும்.

மத்திய அரசு டிசம்பர் மாதம் 1ம் தேதிக்கு முன்னரே இந்த விவகாரத்தில் தலையிட்டிருக்க வேண்டும். இதற்குப் பொருத்தமான காரணங் களும் போதுமான காரணங்களும் இருக்கவே செய்தன.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 356ன் கீழ் நடவடிக்கை போன்ற கடினமான நடவடிக் கைகளை மத்திய அரசு மேற்கொண்டிருக்க வேண்டும். இந்த நடவடிக்கை கடுமையானது என்றாலும், அதனை எடுப்பதற்குப் போதுமான காரணங்கள் இருக்கவே செய்தன. இந்தக் காரணங்கள் குறித்துப் போதுமான தகவல்களும் மத்திய அரசுக்குக் கிடைக்கவே செய்தன.

மத்திய அரசு இத்தகைய கடுமையான நட வடிக்கைகளை மேற்கொள்ள விரும்பாவிட் டாலும் போதுமான அளவு CPME படைகளை டிசம்பர் 6, 1992க்குள் பள்ளி வாசலைச் சுற்றிப் போட்டிருந்தாலும் பள்ளிவாசலைக் காப்பாற்றி இருக்கலாம்.

இதைச் செய்யவும் மத்திய அரசுக்குப் போதிய அளவு அதிகாரமும், காரணங்களும், அதற்கான தகவல்களும் இருக்கவே செய்கின்றன.

எந்த நடவடிக்கையை எடுத்தாலும் பலன் தராது என்ற நிலையில் மத்திய அரசு குடியரசுத் தலைவரின் ஆட்சியை அங்கே கொண்டு வந்திருக் கலாம். அதற்கான அரசியல் அங்கீகாரத்தை அது பெற்றிருந்தது. அரசியல் நிர்ணயச் சட்டம் 356ன் கீழ், இதில் தலையிடுவது அதன் தார்மீகக் கடமையாகும்.

இத்தனையுமிருந்தும், மத்திய அரசு CPMF டிசம்பர் 6, 1992 அன்று பள்ளிவாசல் இடிக்கப் படுவதற்கு முன்பு அனுப்புவதற்குப் பதிலாக, டிசம்பர் 8, 1992 அன்றுதான் அனுப்பியது.

அதாவது, பள்ளிவாசல் முழுமையாக இடிக் கப்பட்டு அந்த இடத்தில் காயிலம் கட்டப் பட்ட பின்னர், அந்தக் கோயிலை பாதுகாக்கவே இந்த CPMF சிறப்புக் காவலர்கள் அனுப்பப் பட்டார்கள்.

பாபரி பள்ளிவாசலைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க, மத்திய அமைச்சரவை டிசம்பர் 6, 1992 அன்று மாலை 6 மணிக்குக் கூடியது.

அதாவது, பள்ளிவாசல் இடிக்க ஆரம்பிக்கப் பட்டு, 6 மணி நேரங்கள் கழித்தே மத்திய அமைச் சரவை கூடிற்று.

அதுவும் குடியரசுத் தலைவர் கோபாவேச மாக தக்க நடவடிக்கை எடுங்கள் என்று பகிரங்கமாகக் கேட்டுக் கொண்ட பின்னரே இந்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

மத்திய அரசு தொடர்ந்து வேண்டுமென்றே தனது ஜனநாயக கடமைகளையும், தார்மீக கடமைகளையும், ஒழுக்கம் கருதி அது நிறை வேற்றியிருக்க வேண்டிய கடமைகளையும், அரசியல் நிர்ணயச் சட்டம் அதனிடம் பணித்த கடமைகளையும் புறக்கணித்து வந்துள்ளது.

ஆகவே மத்திய அரசாங்கம், சங்கப் பரிவாரங் களான RSS, BJP, VHP, பஜ்ரங்க் தளம், மதவாத தீவிரவாதிகள், உத்திர பிரதேச அரசு ஆகிய அனைவரையும் போல் குற்றம் செய்தது பாபரி பள்ளிவாசல் இடிப்பில்.

சங்கப் பரிவார் எனக் குறிப்பிடப்படும் வகுப்புவாத இயக்கங்களுள் தலையாயதாகக் கருதப்படுவது RSS என்பதே! அதுவே டிசம்பர் 6, 1992 அன்று வரையும், அன்றும், அதற்குப் பின்னரும் நடந்த நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பு.

இந்த இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் அனைவரும் பல நாட்களுக்கு முன்னரே அங்கே முகாமிட்டிருந்தனர். இவர்களில் பலர் கரசேவை யாளர்களைத் தூண்டிவிட்டுக் கொண்டே இருந்தார்கள்.

பள்ளிவாசலை இடிக்கத் துவங்கியவுடன், அத்வானி, அசோக் சிங்கல், S.C. தீக்ஷித், ரீதாம்பரா, உமாபாரதி இவர்கள் கரசேவைக் காரர்களுக்கு ஒலிபெருக்கிகள் மூலம் வெளிப் படையாகவே உற்சாகம் தந்தார்கள்.

பலர் கல்யாண் சிங் (அப்போதைய உத்திர பிரதேச முதலமைச்சர் அவர்களைப் போல் இரட்டைக் குரலில் பேசினார்கள்.

இவர்கள் சர்ச்சைக்குள்ளான அந்தக் கட்டிடத் திற்கு எந்தவித பங்கமும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். இன்னும் சில நேரங்களில் இவர்கள் அதே ஒலிபெருக்கியில் "இராமர் கோயில் பாபரி பள்ளிவாசல் இருக்கும் அதே இடத்தில் கட்டப்பட வேண்டும். கட்டப் படும்" எனக் கர்ஜித்தார்கள். பின்னர் அவர்கள் தாங்கள் இப்படியெல்லாம் சொல்லவில்லை என்று அடித்துக் கூறினார்கள்.

பாபரி பள்ளிவாசல் இடிப்பதை அந்த இடத்திலேயே இருந்து பார்த்து, இடிப்பவர் களுக்கு எல்லா வகையிலும் உற்சாகம் தந்து கொண்டிருந்தவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் நம்பிக்கை நன்னடத்தை உறுதி மொழிகளுக்கு எதிராக நடந்து கொண்டார்கள். இவர்கள் இந்த வகையிலும் மிகப்பெரிய (நாட்டுத் துரோக) பழியையும் பாவத்தையும் சுமப்பவர்கள்.

கரசேவைக்காரர்களுக்கு எல்லாம் செய்து தரவேண்டும் எனப் பணிக்கப்பட்டிருந்த அதிகாரி களில் பலர், அதைச் செய்து தரமாட்டோம் என்றார்கள். அவர்கள் இடம் மாற்றப்பட்டார்கள். தண்டிக்கப்பட்டார்கள்.

பாபரி பள்ளிவாசல் விவகாரத்தில் நீதிமன் றங்கள் காட்டிய மெத்தனமும், மனமற்ற போக்கும் சொல்லிமாளா.

பாபரி பள்ளிவாசல் விவகாரத்தில் விரைந்து விளக்கமாகத் தீர்ப்புத் தந்திட வேண்டியது நீதி மன்றங்களின் தார்மீக, தலையாயப் பணியாகும்.

இந்த விவகாரத்தில் நீதிமன்றங்கள் மனது வைத்திருந்தால் எப்போதோ தீர்ப்பு வழங்கி இருக்கலாம். இது உடனே முடியக்கூடிய ஒரு சாதாரண விவகாரந்தான். இது தவிர்க்க இயலாத ஒன்றாகவும் இருந்தது. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருந்தால் இந்த மொத்தப் பிரச்சனையும் தீர்ந்து போயிருக்கும். நாட்டில் இத்தனை அமளிகள் ஏற்பட்டிருக்காது.

இன்னும் சொன்னால் இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் சுதந்திர இந்தியாவின் நீதி மன்றங்கள் வழங்கிய தீர்ப்புகள் அனைத்தும் இந்துக்களையே மனதிற்கொண்டு இந்துக்களுக் குச் சாதகமாகவே வழங்கப்பட்டன.

அந்தத் தீர்ப்புகளில் ஒன்றுதான், இந்துக்கள் பூஜை நடத்த அனுமதி வழங்கியதும், பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் பள்ளிவாசலில் முஸ்லிம்கள் தொழுகையை நிறைவேற்றும் உரிமையை மறுத்ததும்.

நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகள் முஸ்லிம் களைப் பள்ளிவாசலுக்கு வெளியே வைத்துக் கொண்டிருந்தன. இந்தத் தீர்ப்புகள் முஸ்லிம் களைப் பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் கூட நெருங்கவிட வில்லை.

ஆனால், இதே நீதிமன்ற தீர்ப்புகள் இந்துக் களைப் பள்ளிவாசலுக்குள்ளால் அனுமதித்தன. ஏன், சிலைகளை வைத்துப் பூஜை பண்ணவும் அனுமதி தந்தன.

இதனால்தான் இந்துக்கள், பாபரி பள்ளி வாசலை ஒரு பள்ளிவாசலே இல்லை என்று பிற்றை நாட்களில் பேசத் தலைப்பட்டனர். பாபரி பள்ளி வாசலை அவர்கள் "சர்ச்சைக்குரிய கட்டடம்" என்றே அழைத்தனர்.

அரசு சமர்ப்பித்த வெள்ளை அறிக்கையிலும் பாபரி பள்ளிவாசலை "சர்ச்சைக்குரிய கட்டடம்" என்றே குறிப்பிட்டது.

இது பார்வையிலிருந்து தவறிவிட்ட தவறு என்று எடுத்துக் கொள்வதற்கில்லை. உண்மையில் இது RSS, BJP முதலான இயக்கங்களின் சொற் களைப் பிரயோகித்து, அவர்களின் பிரச்சாரத்தை நியாயப்படுத்துவதேயாகும். இதே சொற்களைத் தான் பிஜேபி தனது வெள்ளை அறிக்கையிலும் பயன்படுத்தியுள்ளது.



*1992*ல் சங்கப் பரிவாரத்தின் தலைவர்கள் அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் உத்தரவுகளை மீறிடவும், அவர்கள் விருப்பம்போல் நடந்திடவும் அனுமதிக்கப்பட்டார்கள். இது அவர்களுக்கு டிசம்பர் *6, 1992*ல் எந்தத் தயக்கமுமின்றி தங்கள் திட்டங்களை அரங்கேற்றிடும் நெஞ்சுரத்தைத் தந்தது.

டிசம்பர் *6, 1992*லும் அதுவரைக்கும் காங்கிரஸ் அரசும், இதர அரசியல் கட்சிகளும் நடந்துகொண்டதைப் பார்த்தால், எதிர்வரும் நாள்களில், நமது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஒரு பெரும் ஆபத்து காத்திருக்கின்றது என்பதை தெளிவாக உணரலாம்.

குடிமக்களாகிய நாம்தான் இந்தப் பேராபத்திலிருந்து நம் நாட்டைக் காப்பாற்றிட வேண்டும்.

**அரசு நடத்திய நாடகங்கள்**

பாபரி பள்ளிவாசல் இடிப்பின் பின்னணியில் இருந்த கல்யாண் சிங்குக்கு இந்தியச் சட்டங்கள் தந்த அதிகப்பட்சத் தண்டனை ஒரு நாள் சிறைவாசம்!

பள்ளிவாசல் இடிக்கப்பட்டதும் நடந்தேறிய நாடகங்கள் பட்டியலில் முதலிடம் பெறுவது அத்வானியின் ராஜினாமா. பள்ளிவாசல் இடிக்கப்பட்டதற்கு எதிராக பாராளுமன்றத்தில் வாஜ்பேயி பேசினார்.

முஸ்லிம்களிடம் இரட்டை முகம் காட்டியும் ஜெயிக்க முடிகிறது என்பதுதான் பரிதாபம்.

இருந்த இடத்திலேயே திரும்பவும் பள்ளிவாசல் கட்டப்படுவதற்கு ஆதரவாக பொதுக் கருத்தை திரட்டுவது முஸ்லிம்களின் முக்கியமான வேலையாகும். பள்ளிவாசல் சாய்க்கப்பட்டதும் "அதே இடத்தில் பள்ளிவாசல் கட்டித் தரப்படும்" என்று இந்திய அரசு முஸ்லிம்களுக்கு வாக்களித்தது.

அரசாங்கத்தின் வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையை முஸ்லிம்களும் நாட்டு மக்களும் என்றோ இழந்து விட்டார்கள். இறை வழிகாட்டுதலின் பக்கம் மீள்வது மட்டுமே முஸ்லிம்களை இதுபோன்ற இழிவுகளிலிருந்து விடுவிக்கும்.

பா.ஜ.க. தலைவரான கே. எல். ஷர்மா, "ராமர் கோயில் கட்டுவதற்குச் சாதகமாக கோர்ட் தீர்ப்பு அமையவில்லையென்றால் தனிச்சட்டம் இயற்றியாவது கோயில் கட்டியே தீருவோம்" என்று கூறியிருக்கிறார்.

பா.ஜ.க.வின் பிற தலைவர்களான அத்வானியும் வாஜ்பேயியும் வேறொரு குரலில் பேசி வருகின்றனர். இவர்கள் போடும் கபட வேடம் முஸ்லிம்களை முட்டாளாக்க முயல்கிறது.

ஜனாதிபதி இந்த விவகாரத்தில் தலையிட்டு பள்ளிவாசலைத் திரும்பவும் அதே இடத்தில் கட்டுவது குறித்த அரசின் நிலையைத் தெளிவாக்க வேண்டும். அல்லது முஸ்லிம்களிடம் பள்ளி வாசல் நிலத்தை ஒப்படைக்க வேண்டும்.

சென்ற ஆண்டு ஜோதிபாசு தலைமையி லான மேற்கு வங்க அரசு பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்திலேயே மீண்டும் கட்டப்பட வேண்டுமென்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது.

பாபரி பள்ளிவாசல் திரும்பவும் அதே இடத்தில் கட்டித்தரப்பட வேண்டுமென்று கேட்பதுடன் முஸ்லிமின் பணி நிறைவு பெறுவ தில்லை. அதற்கு ஆதரவாக மக்கள் கருத்தைத் திரட்டுவது அவசியமாகிறது.

இந்துத்துவா ஆட்சி முறை சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு பெரும் பான்மைப் பயங்கரவாதத்தை ஆயுதமாக்க முனைகிறது.

**பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்தில் கோயில் இருந்ததா? வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வு என்ன சொல்லுகின்றது?**

மே 13, 1991 அன்று வரலாற்று ஆய்வாளர்கள் இந்த நாட்டு மக்களின் முன்னால் சமர்ப்பித்த ஆய்வறிக்கை இது இந்நாளில் இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கிடைத்த எல்லா ஆவணங்களையும் நாங்கள் ஆய்வு செய்த பின்னர் நாங்கள் கண்டெடுத்த ஆராய்ச்சி முடிவுகள் பின் வருமாறு:

1) 16ம் நூற்றாண்டுக்கு முன்னரோ அல்லது 18ம் நூற்றாண்டுக்கு முன்னரோ அயோத்தியில் ராமர் பிறந்தார் என்பதற்காக அந்த இடத்திற்கு மேலும் கண்ணியம் கற்பிக்கப்படவில்லை. அப்படி கண்ணியம் கற்பிக்கப்பட்டதாக இன்று கூறப்படுவதற்கு (அன்று முதல் இன்று வரை) எந்த அத்தாட்சியும் இல்லை.

2) 1528-29ல் பாபரி பள்ளிவாசல் கட்டப் பட்டதற்கு முன்னால் அந்த இடத்தில் ராமர் கோயிலோ அல்லது வேறு கோயில்களோ இருந்தன என்று அனுமானிக்கக்கூட எந்தத் தடயமும் இல்லை. இந்த முடிவு தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும், இப்போது பாபரி மஸ்ஜிதில் இருக்கும் எழுத்துக்கள் ஆகியவற்றை துருவி, துருவி ஆராய்ந்து எடுத்ததாகும்.

3) பாபரி பள்ளிவாசல் ராமர் பிறந்த இடத்தைப் பிடித்துக்கொண்டது என்ற கதை 18ம் நூற்றாண்டு வரை எழவில்லை. பள்ளிவாசல் கட்ட கோயில் இடிக்கப்பட்டது என்பது 19ம் நூற்றாண்டு வரை பேசப்படவில்லை. 19ம் நூற்றாண்டில் இது சொல்லப்பட்டபோது இதை யாரும் நம்பவில்லை.

4) ராமர் பிறந்த இடம், சீதாவின் 'ரசோய்' ஆகிய இடங்களில் இருந்த கோயில் இடிக்கப் பட்டது என்ற கதை முழு அளவில் 1850ல் தான் - கட்டவிழ்த்துவிடப்பட்டது. இதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அன்று முதல் நமக்குக் கிடைப்பதெல்லாம் கற்பனை செய்யப்பட்ட வரலாறுதான். இதை மத நம்பிக்கை என்று சொல்லிவிடுகின்றார்கள்.

விஷ்வ ஹிந்து பரிஷத் தருகின்ற முற்றிலும் பொய்யான அத்தாட்சிகளின் அடிப்படையில் இந்த நாட்டின் தலைவிதியையும் இந்த நாட்டின் கீர்த்தியையும் குலைக்க வேண்டுமா என்பதை இந்த நாட்டு மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

வரலாற்று வல்லுநர்கள் என்ற அடிப்படையில் இன்னொன்றையும் சுட்டிக்காட்டுவது எங்கள் கடமை. இந்த உலகிலுள்ள எந்தப் பண்பட்ட நாடும் 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஒரு கட்டடத்தை இடிக்கவோ, உருக்குலைக்கவோ அனுமதிக்காது.

1891ன் எ.ஃப்புஹ்ரர் (A.Fuhrer) என்ற வரலாற்று வல்லுநர் என்ற வடமேற்கு பகுதிகளிலுள்ள தொல்பொருள்களின் பட்டியல் ஒன்றை அதில் அவர் பாபரி மஸ்ஜிதை புகழ்மிக்க வரலாற்றுச் சின்னங்களுள் ஒன்றாகவே குறிப்பிட்டிருந்தார்.

(பார்க்க: List of Antiquities and Inscription on the North-West Province and oudh 1891) pages 296, 297)

இதில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்:

பாபரி மஸ்ஜித் என்ற புராதன சின்னம், தனியார் அமைப்புக்களிடமும், தனி மனிதர்களி டமும் இருந்தாலும் அது மேலும் சேதப்பட்டு விடாமல் பாதுகாப்பது முடியும். இது அவசியம் நிறைவேற்றிட வேண்டிய ஒரு வரலாற்றுப் பணியாகும். இதில் பின்வரும் நடவடிக்கைகளை

மேற்கொள்ள பள்ளிவாசலைச் சுற்றி மண்டிக் கிடக்கும் புதர்களை அகற்றலாம். சுற்றியிருக்கும் கிணறுகளிலுள்ள தண்ணீரை இறைக்கலாம். இவை போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

இத்துணை வரலாற்றுச் சிறப்புமிக்க சிறந்த சின்னமாகப் பாபரி பள்ளிவாசல் இருப்பதால் இது பாதுகாக்கப்பட்ட புராதன சின்னங்களில் ஒன்றாக இருக்கின்றது. அது புராதன சின்னங் களின் பாதுகாப்பும் சட்டம் 1904 (இது 1958ல் மீண்டும் சட்டமாக இயற்றப்பட்டது. (A cient Monument Act 1904 (Relegistaded in 1958) இன் கீழ்வருகின்றது. 450 வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்டது மட்டுமின்றி இது ஷார்கி கட்ட டக்கலையின் மிக முக்கியமான மேற்கோளாகும். அது நமது தேசத்தின் பொதுவான பண்பாட்டுச் சின்னமாகும்.

இருக்கும் சட்டங்களின் அடிப்படையில் அரசு அதனை முழுமையாகக் காப்பாற்றியே ஆக வேண்டும்!

வரலாற்று உண்மைகளுக்கு நாம் கவனம் செலுத்துவோம் என்றால், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைக் காப்பாற்றுவதில் நமக்கு நாட்ட மிருந்தால், நாம் நமது சொந்த பண்பாட்டில் நம்பிக்கைக் கொண்டவர்களாக இருந்தால் நிச்சயமாக நாம் பாபரி பள்ளிவாசலைக் காப்பாற்றியே ஆக வேண்டும்.

நிச்சயமாக ஒரு நாடு அதன் புராதன சின்னங் களையும், பண்பாட்டுச் சின்னங்களையும் எப்படிப் பாதுகாக்கின்றது என்பதைக் கொண்டே அந்த நாடு கண்ணியப்படுத்தப்படுகின்றது.

இந்த அறிக்கையில் கையெழுத்திட்டவர்கள் :

1) பேராசிரியர் R.S. ஷர்மா, முன்னாள் தலைவர், இந்திய வரலாற்று ஆராய்ச்சி அவை (Chairman, Indian Council of Historical Research) மற்றும் பேராசிரியர், வரலாற்றுத்துறை, டெல்லி பல்கலைக்கழகம்.

2) பேராசிரியர் அக்தர் அலீ, முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர், அலகா முஸ்லிம் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய வரலாற்று காங்கிரஸின் தலைவர்.

3) பேராசிரியர் D.N. ஜா, பேராசிரியர், வரலாற்றுத்துறை, டெல்ல பல்கலைக்கழகம்.

4) பேராசிரியர் சுவராஜ் ஃபான், பேராசி ரியர், தொல்பொருள் துறை சமுதாயத்துறை, குருக்ஷேத்ரா பல்கலைக் கழகம்.

(Extracted from Historians Report to the Nation, presented of the go vernment of India, dated 13th May 1991)

நன்றி - Impact International, July 1998.

## அயோத்தியில் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கின்றது? அயோத்தியிலிருந்து நேரடி ரிப்போர்ட்

காலை 6.00 மணி. கதிரவனின் செங்கதிர்கள் தனது பயணத்தைத் துவக்கும் வேளை. பனி மூட்டம் விடைபெற்றுக் கொண்டிருந்தது.

லக்னோவில் மந்தமாக காலை நேரப் பணிகள் ஆரம்பமாயின. ‘சில்’லென்ற அந்த அதிகாலைப் பொழுதில் நாம் லக்னோ சென்றடைகிறோம்.

லக்ஷ்மணபுரி என்றழைக்கப்படும் லக்னோவின் அழகை ரசித்தபடியே காலைக் கடன்களை முடித்தோம்.

காலை 9.15 மணிக்கு பைஸாபாத் செல்லும் பேருந்தில் ஏறியமர்ந்தோம். வடநாட்டுப் பேருந்து களைச் சொல்லவும் வேண்டுமா? அவ்வளவு அழுக்கும், ஒழுங்கின்மையும். இடுப்பை ஒடித்துக் கையில் தருமளவுக்கு பேருந்தின் இருக்கைகள். நம்மூரில் ஓடும் தகர டப்பா பேருந்துகள் எவ்வளவோ மேல்!

ஒருவழியாக மதியம் 12.45 மணிக்கு பைஸா பாத் வந்தடைந்தோம். அங்கிருந்து 7 கி.மீ. தொலைவில் அயோத்தி உள்ளது. பேருந்து வசதி கிடையாது. ட்ரக்கில்தான் செல்ல வேண்டும்.

வந்தது ஒரு ட்ரக். ஏறியமர்ந்தோம். முன்பு வந்த பேருந்து எவ்வளவோ மேல் என்று இப்பொழுது தெரிந்தது. ஆடியசைந்து சென்ற ட்ரக் மதியம் 1.15 மணிக்கு அயோத்தி வந்தடைந்தது.

நேரே பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தை நோக்கி, இல்லை, முஸ்லிம்கள் நீதிமன்றங் களையும், அரசியல்வாதிகளையும் நம்பி நின்றதால் ராமர் கோயில் ஆக்கப்பட்டுவிட்ட இடத்தை நோக்கி நடந்தோம்.

மதியம் 1.15 மணிக்கு ராமர் கோயில் தரிசன நேரமில்லை என்று சொல்லிவிட்டார்கள். என்ன

செய்வது..?

நேரே ராமர் கோயில் கட்டுமானப் பணிகள் நடக்குமிடத்திற்குச் சென்றோம்.

பாபரி மஸ்ஜிதை இடித்த இடத்திலிருந்து நேர் தெற்கில் 2 கி.மீ. தொலைவில் கட்டுமானப் பணிகள் நடக்கும் பணிப்பட்டறை உள்ளது.

வேலைகள் பகிரங்கமாக நடக்கின்றன. சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அலை மோதுகின்றது.

ஏகத்துவ இசை நாதம் முழங்கிய இறைவனின் இல்லத்தில் ஷிர்க்கின் கொடிகள் படர்வதற்கு இங்குதான் தூண்கள் செதுக்கப்படுகின்றன. எத்தனை வேலைப்பாடுகள் மிக்க தூண்கள்!

ஒரு தூணைச் செய்வதற்கு எவ்வளவு சிரம மெடுத்துக் கொள்கின்றனர்! அவ்வளவு நுணுக்க மான வேலைகள் நடை பெறுகின்றன.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு பணிப் பட்டறைக்குள் நுழைந்தோம்.

பணிப்பட்டறையின் பொறுப்பாளரை அணுகி படமெடுக்க அனுமதி கேட்டோம். “தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள்” என்று அனுமதி தந்தார்.

அங்குள்ளவர்களிடம் மெல்லப் பேச்சு கொடுத்து விஷயங்களைச் சேகரித்தோம்.

அயோத்தியில் இப்பணி தொடங்கி 8 வருடங் களாகின்றனவாம். ராஜஸ்தானில் இப்பணியைத் தற்பொழுதுதான் துவங்கியுள்ளனராம். பணி நிறைவடைய இன்னும் 5,6 வருடங்கள் கூட ஆகுமாம்.

அவர்கள் வேலையில் காட்டிய கவனமும், அங்கு செய்யப்பட்டிருந்த விரிவான ஏற்பாடு களும், செதுக்கப்பட்டு அடுக்கி வைக்கப்பட் டுள்ள தூண்களும் நிச்சயம் அங்கு கோயில் கட்டப்படும் என்பதை பறைசாற்றின.

“இந்தத் தூணகளைக் கொண்டு போய் நிறுவுவது சிரமமான வேலைதான்” என்று அங்குள்ள ஒருவர் கூறினார்

அங்கு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டி ருந்த பணிகளனைத்தையும் நமது கேமரா உள்வாங்கிக் கொண்டது.

போதிய படங்கள் எடுத்த பின் அவ்விடத்தை விட்டகன்றோம். எதிரே தென்பட்டது ஒரு உண்டியல்.

ராமர் கோயில் கட்டுமானப் பணிகளுக்கு பொதுமக்களிடமிருந்து பணம் வசூல் செய்வதற்கு அந்த உண்டியலை வைத்துள்ளார்கள்.

அணி அணியாக வரும் சுற்றுலாப் பயணிகள் அந்த உண்டியலில் ரூபாய் நோட்டுகளைத் திணித்துக் கொண்டிருந்தார்கள்.

இதன் மூலம் ராமர் கோயில் கட்டும் தங்களது பணிகளில் மறைமுகமாக பொது மக்களையும் ஈடுபட வைத்துள்ளனர். தங்களது வேலைகளை வெகுஜன வேலையாக மாற்றுவதில் கைதேர்ந்த கில்லாடிகள் இவர்கள்.

‘காரியசாலா’ எனும் அந்தப் பணிப் பட்ட றையின் அருகிலேயே உள்ளது கரசேவகபுரம். அங்கும் சென்று படமெடுத்தோம்.

மாலை 3.15 மணியளவில் பாபரி மஸ்ஜித் இருந்த இடத்திற்குச் சென்றோம்.

கேமரா, டேப் ரிக்கார்டர் அனைத்துக்கும் தடை. கடுமையான கட்டுக்காவல் போட்டிருந் தார்கள். வலுவான தடுப்பரண்கள் அமைத்திருந் தார்கள். அந்த எல்லைக்குள் நுழைந்தது முதல் 4 இடங்களில் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்பட்டோம்.

பேனா, சீப்பு, பான், பீடி என்று எதற்கும் அனுமதியில்லை.

பாபரி மஸ்ஜிதின் மார்பிடத்தில் குழந்தை ராமரின் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதைக் கண்டவுடன் நமது மார்பில் ஈட்டியை வைத்துக் குத்தியது போலிருந்தது.

குழந்தை ராமர் இருக்கும் இடத்தைச் சுற்றிலும் சாக்குப் பைகளில் களிமண்ணை நிரப்பி மேடாக்கி அவைகளின் மீது காவித்துணியால் தற்காலிக கூரையை அமைத்துள்ளனர்.

வரிசையாகச் செல்லும் பக்தர்கள் அனை வரும் சாமிக்குக் காசு போடுகின்றனர். அங்கிருந்த பூசாரியிடம் மெல்ல அணுகி, “பாபரி மஸ்ஜிதின் நினைவுக் கற்கள் கிடைக்குமா?” என்று வினவினோம்.

“கிடைக்க வாய்ப்பில்லை” என்று கூறிய அந்தப் பூசாரி, அங்கு நின்றிருந்த காவலரிடம்

சொல்லி மஸ்ஜித் நின்ற இடத்திலுள்ள மண்ணும், கொஞ்சம் பிரசாதமும் தர ஏற்பாடு செய்தார்.

பாபரி மஸ்ஜித் இடத்தைச் சுற்றிலும் கட்டு மானப் பணிக்கான ஆயத்த வேலைகள் எதுவும் தெரியவில்லை.

ஆனால் அதற்கு சற்று வடக்கே, சுமார் 150 அடி தள்ளி செங்கல்லில் அடித்தளம் போட்டு தரைமட்டத்திற்கும் மேலாக எழுப்பியுள்ளனர்.

சற்று தொலைவில் பூமியிலிருந்து நீர் எடுப் பதற்கான போரிங் வேலைகள் நடந்துகொண்டி ருந்தன.

பாபரி மஸ்ஜிதைச் சுற்றியுள்ள இடம் இன்றும் கூட வனப்பகுதியாகத்தான் காட்சி யளிக்கின்றது.

அயோத்தி நகரமும் மிகவும் பழமையானதாக உள்ளது.

பழைய கட்டடங்கள், குரங்குகள், அகாராக்கள் (மடங்கள்), சன்னியாசிகள்.... என வைணவத் தலமாக உள்ளது.

பாபரி மஸ்ஜித் இடத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு ஜென்ம பூமி சேவா டிரஸ்ட் அலுவலகத் திற்கு வந்தோம். அங்கு நன்கொடை அளித்தால் கோயில் சம்பந்தப்பட்ட புத்தகம் ஒன்று தருகிறார்கள். அந்த அலுவலகத்தைப் படமும் எடுத்துக்கொண்டோம்.

அங்கிருந்தவர்களிடம், “எப்போது ஆலயம் நிறுவப்படும்?” என்று கேட்டோம்.

“ஜெயலலிதா அம்மையார் குழப்புகிறாரே? என்ன செய்வது? உரிய தருணத்திற்காகக் காத்திருக்கிறோம்” என்றனர்.

பாபரி மஸ்ஜித் இடத்தின் அனுமதிக்கப் பட்ட வெளிப்புறத்திலும் படம் எடுக்க அனுமதிக்காததால் கொஞ்சம் தள்ளிப்போய் படம் எடுத்தோம்.

பின்னர் கனத்த மனதுடன் அவ்விடத்தை விட்டு அகன்றோம். நேராக அயோத்தி ரயில் நிலையத்திற்கு பின்புறமுள்ள சிறிய மஸ்ஜிதிற்கு சென்றோம். ளுஹரும், அஸரும் தொழுதோம். அந்த மஸ்ஜிதின் பெயர் “கரியானா”

1992 டிசம்பர் 6 அன்று கரசேவகர்கள் பாபரி பள்ளியை இடித்த பொழுது இந்தப் பள்ளியையும் விட்டு வைக்கவில்லை. இந்தப் பள்ளியின் மினாராக்களையும் சிதைத்தனர்.

பின்னர் அரசு பாதி செலவும், முஸ்லிம்கள் பாதி செலவும் என்று அந்த மினாராக்கள் சீரமைக்கப்பட்டனவாம்.

மினாராக்கள் இடிக்கப்பட்ட சமயத்தில் அம்மஸ்ஜிதோடு ஒட்டியுள்ள வீடு ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டு சூறையாடப்பட்டதாம்.

மூன்று மாதங்கள் வரை அவர்கள் வீடு திரும்ப முடியவில்லையாம்.

“கர்நாடகத்திலிருந்து வந்த கரசேவகர்கள்தாம் இக்கொடுமைகளைச் செய்தார்கள்” என்று அங்குள்ள முஸ்லிம் பெண்மணிகள் கூறினர்.

டிசம்பர் 6 அன்று அயோத்தியில் நிறைய முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர்; நிறைய மஸ்ஜித்கள் களங்கப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இன்று இஸ்லாத்தின் அடையாளம் அங்கு மங்கிப்போய் உள்ளது. மாலை 5.30 மணியளவில் அயோத்தியிலிருந்து புறப்பட்டோம்.


400 வருட பாரம்பரியமிக்க புனித இறை யில்லமாம் பாபரி மஸ்ஜிதின் மார்பிடத்தில் ஷிர்க்கின் சின்னமான குழந்தை ராமரைப் பார்த்துவிட்டு, நெஞ்சில் ஈரத்தைச் சுமந்து கொண்டு அங்கிருந்து பைஸாபாத் நகரம் வந்தோம்.

மாவட்டத்தின் தலைநகரம் அது. இங்கு நிறைய மஸ்ஜித்கள் உள்ளன. நிறைய முஸ்லிம் களும் உள்ளனர்.

இங்குதான் பா.ஜ.க. செயலாளர் ஹஸன் ஹைதர் என்பவர் இருந்தார். இவர் கரசேவை யிலும் ஈடுபட்டார். ஆனால் கரசேவகர்களால் இவரும் கொல்லப்பட்டார்.

சோகங்கள் புடைசூழ சொந்த ஊர் திரும்பி னோம். வேறு ஒரு பூமிக்கு போய் விட்டு வந்ததைப் போல ஒரு பிரமை. அது இன்னும் அகலவில்லை.

மார்க்கத்தின் மார்பிடத்தில் இணை வைப்பின் அடையாளத்தைக் கண்ட் காட்சி மட்டும் இதயத்தின் ஒரு ஓரத்தில் கீறலாய் உறுத்திக் கொண்டே இருக்கிறது.




1, Head Muharrir, verify that the report has been registered according to the statement of the Sub-Inspector-Read. It is correct. - Sd/ (Head Muharrir)

**அரசாங்கம் வேண்டுமென்றே உபசரித்த கிரிமினல் குற்றங்கள்**

*1) பாபரி பள்ளிவாசலுக்குள் சிலைகளை வைத்தது கிரிமினல் குற்றம் என்றது காங்கிரஸ் அரசு. முதல் தகவல் அறிக்கையும்* (FIR) *தாக்கல் செய்தது. ஆனால் கடைசி வரை இந்தச் சிலைகளை அகற்ற விரும்பவில்லை.*

*2) பள்ளிவாசலை இடித்தது கிரிமினல் குற்றம் என்றது. அதே இடத்தில் கோயில் கட்ட அறக்கட்டளைகளை அமைக்க ஆவன செய்து வருகின்றது.*

*"கோயில் கட்டும் பணி நான்கு இடங்களில் நடைபெறுகின்றன. இராஜஸ்தானில் மூன்று இடங்களிலும், பாபரி பள்ளிவாசலுக்கு பக்கத்தில் ஒரு இடத்திலும் நடை பெறுகின்றது. நாங்கள் இன்னும் இரண்டு வருடத்திற்குள் இராமர் கோயில் கட்ட ஆரம்பித்து விடுவோம்.'*

*- விஷ்வ ஹிந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கல்,* The Week, June 7, 1998.

**பிற்சேர்க்கை-I**

**TRANSLATION OF THE FIRST INFORMATION REPORT**

Copy of the Report of the Station Officer (S.O.) dated 23rd December, 1949 u/s 147/295 /448 Taazirale Hind (I.P.C.) registered by Pandit Shri Ram Deo Dubey, Senior Sub-Inspector Incharge,Thana (PS), Aydohya, Faizabad.

Against

(1) Abhey Ram Das (2) Ram Shukla Das (3) Sudarshan Das R/ o Ayodhya, Faizabad and other 50 to 60 persons names and addresses not known of, Thana Ayothya.

Verbal

According to the information of Mata Prasad, Constable No. 7:

That at about 9.00 in the morning when I reached Janmabhoomi I came to know that a group of 50 to 60 persons have entered the Babri Masjid by breaking open the locks of the compound and also by scaling the walls and staircases and placed an idol of Shri Bhagwan Ram in it and scribbled sketches of Sita, Ramji etc. in saf- fron and yellow colours on the inner and outer walls of it.

That Hansraj, Constable no. 70 stopped them but they did not care. The PAC guards present there were called for help. But by then people have already entered the mosque. Senior district officials visited the site and ran into action. Later on, a mob of 5 to 6 thousand people gathered and tried to enter into the mosque raising religious slogans and kirtans. But due to proper arrangement nothing happened. Committors of crime (Mujriman-e- waqe) Ram Das, Shukla Das, Sudarshan Das with 50 to 60 persons names not known have deserated the mosque by tresspassing the mosque through rioting and placing idol in it. Officers on duty and many other people have seen it. So the case has been checked. It is found correct.

**பிற்சேர்க்கை-II**

**அயோத்தியில் அடாவடி (காலக்கிரமமாக)**

மே 1989 : அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு ரூ. 25 கோடி வசூலிக்கவேண்டும் என்று விஷ்வ ஹிந்து பரிஷத் தீர்மானிக்கிறது.

நவம்பர் 1989 : விசுவ ஹிந்து பரிஷத் கோயிலுக்கான ஷிலன்யாஸை (செங்கல் பூஜை) நடத்தியது.

செப்டம்பர் 1990 : சோம்னாத்திலிருந்து அயோத்திக்கு ரத யாத்திரையாக புறப்படுகிறார் எல்.கே. அத்வானி.

அக்டோபர் 1990 : ராமஜன்ம பூமியில் கரசேவை நடத்தப்பட்டது என்று விஷ்வ ஹிந்து பரிஷத் அறிவித்தது. இந்துத்துவா அடிமைகள் மீது போலீஸ் துப்பாக்கிச் சூடு நடத்தியது.

நவம்பர் 1990 : பாபரி பள்ளிவாசலை இந்துத்துவா கைக்கூலிகள் முற்றுகையிடுகிறார்கள். போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் சிலர் இறக்கிறார்கள்.

ஜூலை 1991 : ஃபாசிஸத்தின் அடிவருடிகள் பாபரி பள்ளிவாசலைச் சேதப்படுத்தி, அதன் மினாராக்களில் காவிக் கொடியைப் பறக்க விடுகிறார்கள்.

ஜூலை 1991 : பாபரி பள்ளிவாசலின் அருகே மூன்றடி உயரக் கட்டுமானம் எழுகிறது. நிரந்தரக் கட்டடப்பணிக்கு முன்னோட்டமாக இது அமைந்தது. கோயில் கட்டும் பணியை நிறுத்தும்படி உச்சநீதிமன்றம் உத்தரப் பிரதேச அரசைக் கேட்டுக் கொள்கிறது.

டிசம்பர் 6, 1992 : ஃபாசிஸ்டுகளின் கைத்தடிகள் பாபரி பள்ளிவாசலை இடித்து தரைமட்டமாக்குகிறார்கள்.

ஜனவரி 1993 : அலகாபாத் உயர்நீதி மன்றம் பாபரி பள்ளிவாசல் இடிபாடுகளின் மீது கட்டப்பட்டிருக்கும் 'மினி' ராமர் கோயிலை பக்தர்கள் தரிசிக்க (தர்ஷன்) அனுமதிக்கிறது.

பிப்ரவரி 1997 : அரசு கையகப்படுத்திய பாபரி பள்ளிவாசல் நிலத்தை மேற்பார்வையிடும் பொறுப்பேற்றிருந்த அமிதாப் ஸ்ரீவத்ஸவர் (பைஸாபாத்காரர்) கொல்லப்படுகிறார்.

மே 1998 : ராமர் கோயில் கட்டப்படும் அபாயம் பற்றி தேசியத் தலைவர்கள் அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

**பிற்சேர்க்கை -III**

**ராமர் கோயில் மாதிரியுடன் வைக்கப்பட்டுள்ள விவரப்பலகையில் காணப்பட்டவை**

**உத்தேச ராமஜென்ம பூமி கோயில் விவரங்கள் :**


உயரம் : 128 அடி

நீளம் : 268.5 அடி

அகலம் : 140 அடி

நிறுவப்படவுள்ள தூண்கள் : 212

தூண் உயரம் : 16 1/2 அடி



ஒவ்வொரு தூணிலும் 16 சிற்பங்கள். ஒரு சிற்பத்தை செதுக்க மூன்று மாதங்கள் பிடிக்கின்றன.

முதல் படிக்கட்டு : 8 அடி உயரம், 10 அடி அகலம்

அடுத்த படிக்கட்டு : 4 அடி, 9 இஞ்ச்

இதன் மேல் தூண்களும், அதன் மேல் 18 அடி உயரத்தில் முதல் தளமும், 15 அடி, 9 இஞ்ச் உயரத்தில் இரண்டாம் தளமும் இடம்பெறும். அதன்மேல் 16 அடி, 3 இஞ்ச் உயரத்தில் பெட்டி வடிவ அமைப்பு. கர்ப்பக்கிருஹத்தின் மேல் 65 அடி, 3 இஞ்ச் உயரத்தில் ஷிகர் எனப்படும். கோபுரம் இதன் உச்சியில் காவிக்கொடி.

**கோயில் அமைப்பு முறை**

முன்பாகம் பிரதான வாயில் (சிங்த்வார்), நாட்டிய மண்டபம் (நிருத்ய மண்டபம்), ரங் மண்டபம், கர்ப்பக்கிருஹம்.

**பிற்சேர்க்கை** - IV

**தமிழகத்தில் இடிக்கப்பட்ட, சேதப்படுத்தப்பட்ட பள்ளிவாசல்கள், தர்ஹாக்கள், நினைவிடங்கள்!**

1) மஸ்ஜித் அந்நூர், திருவையாறு.

2) காயிதே மில்லத் நினைவு மஸ்ஜித், குரோம்பேட்டை

3) ஆபில் காபில் தர்ஹா, இராமேஸ்வரம்.

4) சிந்தாதிரிப்பேட்டை மஸ்ஜித், சென்னை.

5) நெய்க்காரத் தர்ஹா, ஓடைக்காரத் தெரு, உத்தமபுரம், கம்பம்.

6) குமாரபுரம் காட்டுபாவா மலைப்பள்ளி, தக்கலை.

7) மீனாட்சிபுரம் மஸ்ஜித், நாகர்கோவில்.

8) தாமரைக்குளம் மஸ்ஜித், அகஸ்தீஸ்வரம் வட்டம்.

9) மதரஸத்துல் இலாஹிய்யா ஆரம்பப் பாடசாலை, நாகப்பட்டினம்.

10) ஹமீதிய்யா மஸ்ஜித், காயல்பட்டணம்.

11) உடன்குடி நினைவிடம்.

12) அஹ்லெ சுன்னத் வல் ஜமாஅத் பள்ளி வாசல், வடகோவை.

13) நூர்ஷா ஒலியுல்லாஹ் தர்ஹா, இடையார் பாளையம்.

14) ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸி சுன்னத்வல் ஜமஅத் பள்ளி, மின் நகர், பொள்ளாச்சி.

15) மஸ்ஜிதே நூர், வந்தவாசி.

'தமிழகத்தில் இடிக்கப்பட்ட பள்ளி வாசல்கள்' என்ற தலைப்பில் அட்டைப்படக் கட்டுரை ஒன்று விடியல் ஆகஸ்டு 1996 இதழில் வெளிவந்துள்ளது. இது பற்றிய விரிவான செய்தியை அறிய விரும்புவோர் அவ்விதழைப் படிக்கவும்.

2001 ஆம் ஆண்டு பாசிசபரிவாரம் ஆட்சியைப் பிடித்துக் கொண்டது. அது பாரதீய ஜனதா கட்சியின் தலையிலான NIA - National Democratic Alliacne தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற பெயரில் அறியப்பட்டது. அரசு தந்த அழுத் தங்களால் முக்கியக் குற்றவாளிகளான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி, பால் தாக்கரே இன்னும் பலர் மீதான வழக்குகளை கைவிட்டுவிட்டது.

2002 : பிரதம அமைச்சர் வாஜ்பேயி ஒரு சிறப்புப் பிரிவை தனது அலுவலகத்தில் ஏற்பாடு செய்கின்றார். அதற்கு "அயோத்யா" எனப் பெயர் வைக்கின்றார். அதற்கு சத்ருகன் சிங் என்ற மூத்த அதிகாரியைத் தலைவராக நியமிக்கின்றார். இந்து தலைவர்கள், முஸ்லிம் தலைவர்கள் இவர் களிடையே பேச்சுவார்த்தை நடத்தி, கோயில் கட்டிட, (பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில்) தேவையான ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும்.

மார்ச் 15,2002 விஷ்வ ஹிந்து பரீஷத் எனும் இந்துத்துவ தீவிரவாத அமைப்பு இராமர் கோயில் கட்ட அடிக்கல் நாட்டிடப் போவதாக அறிவிக் கின்றது. நூற்றுக்கணக்கான வன்முறையாளர்கள் ஒன்று திரண்டு வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றார்கள்.

அலகாபாத் உயர்நீதிமன்றம் "இந்திய தொல்பொருள் ஆய்வுக் கழகத்திற்கு ஆணை இடுகின்றது. பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கீழ் ஒரு கோயில் இருந்ததா? என ஆய்வு செய்திட

2003 இந்திய தொல்பொருள் ஆய்வுக் கழகம் தனது ஆய்வறிக்கையை சமர்ப்பிக்கின்றது. தொல்பொருள் ஆய்வு அறிஞர்களும், வரலாற்று ஆய்வாளர்களும் அந்த அறிக்கை பொய்

என்பதை நிரூபிக்கின்றார். பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் 10 ஆம் நூற்றாண்டு கோயில் இருந்தது என்பதற்கு எந்த நிரூபணமும் இல்லை என்பதை நிருப்பிக்கின்றார்கள்.

CBI மத்தியப் புலனாய்வு கழகத்தின் சிறப்பு நீதிமன்றம், ஏழு இந்துத்துவா தலைவர்கள், விசாரணையை எதிர்கொண்டே ஆக வேண்டும் என அறிவிக்கின்றது.

*2004 :* மசூதி இடிக்கப்பட்ட விவகாரத்தில் அத்வானி விடுவிக்கப்பட்ட முந்தைய உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

*2005 :* லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்படும் ஆறு பேர் அயோத்தியில் சர்ச்சைக்குரிய ராம ஜென்மபூமி வளாகத்தில் தாக்குதல் நடத்தினர்.

*2009 :* லிபர்ஹான் கமிஷன் தனது விசாரணையைத் தொடங்கி 17 ஆண்டு களுக்குப் பிறகு அதன் அறிக்கையை சமர்ப்பித்தது.

அடல் பிஹாரி வாஜ்பேயி, லால் கிருஷ்ண அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, கல்யாண் சிங், பிரமோத் மகாஜன், உமாபாரதி, விஜயராஜே சிந்தியா போன்ற பல பாஜக தலைவர்களையும், விஎச்பி தலைவர்களான கிரிராஜ் கிஷோர், அசோக் சிங்கால் மற்றும் சிவசேனா தலைவர் பால்தாக்கரே, முன்னாள் ஆர்எஸ்எஸ் தலைவர் கே.என். கோவிந்தாச்சாரியா போன்றோர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றவாளிகள் என லிபர்ஹான் கமிஷன் கண்டறிந்தது.

*2010 :* பாபர் மசூதி இருந்த அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தை மூன்றாகப் பிரித்து மூன்றில் இரண்டு பங்கு, இரண்டு "இந்து" வாதிகளுக்கு (Plaintiff) பகிர்ந்து வழங்கப்படும். மூன்றில் ஒரு பங்கு சன்னி முஸ்லிம் வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்படும் என அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

*2011 :* உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து இந்து மற்றும் முஸ்லீம் வாதிகள் (Plaintiffs) மேல்முறையீடு செய்ததையடுத்து உச்சநீதிமன்றம் அந்த தீர்ப்பை இடைநிறுத்தியது.

*2016 :* பாபர் மசூதி இடத்தில், ராமர் கோயில் கட்டக் கோரி பாஜக எம்.பி.சுப்பிரமணியன் சுவாமி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அப்போது பாஜகவின் நரேந்திர மோடிதான் பிரதமர்.

அதே ஆண்டில் பாபர் மசூதி வழக்கின் மூத்த வழக்கறிஞரான முகமது ஹாஷிம் அன்சாரி 95 வயதில் காலமானார்.

*2017 :* இந்து யுவ வாஹினியின் நிறுவனர் ஆதித்யநாத் உத்தரப் பிரதேசத்தின் முதலமைச்சராக பதவியேற்றார்.

உச்சநீதிமன்றம் பாபர் மசூதி இடிப்பு வழக்கில் எல்.கே.அத்வானி, முரளி மனோகர் ஜோஷி மற்றும் மத்திய அமைச்சர் உமாபாரதி, மற்ற பாஜக உறுப்பினர்கள் மற்றும் கரசேவகர்கள் குற்றச் சதிக்கான குற்றச்சாட்டுகளை எதிர் கொள்ள நேரிடும் என தீர்ப்பளித்தது. கல்யாண் சிங் ராஜஸ்தான் கவர்னராக இருந்ததால் அவர் இந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார். சிவ சேனா தலைவர் பால் தாக்கரே உட்பட உண்மையான குற்றவாளிகள் பலர் விசாரணையின் போது இறந்துவிட்டனர்.

லக்னோவில் நடைபெறும் இந்த வழக்கு விசாரணையை இரண்டு ஆண்டுகளில் முடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. சிறப்பு சிபிஐ நீதிமன்றம் பாஜக தலைவர்கள் மீது குற்றச் சாட்டுகளை முன்வைத்தது ஆனால் அவர்களுக்கு ஜாமீன் வழங்கியது.

*2018 :* உரிமையியல் சர்ச்சையில் சிவில் மேல்முறையீடுகளை உச்சநீதிமன்றம் விசாரிக்கத் தொடங்கியது. வழக்கில் தரப்பினராக தலையிடக் கோரிய சுப்ரமணியன் சுவாமி உட்பட அனைவரின் இடைக்கால மனுக்களையும் நிராகரித்தது. மேலும் இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு அனுப்ப மறுத்தது.

*2019 :* தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையில் நீதிபதிகள் எஸ்.ஏ.பாப்டே, என்.வி.ரமணா, யு.யு. லலித் மற்றும் டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் அடங்கிய ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு இந்த வழக்கை விசாரித்தது.

நீதிபதி யு.யு.லலித் தன்னை இதிலிருந்து விலக்கிக் கொள்கிறார். தலைமை நீதிபதி கோகோய் மற்றும் நீதிபதிகள் எஸ்.ஏ.பாப்டே, டி.ஒய்.சந்திரசூட், அசோக் பூஷன் மற்றும் எஸ்.ஏ.நசீர் ஆகியோர் அடங்கிய புதிய அமர்வு இந்த வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்டனர்.

பாபர் மசூதி இடிப்பு வழக்கின் விசாரணையை நடத்தி வரும் சிறப்பு நீதிபதி, விசாரணையை முடிக்க மேலும் 6 மாதங்கள் அவகாசம் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு

*தாக்கல் செய்தார்.*

*அக்டோபர் 14, 2019:* இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் உடனடி தீர்ப்பைக் கருத்தில் கொண்டு அயோத்தி மாவட்ட நிர்வாகம் டிசம்பர் 10ம் தேதி வரை 144 தடை விதித்தது.

*அக்டோபர் 16, 2019:* விசாரணையின் கடைசி நாளில் ஆச்சரியமாக, உரிமையியல் தகராறு வழக்கின் முதன்மை முஸ்லீம் வழக்குரைஞர், இந்த விவகாரத்தில் மேல்முறையீடுகளை கைவிடத் தயாராக இருப்பதாக உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். மற்றும் நிலத்தின் மீதான அதன் உரிமைகோரல்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பாபர் மசூதி, 1992ல் இந்துத்துவ ஆர்வலர்கள் மற்றும் தலைவர்களால் இடிக்கப்படுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்தது.

இந்தியாவில் உள்ள மற்ற அனைத்து வழிபாட்டுத் தலங்களும் இதேபோன்ற ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கப்படும் என்று மத்திய அரசு உத்தரவாதம் அளிக்கத் தயாராக இருந்தால் மேல்முறையீடை கைவிடுவதாக கூறுகிறார். மற்ற முஸ்லீம் வாதிகள் (Plaintiffs) இந்தச் சலுகையில் இருந்து தங்களைப் பிரித்துக் கொள்கிறார்கள். இது எந்த வகையிலும் முக்கிய இந்து வாதியால் (Plaintiff) ஏற்றுக்கொள்ளப்படவில்லை, அதாவது VHP யால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

*நவம்பர் 8, 2019 :* வழக்கின் தீர்ப்பானது நவம்பர் 9, 2019 அன்று காலை 10:30 மணிக்கு வழங்கப்படும் என்று உச்சநீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார்.

*நவம்பர் 9, 2019:* பாபர் மசூதி இருந்த சர்ச்சைக்குரிய நிலம் இந்து தரப்பினருக்கு வழங்கப்படும் என்று கூறிய உச்ச நீதிமன்றம், முஸ்லீம் சன்னி வக்பு வாரியத்திற்கு அயோத்தியில் "முக்கிய" இடத்தில் ஐந்து ஏக்கர் நிலம் வழங்கப்படும் எனவும் அயோத்தி உரிமையியல் சர்ச்சை வழக்கில் "ஒருமித்த" தீர்ப்பை அறிவித்தது.

*மே 8, 2020 :* இடிப்பு வழக்கின் விசாரணையை முடிப்பதற்கான கால அவகாசத்தை உச்சநீதிமன்றம் மூன்று மாதங்களுக்கு நீட்டித்து. ஆகஸ்ட் 31ம் தேதிக்குள் தீர்ப்பை வழங்க வேண்டும் என்று கூறியது. ஆகஸ்ட் மாதத்தில் இது ஒரு மாதம் நீட்டிக்கப்படுகிறது.

*ஆகஸ்ட் 5, 2020 :* பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோயிலின் பூமி பூஜை நடத்தப்பட்டது. இந்த விழா பல செய்தி சேனல்களில் ஒளிபரப்பப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட பாஜக தலைவர்கள் யாரும் இதில் கலந்து கொள்ளவில்லை.

## முஸ்லிமின் நிலைப்பாடு

**அல்லாஹ்வின் ஆலயத்தை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. அல்லாஹ்வின் இல்லத்தின் மீது யாருக்கும் உரிமை இல்லை. எந்த முஸ்லிமும் அதனை யாருக்கும் தர இயலாது. முறைகேடாகப் பிடுங்கப்பட்ட வஸ்துவை முறையாக மீட்டெடுப்பதுதான் முஸ்லிமின் கடமை.**

**பாபரி பள்ளிவாசல் திரும்பவும் அதே இடத்தில் கட்டப்படுவதுதான் பள்ளிவாசல் இடிப்புக்கான உண்மையான பரிகாரமாகும். மீண்டும் அதே இடத்தில் பள்ளிவாசலை நிர்மாணிப்பது மட்டுமே நியாயமான தீர்வாக இருக்க இயலும்.**

*செப்டம்பர் 16, 2020:* 1992ம் ஆண்டு பாபர் மசூதி இடிப்பு வழக்கின் தீர்ப்பு செப்டம்பர் 30ஆம் தேதி வழங்கப்படும் என லக்னோவில் உள்ள சிபிஐ சிறப்பு நீதிமன்றம் தெரிவித்தது.

*செப்டம்பர் 26, 2020 :* குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான உமாபாரதி, பாஜக தலைவர் ஜே.பி.நட்டாவுக்கு, குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஜாமீன் கோரமாட்டேன் என்று கடிதம் எழுதினார்.

*செப்டம்பர் 30, 2020:* முன்னாள் துணைப் பிரதமர் எல்.கே அத்வானி உட்பட முன்னாள் மத்திய அமைச்சர்கள் முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி, உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் என பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 32 பேரையும் சிபிஐ சிறப்பு நீதிமன்றம் விடுவித்தது.

# பாபரி மஸ்ஜித்

## என்றும் நம் நினைவில்

### LETS WE FORGET

நவம்பர்–9,2019 அன்று உச்ச நீதிமன்றம், பாபரி மஸ்ஜித் வழக்கில் தீர்ப்பு ஒன்றை வழங்கியது. அதாவது உச்ச நீதிமன்றம் தரத்தில் தரையைத் தொட்டது. அன்று அது வழங்கிய தீர்ப்புப் பல்வேறு வினாக்களை எழுப்பியது வழக்கறிஞர்கள் வட்டத்தில்.

'ஓர் இடம் யாருக்குச் சொந்தம் என்ற கேள்விக்கு விடை கண்டிட வேண்டிய நீதிமன்றம், அதை விட்டுவிட்டது. மாறாக தனக்கு அதிகார மில்லாத, தனக்கு உரிமை இல்லாத, நீதியின் எல்லைக்கு அப்பாற் சென்று, ஒரு தீர்ப்பை வழங்கியது. அது செல்லாது.

அந்த இடத்தில் வழக்கில் சற்றும் சம்மந் தப் படாத ஓர் அறக்கட்டளையை ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறியதும், அதன்மூலம் ஒரு கோயில் கட்ட வேண்டும் எனக் கூறியதும் அப்பட்டமான அநீதி'. (Front Line, Dec-6,2019)


ஹிட்லரையும் – முசோலினியையும் பின்னுக் குத் தள்ளிய, ஒரு பாசிசம், நாசிசம். மேலே நாம் குறிப்பிட்ட பத்திரிகையில் கட்டுரை எழுதிய வரலாற்று ஆய்வாளர், மூத்த வழக்கறிஞர், பத்திரிகையாளர் A.G. நூரானி நீதித்துறையைப் பற்றி ஒரு தகவலைத் தருகின்றார். அது இந்தியா வின் இருண்ட காலம் என வரலாற்றில் நிரந்தர மாகப் பதிந்துவிட்ட நெருக்கடிக்காலத்தோடு தொடர்புடையது.

#### நெருக்கடி காலம்

நெருக்கடி காலத்தில் 1975/76 இல் இந்திரா காந்தி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நாள். நாட்டுக்கே நெருக்கடி வந்துவிட்டதாக அறிவித்தார்கள்.

மனித உரிமைகள் அனைத்தையும் நாட்டு மக்கள் ஒட்டு மொத்தமாக இழுந்தார்கள். இந்திராகாந்திக்கு எதிராக பேசியவர்கள், எழுதிய வர்கள் மூச்சு விட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு கொட்டடிகளில் அடைக்கப்பட் டார்கள்.

பத்திரிகைகள் பல மூடப்பட்டன. பத்திரிகை யாளர்கள் சிறை வைக்கப்பட்டார்கள். அடிப் படை உரிமைகள், குறிப்பாக கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், இவையெல்லாம் காற்றிலே பறந்தன. எங்கும் மக்கள் பீதிவயப்பட்டு



நின்றார்கள். மக்கள் உச்ச நீதிமன்றத்தை நாடி ஓடினார்கள்.

உச்ச நீதிமன்றம், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 32–ன் கீழ் மக்களின் உரிமைகளை நிலை நாட்டிட இருக்க வேண்டும். அரசின் நடவடிக் கைகள் அடாத செயல் என அறிவித்திருக்க வேண்டும். ஆனால், மக்களின் அடிப்படை உரிமைகளை உச்ச நீதிமன்றம் அந்தரத்திலே தொங்கவிட்டது.

ஆளும் கட்சியான காங்கிரஸ் அதன் சர்வாதி காரிபோல் செயல்பட்ட இந்திராகாந்தி. இவர்கள் விரும்பியதை யெல்லாம் தீர்ப் பாகத் தந்தது.

நாட்கள் நகர்ந்தன நெருக்கடி காலத்தால் உயிரிழந்தவர்கள் போக எஞ்சியோர் பட்டதும் கெட்டதும் போக, தலை நிமிர்ந்தார்கள்.

நெருக்கடி காலத்தில் இந்திரா காந்தி ஆடிய ஆட்டங்களெல்லாம் அம்பலமாயின. இந்திரா காந்தியும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும் குனிந்த தலை நிமிராமல் வாழ்ந்திட வேண்டிய அவலம். இந்திராகாந்திசிறைப்பிடிக்கப்பட்டார்.

இவர்கள் மட்டுமல்ல உச்ச நீதிமன்றத்தில் அன்று நீதிபதிகளாக அமர்ந்திருந்தவர்களும், தலை குனிந்தார்கள். தாங்கள் சோற்றால் அடித்தப் பிண்டங்களாக, ஆட்சியில் இருந்தவர்களுக்கு அடிமையாகிப் போனதை எண்ணி, வேதனைப் பட்டார்கள்.

தாங்கள் – உச்ச நிதிமன்ற நீதிபதிகள் – ஆட்சி யாளர்களுக்கு அடிமையாய் ஆனதால் நீதிபரி பாலனத்தில் உச்ச நீதிமன்றத்தின் மாண்புகளும் மண்மூடிப் போனதே என ஏங்கினார்கள்!

நீதித்துறையின் தாழ்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் நாம் சாட்சியங்களாக ஆகிப்போனோமே என்றெல்லாம் எண்ணி நொந்தார்கள். அப்போது இந்திரா காந்திக்கு ஒப்பற்ற ஜால்ராவாக வாழ்ந்த உச்ச நீதிமன்ற நீதிபதி Y.V. சந்திரசூடு 1978–ல் டெல்லியில் – இந்தியாவின் பத்திரிகையாளர்கள் கிளப்பில் வைத்து 'அப்போது – நெருக்கடி காலத்தில் நாங்கள் நீதிபதிகள் எல்லோரும், கோழைகளாய் இருந்தோம்' என்றார். தங்களது கோழைத் தனத்தை ஒத்துக் கொண்டார்.

(Front Line, Dec-6, 2019)

அதே நிலைதான் இன்றும் நிலவுகின்றது அதாவது 2014–க்குப் பின் நிலவுகின்றது.

## இன்ஷா அல்லாஹ் அந்த நாள் நிச்சயம் வரும்

ஹிட்லருக்கும் – முசோலினிக்கும் ஏற்பட்ட நிலை இன்றைய இந்திய ஹிட்லருக்கும் முசோலி னிக்கும் நிச்சயமாக வரும். மக்கள் தங்கள் உரிமைகளை நிலை நாட்டிக் கொள்ளும் காலம் நிச்சயமாக வரும்.

நீதிமன்றங்களைப் பொறுத்தவரை – இன்றைய பாசிஸ்ட்டுகள் தங்கள் ஆட்களைத்தான் நீண்ட வரிசையில் வைத்திருக்கின்றார்கள் என்பது உண்மைதான். அவர்கள் சில காலம் அராஜகங் களையும், அநீதிகளையும் நீதி என்ற பெயரில் பிரகடனப்படுத்தலாம். ஆனால், நிச்சயமாக "சத்தியம் வெல்லும் அசத்தியம் அழியும். அழிந்தே தீரும்'' அந்த நாளில் நிச்சயமாக, இன்ஷா அல்லாஹ் அனைத்து அநீதிகளும் அழிக்கப்படும். நீதி நிலைபெறும். பாபரியும் மீளும். அதுவரை அநீதியை வீழ்த்தும் நெடும் பயணத்தைத் தொடருவோம்.

## பாபரி மஸ்ஜிதின் வழக்கின் தீர்ப்பு ஏகமனமானதா?

பாபரி மஸ்ஜித் வழக்கில், தீர்ப்பை வழங்கிய உச்ச நீதிமன்ற அமர்வில் இடம் பெற்ற நீதிபதிகள் 1) ரஞ்சன் கோகாய், 2) S.A. பாப்டி, 3) தனஞ் செய்யா Y. சந்திரசூடு, 4) அசோக் பூஷன், 5) அப்துல் நசீர் இந்த ஐந்து பேரும் ஏகமனதாக தீர்ப்பை வழங்கியதைப் போல் வெளி உலகத்திற்கு காட்டிக் கொண்டார்கள். ஆனால், நிச்சயமாக ஒரு நீதிபதி முற்றிலும் கருத்து வேறுபட்டார்.

ஆனால் தீர்ப்பை எழுதியவர்கள் அதனைக் காட்டிக் கொள்ளவில்லை. அந்த மாறுபட்ட கருத்துக்கு எதிராக, அவர்கள் ஒரு விளக்கத்தைத் தீர்ப்பில்தருகின்றார்கள். அதனை "Addenda" (பின் இணைப்பு) என்றகூடுதல்தகவல் அடிப்படையில் தந்து முடிக்கின்றார்கள்.

அடுத்து, இந்தத் தீர்ப்பைப் பற்றி மூத்த வழக் கறிஞர் வைகை சட்ட நிறுவனத்தின் தாளாளர் தீர்ப்பின் ஒருமித்தக் கருத்தைப் பற்றி இப்படிக் கூறியுள்ளார்.

929 பக்கங்கள், ஐந்து நீதிபதிகளும் ஒருமித்த கருத்தோடுதான் எழுதி இருக்கின்றார் கள். மீதமுள்ள 116 பக்கங்கள் கொண்ட பின்



இணைப்பை ஒரு நீதிபதி எழுதி இருக்கின்றார். அந்த *116* பக்கங்கள் கொண்ட பின் இணைப் பிற்கு மீதமுள்ள நான்கு நீதிபதிகளும் ஒப்புதல் அளிக்கவில்லை. இதில் வேடிக்கை என்ன வெனில், அந்தப் பின் இணைப்பைத் தந்த அந்த நீதிபதி யார் என்றும், அதில் சொல்லப்பட வில்லை. எந்த நீதிபதி இதை எழுதினார் என்றும் சொல்லப்படவில்லை. (வழக்கறிஞர் லஜபதிராய் பேட்டி – வைகறை வெளிச்சம், டிசம்பர்–*2019*)

எந்த நீதிபதியும் எங்கும் கையெழுத்து இட வில்லை. இதனால்தான் இந்தத் தீர்ப்பை Unanimous but Annavy mous தீர்ப்பு என்கின் றார்கள்.

இது ஒருமித்த தீர்ப்பு. ஆனால், அநாமதேய தீர்ப்பு என்கின்றார்கள். ஆனால், இது Unnani mous தீர்ப்பும் இல்லை என்பதே உண்மை.


அதற்கு அந்தத் தீர்ப்பே சாட்சி. தீர்ப்பில் இன்னொரு பகுதியை மீறும் இந்துத்துவ தீவிர வாதிகள் இந்தத் தீர்ப்பில் நீதிபதிகள், வழிபாட்டு தலங்களின் சட்டம் *1993*–ஐ விரிவாக விவாதிக் கின்றார்கள்.

இந்தச் சட்டம், பாபரி மஸ்ஜித் அல்லாத இந்தியாவிலிருக்கும் எந்த வழிபாட்டுத் தலத்தை யும், யாரும் முன் தேதியிட்டுக் கேட்கக் கூடாது எனக் கூறுகின்றது. இந்தத் தீர்ப்பில் இந்தச் சட்டம் இனி செயலில் வரும், இனி எந்த வழிபாட்டுத் தலத்தையும் யாரும் கேட்கக்கூடாது என்கின்றது.

ஆனால், இந்துத்துவவாதிகள், அடுத்த இலக்கு மதுராவிலுள்ள கிருஷ்ண ஜென்ம பூமி எனப் புறப்பட்டுவிட்டார்கள். அங்குள்ள பள்ளி வாசலையும் கோயிலாக மாற்றும் தீர்ப்பை உச்ச நீதிமன்றத்திலேயே பெற்றிட திட்டமிட் டுள்ளார்கள். பாபரி மஸ்ஜித் தீர்ப்பின் ஒரு பகுதியைக் கொண்டாடும் இந்துத்துவ தீவிர வாதிகள், தீர்ப்பின் இன்னொரு பகுதியை மீறிப் படை அமைத்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் நீதிமன்றங்களை அணுக அஞ்சி நிற்கின்றார்கள்.

(Front Line, Oct-23/2020)

**MGM**



- அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி



# இஸ்லாமிய பாடத்திட்டங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் சிறப்புகள்

இந்தியாவில், இஸ்லாமிய ஆட்சி காலகட்டத்தில் இஸ்லாமிய பாடத்திட்டங்களின் உருவாக்கம் மற்றும் அதன் பரிணாமம் ஆகியவற்றின் வரலாறு என்பது மிகவும் நீளமானது. அதன் வளர்ச்சியின் பல்வேறு படித்தரங்களை பின்தொடர வேண்டுமென்றால் 800 ஆண்டுகால விரிந்த காலப் பகுதியை பகுப்பாய்வு செய்ய வேண்டியது அவசியம். இந்தக் கல்வித் திட்டத்தில் இடம் பெற்ற பாடநூல்களும் அதன் மூல நூல்களும், பல்வேறு வரலாற்று நூல்களிலும், சான்றோர்களின் பொன்மொழி களிலும், அவர்களது நினைவு குறிப்புகளிலும் படர்ந்து கிடக்கிறது. இந்தப் பாடத்திட்டத்தை கற்பித்த ஆசிரியர் களது வரலாறு நீளமானதை போல, அதனை உருவாக்கி யவர்கள், குறிப்பிட்ட இந்த பாடத்திட்டத்தை அங்கீகரித்த கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் வரலாறும் நீளமானது.

முஸ்லிம் தலைவர்கள், மன்னர்கள், இந்தக் கல்வியை நேசிக்கக் கூடியவர்கள், இந்த மதரஸாக்களுக்கு செல்வங்களை வாரியிறைத்த செல்வந்தர்கள் அனைவரும் நகரங்களிலும் கிராமங்களிலும் பல மதரஸாக்களை நிறுவினார்கள். இந்த மதரஸாக்களுக்கு மத்தியிலான தொடர்புகளை வலுப்படுத்தினார்கள்.

துரதிஷ்டவசமாக இந்த மதரஸாக்களை குறித்து ஆழமாக ஆய்வுகளை மேற்கொள்வதற்கோ அதனைக் குறித்து பல்வேறு தகவல்களை வெளி கொணர்வதற்கோ எந்தவொரு துணைச் சாதனமும் இன்று நம்மிடையே இல்லை.

அதேபோல இந்த பாடத்திட்டம் பல்வேறு கட்டங் களில் எவ்வாறெல்லாம் வளர்ச்சி அடைந்தது என்பதனை யும், தேவைக்கும் காலச் சூழலிற்கும் ஏற்ப இதில் ஏற்படுத் தப்பட்ட மாற்றங்கள், இந்த பாடத் திட்டத்தை மேம்படுத்தி அதற்கு தலைமை ஏற்று வழிநடத்தி உயர்ந்த அந்தஸ்தை வகித்த நகரங்கள் மற்றும் பாரம்பரியமான குடும்பங்கள் ஆகிய வற்றின் தகவல்களை கூறுவதற்கு இந்த சிறிய நூலால் இயலாது. இவை யனைத்தும் உள்ளடக்கிய தகவல்களை எழுதினால் அது தனி நூலாக எழுதப்பட வேண்டும்.

இங்கே மிகச் சுருக்கமாக அனைத்து தகவல்களை பதிவு செய்யும் பொருட்டு இந்தியாவின் இஸ்லாமிய வரலாற்றுத் துறையின் மிகப்பெரிய வரலாற்று ஆய்வாளர்களில் ஒருவரான அல்லாமா அப்துல் ஹை அல்ஹஸனி அவர்கள் இது குறித்து எழுதிய கட்டு ரையை இங்கே பதிவு செய்கிறோம்.

இந்தக் கட்டுரையில் இந்திய நாடு முழுக்க பரவியிருந்த இந்த பாடத் திட்டத்தின் சிறப்பம்சங்களையும், பொதுவாக வரலாற்று நூல்கள் கவனம் எடுக்காத, அது வளர்ந்து வந்த காலக்கட்டங்களையும் இதில் பதிவு செய்கிறார்.

அந்தக் கட்டுரையில் அவர் கூறுகிறார்

"இந்திய வரலாற்றை வாசிக்கும் போது இந்தியாவை நோக்கி முஸ்லிம்கள் படையெடுத்து வந்ததன் மூலமாகத்தான் நிச்சயமாக இஸ்லாமிய கல்வி இந்தியாவை வந்தடைந்தது. இந்த நாட்டின் பின்புறம் உள்ள சிந்து நதியிலும், ஈராக்கிலும் என்னவெல்லாம் மாற்றங்கள் ஏற்பட்டதோ, அவ்வனைத்து மாற்றங்களின் தாக்கமும் இந்தியா முழுக்க படர்ந்திருந்த கல்வித் திட்டத்தில் ஆழமான தாக்கத்தை அவ்வப்போது ஏற்படுத்திக் கொண்டிருந்தது."

**ஸிந்து மற்றும் முல்தான்**

இந்தியாவின் இதரப்பகுதிகளில் அறிவு ஜோதி ஒளிர்வதற்கு முன்னாலேயே சிந்து மற்றும் முல்தானின் பாலைவனங்களில் அறிவு ஜோதி ஒளிரத் துவங்கிவிட்டது. இதன் பிரகாசம் இந்தியா முழுக்க பரவியது.லாஹூர் இந்தியாவின் தலைநகராக மாறிய போது இந்த ஒளியினால் பயணடைந்தவர்களில் முதன்மையானவர்கள் கஜ்னவி மன்னர்களே.

**டில்லி**

டில்லி வெற்றி கொண்ட பிறகு அறிவுத் துறையின் மீது மன்னர்கள் அளப்பரிய ஆர்வத்தை காட்டியதால் பல்வேறு அறிஞர்கள், கலைஞர்கள் டில்லியை நோக்கி படையெடுத்தார்கள். இதனால் மிகச் சிறந்த நிறைய அறிவு ஜீவிகள் ஒரே நகரத்தில் ஒன்றுகூடினார்கள். கல்வி கற்க வேண்டும் அதன் மூலம் பயனடைய வேண்டும் என்ற ஒவ்வொருவரின் தாகத்தையும் இந்த அறிவு பட்டணம் தீர்த்தது.

கியாசுத்தீன் பல்பன் டில்லியை ஆண்ட காலத்தில் டில்லியின் ஒவ்வொரு இடமும் பக்தாத் மற்றும் குர்துபாவை நினைவூட்டியது.ஷம்சுத்தீன் குவாரிஸ்மி, ஷம்சுத்தீன் கூஷ்ஜி, புர்ஹானுத்தீன் பல்ஹி,புர்ஹானுத்தீன் அல்பஜ்ஜாஜ், நஜ்முத் தீன் திமஷ்கி,கமாலுத் தீன் ஸாஹித் இன்னும் இது போன்ற பல ஜாம்பவான்கள் இந்த நகரத்தில் இருந்ததால் பக்தாத் மற்றும் குர்துபாவின் பொன்னான நாட்களை இது ஞாபகமூட்டியது.

அலாவுதீன் கில்ஜி அவர்களது காலத்தில் மட்டும் சுமார் 46 உலமாக்கள் இந்த நகரத்தில் ஒரே நேரத்தில் இருந்தனர். லஹீருத்தீன் பஹ்கரி, ஃபரீதுத் தீன் ஷாஃபியி, ஹமீதுத் தீன் முஃலிஸ், ஷம்சுத் தீன், முஹ்யித்தீன் அல்காஷானி, ஃபக்ருத் தீன் ஹான்ஸவி, வஜீஹுத்தீன் அர்ராஸி, தாஜுத்தீன் அல்கதம் போன்ற பேரறிஞர்கள் அனைவரும் இந்த நகரத்தில் இருந்தனர்.பிரபல வரலாற்று அறிஞர் லியாஉத்தீன் அல்பிருனி இவ்வாறு கூறுகிறார் "உலகத்தில் எந்தவொரு நகரத்திலும் இப்படியான மிகச்சிறந்த பேரறிஞர்கள் ஒரு நகரத்தில் இவ்வாறு ஒன்றுக் கூடிய தில்லை."

முஹம்மத் ஷா துக்ளக் அவர்களுடைய கால கட்டத்தில் முஈனுத்தீன் அல்உம்ரானி, காஜி அப்துல் முக்ததிர், மௌலானா ஹாக்கி, அஷ்ஷைகு அஹ்மத் தானேஸ்ரி, இதுபோன்ற மகான்கள் தான் ஷைகு ஷிஹாபுத்தீன் தவ்லதா பாதி போன்றவரை செதுக்கியவர்கள்.இதனால் உலமாக்களின் அரசன் என்று அழைக்கும் அளவிற்கு உயர்ந்தார். இவரது புகழ் எங்கும் பரவியது. இவரிடம் கல்வியை கற்க பல இடங் களிலிருந்து வருகைபுரிந்தார்கள்.

பிரோஸ் ஷா அவர்களது காலகட்டத்தில் ஜலாலுத் தீன் ரூமி வருகை புரிந்தார்கள்.மத்ரஸா மலக்கியாவின் முதல்வர் பதவி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதே காலகட்டத்தில் அஷ்ஷைகு நஜ்முத்தீன் அஸ்ஸமர்கந்தி டில்லி நகரத்தின் அறிவுத் தாகத்தை முழுமையாக தீர்த்தார். நேர்வழிகாட்டக் கூடியவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினார்.

சிக்கந்தர் லோடி அவர்களது காலக் கட்டத் தில் அஷ்ஷைகு அஜீஸுல்லாஹ் மற்றும் அஷ்ஷைகு அப்துல்லாஹ் அவர்களும் முல்தான் பகுதிக்கு வருகை புரிந்தார்கள். ஃபல்ஸஃபா, மன்திக் ஆகிய இரு கலைகளின் தரத்தையும் உயர்த்தினார்கள். பாடத்திட்டத்தை மென்மேலும் வலுப்படுத்தினார்கள்.

மன்னர் அக்பர் அத்தைமூரி அவர்களது காலக்கட்டத்தில் அளுதுல் உலமா (உலமாக் களின் உதவிக் கரம்) என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்ட ஃபத்ஹுல்லாஹ் ஷீராஸி டில்லி நகரத்திற்கு வருகை புரிந்தார்கள். அவரது புகழ் நாடு முழுக்க பரவியது. இதே காலகட்டத்தில் மருத்துவர் சம்சுதீன் அவர்களது வருகையால் மருத்துவ கலைக்கு மிகப்பெரிய முக்கியத் துவமும் வரவேற்பும் கிடைத்தது. அதேபோல இவரது சகோதரியின் மகன் மருத்துவர் அலீ அல்கீலானி. ஹதீஸ் கலையை கற்று கொடுத்து அஷ்ஷைகு அப்துல் ஹக் பிரபல்யமடைந்தது போல மருத்துவத்தின் மூலம் இவரும் பிரபல்ய மடைந்தார்.

மன்னர் ஷாஜஹான் மற்றும் ஆலம்கீர் அவர்களது காலக்கட்டத்தில் மீர் ஸாஹித் என்ற

நட்சத்திரம் உதித்தது. இந்த நட்சத்திரம் தனது ஆழமான ஆய்வுகளால், அறிவார்ந்த விவாதங் களால், நுட்பமான கருத்துக்களால் பல இதயங் களை, பார்வைகளையும் ஈர்த்தது. நிஜாமி பாடத் திட்டத்தின் நிறுவனராக இவரே கருதப்படு கிறார்.

காஜி முபாரக், ஷாஹ் வலியுல்லாஹ் அவர் களது குடும்ப உறுப்பினர்களான அஷ்ஷைகு அப்துல் அஜீஸ், அஷ்ஷைகு ரஃபீஉத்தீன், அஷ்ஷைகு அப்துல் காதர், அஷ்ஷைகு அப்துல் ஹை, அஷ்ஷைகு முஹம்மத் இஸ்மாயில், அஷ்ஷைகு முஹம்மத் இஸ்ஹாக் அஷ்ஷைகு ரஷீதுத்தீன் இவர்கள் அனைவரும் அன்னாரது மாணவர்கள். அடுத்து இவர்களது மாணவர் களான முஃப்தி ஸத்ருத்தீன் கான், அஷ்ஷைகு மம்லுகுல் அலா இவர்கள் இந்தியாவின் ஆசிரி யர்கள், அவர்களது காலத்தின் சிறந்த அறிஞர்கள் என்று அனைவராலும் கருதப்பட்டவர்கள். தற்காலத்தில் உருவாக்கப்பட்ட அனைத்து பாடத்திட்டத்தின் துவக்கப் புள்ளி இவர்களே.

### லாஹுர்

இஸ்லாமிய கல்வியை கற்பித்து அதனை மேம்படுத்தியதில் அனைத்து மாகாணங்களிலும் லாஹுரே முன்னனி வகித்தது. ஆனால் டில்லியில் உருவான கல்வி நிறுவனங்கள் லாஹுரின் அறிவு ஜோதியை சில நேரங்கள் அணைத்தது.

பிறகு மீண்டும் லாஹுருக்கான வாய்ப்பு கிடைத்தது ஜமாலுதீன் தல்ஹ், கமாலுத்தீன் காஷ்மீரி, முஃப்தி அப்துஸ்ஸலாம், முல்லா அப்துல் ஹக்கீம் சியால்கோடி இன்னும் இதுபோன்ற பிரபல்யமான அறிஞர்களின் மூலம் லாஹுரில் இஸ்லாமிய கல்வி செழிப்பாக வளர்ந்தது. ஆயிரக்கணக்கான மாணவர்கள், பேச்சாளர்கள் அனைவரும் இந்த நகரத்தை நோக்கி படையெடுத்து அறிவு நீர் நிரம்பிய இந்த நகரத்தில் தங்களது தாகத்தை தணித்து கொண்டார்கள்.

### ஜோன்பூர்

வடக்கு பகுதியில் இருந்த மன்னர்கள் கல்வியின் பால் அதீத கவனம் காட்டியதால் ஜோன்பூர் பல உலமாக்களை ஈன்றெடுத்தது. அஷ்ஷைகு அபில் ஃபத்ஹ் ஷிஹாபுத்தீன் தவ்லதாபாதி, அஷ்ஷைகு இல்ஹாதாத், அஷ்ஷைகு முஹம்மத் அஃப்ஸல் (மன்னரின் அறிஞர்) ஷம்சுல் பாஸிகா மற்றும் தீவானு அப்துர் ரஷீத் ஆகிய நூல்களின் ஆசிரியர் அல்லாமா முஹ்மூத், முஃப்தி அப்துல் பாக்கி, முல்லா நூருத்தீன் இவர்கள் அனைவரும் நகரத்தின் ஒவ்வொரு பகுதியையும் அறிவால் நிரப்பினார்கள். இவர்களது பேரும் புகழும் எங்கும் பரவியது.

### குஜராத்

குஜராத்திலும் பல ஆளுமைகள் தோன்றினார்கள். மஜ்மஉல் பிஹார் நூலின் ஆசிரியர் அஷ்ஷைகு முஹம்மத் தாஹிர் ஃபதனீ, அஷ்ஷைகு வஜீஹுத்தீன் அல்அலவி அல்குஜராத்தி, முல்லா நூருத்தீன் இன்னும் இதுபோன்ற அறிஞர்கள் அறிவு என்னும் மரத்திற்கு நீர் பாய்ச்சி வளரச் செய்தார்கள். இதே காலக்கட்டத்தில் நியூத்னியை சார்ந்த காஜி லியாஉத் தீன் அவர்கள் குஜராத்தில் அஷ்ஷைகு வஜீஹுத் தீன் அவர்களது பொறுப்பில் வளர்ந் தார்கள். அன்னாரிடம் பல தர்பியத்களை பெற்று, அறிவில் ஆழம் கண்ட பிறகு தனது ஊருக்கு திரும்பினார். இவரிடமிருந்து அல்லாமா லுத்ஃபுல்லாஹ் கல்வி கற்றார். இவரது மாணவர் களில் குறிப்பிடத்தகுந்த ஆளுமைகளில் முல்லா ஜீவன் என்ற பெயரால் பிரபல்யமான தஃப்ஸீர் அஹ்மதிய்யா, நூருல் அன்வார் போன்ற நூல்களை எழுதிய அஷ்ஷைகு அஹ்மத், முல்லா அலி அஸ்கர், முல்லா முஹம்மத் அமான், காஜி அலீமுல்லா இவர்கள் அனைவரும் ஆன்மிகத் திற்கு மார்க்கத்திற்குமான தலைவர்களாக விளங்கி னார்கள். அவர்களது காலத்தில் பாடம் எடுப் பதில் தலையாய ஆசிரியர்களாக விளங்கியவர் களும் இவர்களே.

### அலஹாபாத்

இந்த நகரத்தில் இஸ்லாமிய கலைகள் மற்றும் அதனை பாடம் நடத்துவதின் கொடியை உயர்த்தி பிடித்தவர் அஷ்ஷைகு முஹிபுல்லாஹ், காஜி முஹம்மத் ஆஸிஃப், அஷ்ஷைகு முஹம்மத் அஃப்ஸல், ஷா ஹீபுல்லாஹ், அஷ்ஷைகு முஹம்மத் தாஹிர், அல்ஹாஜ் முஹம்மத் ஃபாஹிர் ஸாயிர், மௌலவி பரகத், மௌலவி ஜாருல் லாஹ், இன்னும் இதுபோன்ற பல மார்க்க அறிஞர்கள் இஸ்லாமிய கல்விக்கு பல சேவைகளை புரிந்தார்கள். எந்தளவிற்கென்றால் சுமார் நூறு வருடங்கள் இவர்களே ஆதிக்கம் செலுத்தி னார்கள்.

### லக்னோ

இஸ்லாமிய கல்வி என்னும் உயர்ந்த அன்பளிப்பை ஜோன்பூரிலிருந்து லக்னோவிற்கு சுமந்து வந்தது அஷ்ஷைகு அஃலம் அபுல் பகா

அல்கிர்மானி, இதற்கு பிறகு அந்த பொறுப்பை ஷா பீர் முஹம்மது அவர்கள் வகித்தார்கள். இவரது மாணவர் குலாம் நக்ஷபந்தி இவர் இஸ்லாமிய கல்வியின் மூலம் பயன் பெறக்கூடிய மைதானத்தை சற்று விரிவுபடுத்தினார். இதனால் பல உள்ளங்களை கல்வியின் பால் ஈர்த்தார். இவரது காலக்கட்டத்தில் அஷ்ஷைகு அப்துஸ் ஸலாம் தியூவி மற்றும் அஷ்ஷைகு முஹிபுல் லாஹ் இலுஹாபாதி இருவர்களது தரீகத்தில் பிரபல்யமான அறிஞர்களில் ஒருவர் அஷ்ஷைகு குதுபுத்தீன் ஸஹாலவி வாழ்ந்தார். இவரது புகழ் எங்கும் பரவியது.

இவர் ஷஹீதான பிறகு இல்மை கற்றுக் கொடுத்து ஆலிம்களை உருவாக்க கூடிய பொறுப்பை இவரது மகன் முல்லா நிஸாமுத் தீன் ஏற்றுக்கொண்டார். பாடம் நடத்துவதில், ஆசிரியர்களை பண்படுத்துவதில் தலைமை பீடமாக இவரே விளங்கினார். இவ்வாறான பேரறிஞர்களை கொண்டிருந்தமையால் லக்னோ மிகப்பெரிய அறிவு பட்டணமாக உருமாறியது. இந்த நகரத்தில் தயார் செய்யப் பட்ட பாடத்திட்டம் அனைத்து மதரஸாக் களிலும் பெரிய அங்கீகாரத்தை பெற்றது. இவரது குடும்பத்தில் உருவான ஆளுமைகள் முல்லா ஹஸன், பஹ்ருல் உலூம் என்ற பெயரால் பிரபல் யமடைந்த அல்லாமா அப்துல் அலி, முல்லா முபீன், முஃப்தி வுஹுுருல்லாஹ், மௌலவி வலியுல்லாஹ், முஃப்தி முஹம்மத் அஸ்கர், முஃப்தி முஹம்மத் யூசுஃப், மௌலவி நயீமுல்லாஹ், மௌலவி நூருல்லா, மௌலவி அப்துல் ஹக்கீம், மௌலவி அப்துல் ஹலீம், அல்லாமா அப்துல் ஹை, இன்னும் இதுபோன்ற நிறைய அறிஞர்கள். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அறிஞரும் அவரது காலத்தின் சிறந்த ஆளுமை யாகவும், தனித்துவம் உடையவராகவும் அவரே இருந்திருப்பார். இதுபோன்ற ஆளுமைகள் மற்றொரு குடும்பத்தில் கிடைக்கப்பெறுவது அரிது.

### வட இந்தியாவின் கிராமப்புறங்கள்

இந்த சங்கையான மார்க்க அறிஞர்களிடம் கற்ற அனைத்து ஆலிம்களும் இந்தக் கல்வியை திசை எங்கும் பரப்ப கடுமையாக முயற்சி செய்தனர். எல்லா நகரங்களுக்கும் எல்லா கிராமங்களுக்கும் கல்வியை கொண்டு சேர்த் தனர். இந்த பணியை முழுவீச்சில் மேற்கொண்டது அஷ்ஷைகு குதுபுத்தீன் ஷம்சாபாதி, குதுபுத்தீன் கோபமவி, முஹிபுல்லாஹ் பிஹாரி, அமானுல் லாஹ் பனாரஸி, முல்லா கமாலுத்தீன், மௌலவி பரகத், மௌலவி ஹம்துல்லாஹ், மௌலவி யாதல் லாஹ், மௌலவி ஃபஸல் இமாம், மௌலவி ஃபஸல் ஹக், அவரது மகன் மௌலவி அப்துல் ஹக், இவர்கள் அனைவரும் இல்ம் என்னும் தோட்டத்தின் மலர் கொத்துகள்.

வட இந்தியாவின் அனைத்து பகுதிகளுக்கும் இந்த அறிவை பரப்பினார்கள். அந்த காலக் கட்டத்தில் அவ்த் என்ற ஊரின் ஒருப் பகுதி விடுபடாமல் அனைத்து இடங்களிலும் அறிவு கதிர்களை படரச் செய்தார்கள். இல்மை பரப்பிய முக்கியமான ஊர்கள் ஜாயிஸ், ஹர்காம், நயூத் தனி, கோபாமவ், பல்கராம், சந்தேலா, காகுரி. இந்த ஊர்களில் வேறெந்த ஊர்களில் இல்லாதளவு பல எண்ணிக்கையில் ஆலிம்கள் உருவானார்கள்.

### இஸ்லாமிய பாடத்திட்டத்தின் பல்வேறு பரிணாமங்கள்

எளிமையாக விளங்க பல்வேறு காலகட்டங் களில் இஸ்லாமிய பாடத்திட்டம் எவ்வாறு பரிணாமம் அடைந்தது என்பதனை நான்கு கட்டங்களாக அதனை வகைப்படுத்தலாம். இதற்கு மேலாக கடந்த காலத்தின் பல்வேறு கவிஞர்கள் மற்றும் அறிஞர்களது தபக்காகளில், சுய சரிதைகளில், இன்னும் பல நூல்களில், உரைகளில் குறிப்பிடப்பட்ட பல பரவலான நூல்களை குறித்த தகவல்களையும் நாம் இந்த தலைப்பின் கீழ் ஒன்றுத்திரட்டியிருக்கிறோம்.

### முதலாவது கட்டம்

ஹிஜ்ரி ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து துவங்கி பன்னிரெண்டாவது நூற்றாண்டில் நிறைவா கிறது. அதற்கு பிறகு இரண்டாவது கட்டம் துவங்கி விடும். இந்தக் காலக்கட்டத்தில் பின்வரும் கலைகளை கற்றுக்கொள்வது கட்டாயம் அஸ்ஸர்ஃப்பு, அந்நஹ்வு, அல்பலாகா, அல் ஃபிக்ஹ், உசூலுல் ஃபிக்ஹ், மன்திக், இல்முல் கலாம், தஸவ்வுஃப், தஃப்ஸீர், ஹதீஸ்.

இந்த காலகட்டத்தில் வாழ்ந்த உலமாக்களது வாழ்வை படிக்கும் போது எவ்வாறு தற்காலத் தில் ஃபல்ஸஃபா மற்றும் மன்திகை கற்பது கவுர வமான விடயமோ அதுபோல இந்த கால கட்டத்தில் ஃபிக்ஹ் மற்றும் உசூலுல் ஃபிக்ஹ் கற்பது மிகப் பெரிய கவுரவமாக கருதப்பட்டது.

### இரண்டாவது கட்டம்

அஷ்ஷைகு அப்துல்லாஹ் மற்றும் அஷ்ஷைகு

அஜீஸுல்லாஹ் ஆகிய இருவரும் முல்தானிலிருந்து வருகை புரிந்து அஷ்ஷைகு அப்துல்லாஹ் டில்லியிலும் அஷ்ஷைகு அஜீஸுல்லாஹ் சம்பலிலும் குடியேறினார்கள். இவர்களிருவரையும் மன்னர் சிக்கந்தர் லோடி பெரும் ஆரவாரத்தோடு வரவேற்றார். இருவரது மஜ்லிஸிலும் மன்னரே வந்தமர்ந்து பயன் பெறுவார். இவ்வாறான அறிஞர்களை எந்தளவிற்கு மன்னர்

கண்ணியப்படுத்தினார் என்றால் இவர்களது மஜ்லிஸிற்கு வரும் மன்னரின் ஆரவார வருகை இவர்களது பாடத்திற்கு இடையூறு ஏற்படுத்தி விடும் என்பதால் நேரடியாக மஜ்லிஸிற்கு செல்லாமல் மஸ்ஜிதிற்கு அருகில் உள்ள ஸாவியாவில் அமர்ந்து கொள்வார்.மிகுந்த ஆர்வத்தோடும் கவனத்தோடும் உரைகளை கேட்பார்.பாடம் நிறைவுச் செய்த பிறகு அஷ்ஷைகு அப்துல்லாஹ் அவர்களை சந்திப்பார்.

ஆழமான அறிவும், பல்வேறு சிறப்புகள் மேன்மைகளும் கொண்டிருந்ததால், அவர்களது காலத்து அறிஞர்களை விட தனித்துவமாக விளங்கியதால் இந்த இரு அறிஞர்களது புகழ் இந்திய முழுக்க பரவியது. மன்னர்களின் முழு ஆதரவையும் பெற்றார்கள்.

பாடத்திட்டத்தில் பல்வேறு மாற்றங்களை கொண்டுவந்து அதன் தரத்தை மேம்படுத்தினார்கள். பாடத்திட்டத்திற்குள் காஜி அலுதுல் மலிக் அவர்களது நூல்களான அல்முதாலிஃ வல் மவாகிஃப் இமாம் ஸகாக்கி அவர்களது மிஃபாதாஹுல் உலூம் இந்த நூல்களை எல்லாம் பாடத்திட்டத்திற்குள் நுழைத்தார்கள்.வெகு சீக்கிரத்தில் இந்த நூல்கள் அனைவராலும் பயன்படுத்தப்பட்டது.

இதே காலகட்டத்தில் மீர் ஸைய்யத் ஷரீஃப் அவர்கள் அவரது மாணவர்களது உதவியோடு எழுதி நிறைவு செய்த அல்முதாலிஃ வல் மவாகிஃப் என்ற நூலின் விளக்கவுரை மிகப்பெரிய அங்கீகாரத்தை பெற்றது. அதேபோல அல்முதவ்வல் வல் முஃதஸர், தல்வீஹ், அகாயித் நஸஃபி நூலின் விளக்கவுரை ஆகிய நூல்களை அறிஞர் தஃப்தஸானி அவர்களது மாணவர்கள் பாடத் திட்டத்திற்குள் நுழைத்தார்கள்.

இதே காலகட்டத்தில் ஷரஹு விகாயாவும், ஷரஹு முல்லா ஜாமியும் பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டது.

மிகப்பெரிய அறிஞர் அஷ்ஷைகு அப்துல்ஹக் முஹத்திஸ் அத்தெஹ்லவி ஹிஜாஸிற்கு சென்றார் மூன்று வருடம் தங்கி மக்கா மற்றும் மதீனத்து அறிஞர்களிடம் ஹதீஸ் கலையை கற்று நிறைவு செய்தார் இந்த அறிவுச் செல்வத்தை இந்தியாவிற்கு எடுத்து வந்தார். இவரும் இவரது திறமை வாய்ந்த மகன்களும் இந்த கல்வியை பரப்ப அரும்பாடு பட்டார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக இவர்களது காலத்தில் இந்த கல்வி மிகப் பெரிய அங்கீகாரத்தை பெறவில்லை. இந்த பாக்கியத்தை அல்லாஹ் அஷ்ஷைகு ஷாஹ் வலியுல்லாஹ் தெஹ்லவி அவர்களுக்கே வழங்கினான். அல்லாஹ் தான் நாடியவர்கள் மீது அருள்மழையை பொழிவான்.

**மூன்றாவது கட்டம்**

இரண்டாவது கட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட பல மாற்றங்கள் மக்களின் எதிர்பார்ப்புகளையும் கல்வியின் தரத்தையும் உயர்த்தியது. இதனால் இந்த காலகட்டத்தில் பாடத்திட்டத்தின் தரத்தை மெருகேற்றி அதனது தரத்தை இன்னும் உயர்த்த விரும்பினார்கள். அஷ்ஷைகு ஃபத்ஹுல்லாஹ் ஷீராஸி அவர்களது வருகை பாடத்திட்டமும் கல்வி நிறுவனங்களும் முன்னேற்றம் அடைவதற்கான புதிய உத்வேகத்தை தந்தது.அக்பரின் மன்னரவை அளுதுல் மலிக் (மன்னரின் உதவிக் கரம்) என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கியது. பாடத்திட்டத்தில் அஷ்ஷைகு ஃபத்ஹுல்லாஹ் ஷீராஸி அவர்கள் ஏற்படுத்திய மாற்றங்களை அனைத்து அறிஞர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

இந்த நேரத்தில் அஷ்ஷைகு வஜீஹுத் தீன் குஜராத்தி அவர்களது சேவைகளை நினைவுக் கூறாமல் தவிர்ப்பது அவருக்கு நாம் செய்யும் மிகப்பெரிய அநீதமாகும். ஒரு வழியில் இந்த ஸாலிஹான மனிதர் ஆய்வாளர் ஜலால் அத்தவானி அவர்களது மாணவர். பின்னால் வந்த அறிஞர்களது நிறைய நூல்களை பாடத்திட்டத்திற்குள் நுழைத்தார்.கல்வியின் நதிகள் குஜராத்தோடு நின்றுவிடவில்லை மாறாக மத்திய இந்தியப் பகுதிகளையும் இந்த நதி அடைந்தது.

நயூத்தனியை சேர்ந்த காஜி லியாஉத் தீன் இந்த அறிவு வளத்தை குஜராத்திலிருந்து நயூத்தனிற்கு எடுத்து வந்தார். இந்த வளத்தை இன்னும் அஷ்ஷைகு ஜமால் அறுவடை செய்து தொலை தூர இடங்களுக்கு இந்த கல்வியை பரப்பினார். அஷ்ஷைகு ஜமால் அவர்களது மாணவர்களில் ஒருவரான முல்லாஹ் லுத்ஃபுல்லாஹ் . இவரிடம் நூருல் அன்வார் நூலின் ஆசிரியர் முல்லா ஜீவன் கல்வி கற்றார். அதேப் போல முல்லா அலி அஸ்கர்,

காஜி அலீமுல்லாஹ், முல்லா முஹம்மத் ஸமான், இன்னும் பல உலமாக்கள். இதில் குறிப்பிடப் பட்டுள்ள ஒவ்வொரு அறிஞரும் ஒரு மதரஸாவின் பொறுப்புதாரியாக இருந்தவர்களே.

ஆனாலும் இந்த பாடத்திட்டம் மிகப்பெரிய அளவில் அங்கீகாரம் பெறவில்லை. அல்லாமா ஃபத்ஹுல்லாஹ் ஷீராஸி அவர்களும் அவரது மாணவர்களும் இவர்களது மாணவர்களின் மூலமே இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இது பரப்பப்பட்டது

அல்லாமா ஃபத்ஹுல்லாஹ் அவர்களது மாணவர்களில் திறமை வாய்ந்த மாணவர் முஃப்தி அப்துஸ்ஸலாம் லாஹுரில் சுமார் 40 வருடங்கள் பாடம் எடுத்தார். ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவரின் மூலம் பயனடைந்தார்கள்.

ஆனால் ஆயிரக்கணக்கான மாணவர்களில் இந்த கல்வியின் சிறப்பும் அதன்மூலம் கிடைக்கப் பெறும் நிரந்தர பயனும் சில மாணவர்களுக்கே கிடைத்தது. இந்தப் பாக்கியம் பெற்ற சிலர் அலஹாபாத்தைச் சேர்ந்த அஷ்ஷைகு முஹிபுல்லா, தியூவைச் சேர்ந்த முஃப்தி அப்துஸ்ஸலாம் இவர்களிருவரும் ஷைகு அப்துஸ்ஸலாம் அவர்களிடத்தில் கல்வி கற்று தனித் தனி கல்வி நிறுவனங்களை நிறுவினார்கள். ஒரு வழியில் ஷைகு குதுபுத்தீன் ஸஹாலவி இவர்களிருவரின் மாணவர் ஆவார். இவர் தான் பிரபல்யமான நிஜாமி பாடத்திட்டத்தின் நிறுவனரான அஷ்ஷைகு நிஜாமுதீன் அவர்களது தந்தை.

இந்த காலகட்டத்தின் பிரபல்யமான கடைசி அறிஞர் அஷ்ஷைகு வலியுல்லாஹ்.அன்னாரும் ஹிஜாஸிற்கு சென்று அஷ்ஷைகு அபீ தாஹிர் அல்மதனி அவர்களிடம் சில வருடங்கள் ஹதீஸ் கல்வியை கற்றார். இதனை நிறைவுச் செய்து இந்த கல்வியை இந்தியாவிற்கு எடுத்து வந்தார். இந்த கல்வியை பரப்புவதில் இதற்கான சேவை புரிவதிலுமே தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். அதனால் நிலைத்து நிற்கும் அடையாளத்தை விட்டு சென்றார்."இந்தியாவில் ஸிஹா சித்தாவை (ஹதீஸின் தலையாய ஆறு கிரந்தங்கள்) கற்கும் , கற்பிக்கும் அனைவரும் ஷாஹ் வலியுல்லாஹ் தெஹ்லவி அவர்களுக்கு கடன்பட்டவர்களே" என்று கூறினாலும் அது மிகையான வார்த்தை இல்லை.ஏனென்றால் இந்த கலையின் மூலம் அவரிடமே நிறைவடையும். இவரும் இவருக்கு பின்னால் வந்த பல அறிஞர்களும் இந்த கலையை பரப்ப தங்களது வாழ்க்கையையே அர்ப்பணித்தனர்.

தனது சிந்தனைக்கு ஏற்றவாறு ஷா வலியுல்லாஹ் தெஹ்லவி அவர்கள் புதிய பாடத் திட்டத்தை உருவாக்கினார்கள். ஆனால் சில அரசியல் காரணங்களால் டில்லியில் இருந்த இஸ்லாமிய கல்வியின் தலைமையகம் லக்னோவிற்கு மாற்றப்பட்டது.இதனால் மன்திக் மற்றும் ஃபல்ஸஃபாவிற்கே முக்கியத்துவம் அளிக்கப் பட்டதே தவிர ஷாஹ் வலியுல்லாஹ் தெஹ்லவி அவர்கள் வடிவமைத்த பாடத்திட்டம் பெரிய அங்கீகாரத்தை பெறவில்லை.

**நான்காவது காலகட்டம்**

நான்காவது கட்டம் இது ஹிஜ்ரி 12 ஆவது நூற்றாண்டிலிருந்து துவங்குகிறது. இந்த காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டம் அஷ்ஷைகு நிஜாமுதீன் அவர்களால் உருவாக்கப்பட்டது. இந்த பாடத்திட்டம் இதுவரை வடிவமைக்கப்பட்ட அனைத்து பாடத் திட்டத்தையும் மிகைத்தது. அதனோடு போட்டியிட வேறொரு பாடத்திட்டம் இல்லை என்ற நிலை உருவானது. இன்று வரைக்கும்

இது தனது தனித்துவத்தை, மேன்மையை குறைக்காமல் பாதுகாத்து வருகிறது.

(தொடரும்).....





# கண்மூடித்தனமான கைதுகள்

சுல்தான் நூருத்தீன் ஸன்கீ (ரஹ்) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் போது நாட்டின் சூழல் படுமோசமான நிலையிலிருந்தது. எல்லா புறங்களிலும் குற்றங்கள் சர்வசாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருந்தது. எனவே அந்நாட்டில் வாழ்ந்துக் கொண்டிருந்த அறிவு ஜீவிகள் நாட்டை சீர்திருத்தியே ஆக வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று கருதினார்கள்.

எனவே குற்றவாளிகளது குற்றங்கள் ஷரீஅத் ரீதியாக நிரூபிக்கப்பட்ட பிறகு அவர்களுக்குரிய தண்டனைகள் நிறைவேற்றப்படுவது இந்தச் சூழலில் சரியான நடவடிக்கை அல்ல. மாறாக நாடு அமைதி நிலைக்கு திரும்ப வேண்டும் என்றால் ஷரீஅத் ரீதியாக குற்றங்கள் நிரூபிக்கப்படும் வரை காத்திருக்காமல் அவர்களை உடனுக்குடனே பலவந்தமாக கைது செய்து கடுமையான தண்டனைக்கு உட்படுத்த வேண்டும். இதுவே இந்த சூழலிற்கு ஏற்ற நடவடிக்கையாக அமையும் என்றார்கள். இதனால் பேரறிஞர் உமர் முல்லா அல்மூசிலி (ரஹ்) அவர்களை அனுகினார்கள்.

ஏனென்றால் சுல்தான் உமர் முல்லா அல் மூசிலி (ரஹ்) சுல்தான் நூருத்தீன் ஸன்கி (ரஹ்) அவர்களிடத்தில் உயர்ந்த மதிப்பை பெற்றவர். இவரின் மூலம் இந்த யோசனையை சுல்தானிற்கு தெரியப்படுத்தலாம் என்று நினைத்து உமர் முல்லா அல்மூசிலி (ரஹ்) அவர்களிடம் தங்களது ஆலோசனையைக் கூறினார்கள். உமர் முல்லா அல்மூசிலி (ரஹ்) அவர்களும் ஒப்புக் கொண்டு சுல்தான் நூருத்தீன் ஸன்கி (ரஹ்) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அதில் குற்றாவாளிகளின் குற்றங்கள் ஷரீஅத் ரீதியாக நிரூபிக்கப்படும் வரை காத்திருக்காமல் அவர்களை உடனுக்குடனே பலவந்தமாக கைது செய்து கடுமையான தண்டனைக்கு உட்படுத்த வேண்டும், என்று குறிப்பிடப்பிட்டிருந்தார்.

கடிதத்தை படித்த நூருத்தீன் ஸன்கி ரஹ் அவர்கள் கடிதத்திற்கு பிற்புறம் தனது கையாலேயே பதில் எழுதினார்.

"ஷரீஅத் ரீதியாக நிரூபிக்கப்படாத குற்ற வாளியை தண்டிப்பதும் மிகப்பெரிய அநியாயம். ஷரீஅத் ரீதியாக நிரூபிக்கப்பட்ட குற்றவாளி களுக்கான தண்டனையை தாமதப்படுத்துவதும் மிகப்பெரிய அநியாயம். தாங்கள் கூறிய இந்த ஆலோசனைக்கு நான் கீழ்படிந்தேன் என்றால் இறைவனது சட்டங்களை விட அறிவுக்கு முன்னுரிமை வழங்கியவர்களில் நானும் ஒருவனாகி விடுவேன். மனிதர்களை சீர்திருத்தம் செய்வதற்கு இந்த மார்க்கம் போதுமானதாக இல்லை என்றால் நிச்சயமாக கடைசித் தூதரது வருகைக்கான அவசியமிருந்திருக்காது, என்று பதிலனுப்பினார்கள்."

பதில் கடிதத்தைப் பெற்ற உமர் முல்லா அல்மூசிலி (ரஹ்) "என் கைசேதமே இப்படியான வார்த்தைகள் எனது வாயிலிருந்து அல்லவா வந்திருக்க வேண்டும்", தனது இந்த செயலுக்காக மிகவும் வருத்தப்பட்டார்.

கடிதத்தில் கூறியது போல ஷரீஅத் சட்டத்தின் படியே தனது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் சுல்தான் நூருத்தீன் ஸன்கி (ரஹ்) அவர்கள் மேற்கொண்டார். எந்தளவிற்கென்றால் சில வருடங்களுக்கு பிறகு, ஒருப் பெண்ணால் விலை உயர்ந்த ஆபரணங்களை அணிந்து தனியாக எந்தவொரு அச்சமுமின்றி சாதாரணமாக சாலையில் நடந்துச் செல்லும் அளவிற்கு அந்த சமூகத்தையே தலைகீழாக மாற்றினார்.

மூலம் - அஸ்ஹாரு ரவ்லதைன் ஃபி
அக்பாரி தவ்லதைன்

**தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**

# தமிழகம் முழுவதும், முஸ்லிம்களின் வீடுகளில் காவல்துறை அதிரடி சோதனை..!

## எதிராக அணிதிரண்ட மக்கள் அமைப்புகள்.!!

## - எந்த விதிமுறையும் பின்பற்றப்படவில்லை எனப் புகார்

அனுப்புனர்,

**சமூக ஆர்வலர்கள்,**
திருச்சிராப்பள்ளி.

பெறுநர்,

திரு. **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
திருச்சிராப்பள்ளி.

அவர்கள் மூலமாக

மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்கள்,
சென்னை.

அய்யா,
வணக்கம். வாழ்த்துக்கள்.

**பொருள் :**

சமூக நல்லிணக்கத்தை - அமைதியை கெடுக்கும் கெட்ட உள்நோக்கம் கொண்ட தவறான செய்திகளை தினசரி ஊடகங்களில் பரப்பி - பெரும் சதித்திட்டத்துடன் - இஸ்லாமியர்கள் வீடுகளில் சட்ட விரோதமாக நடத்தப்பட்டு வரும் சோதனைகளை தடுத்து நிறுத்தவும் - சோதனை நடத்திவரக் காரணமான தமிழக உளவுத்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகளைக் கண்டறிந்து அவர்கள் மீது தக்க குற்றவியல் - துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் - பாதிக்கப்பட்டவர்களுக்கு தாக்க நிவாரணம் கொடுக்கவும் கோரி

=========

கோவையில் ஒரு காரில் சிலிண்டர் வெடித்து ஒருவர் இறந்த வழக்கில் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாக தமிழக அரசு அந்த வழக்கை தேசிய புலனாய்வு முகமை விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

அதற்கு பின்னிட்டு தமிழக காவல்துறையினர் தமிழகத்தில் பல ஊர்களில் இஸ்லாமியர் வீடுகளை குறிவைத்து சோதனைகள் நடத்தி

### முஸ்லிம்களை தமிழக முதல்வருக்கு எதிராக மாற்றும் சதி!

வருகின்றனர். தேசிய புலனாய்வு முகமையின் வழக்குகளில் உள்ள குற்றம் சாட்டப்பட்டு ஜாமீனில் வந்தவர்கள், சில வழக்குகளில் சாட்சியாக சேர்க்கப்பட்டவர்கள் மட்டுமல்லா மல் எந்த வழக்கும் இல்லாதவர்கள் சிலரின் வீடுகளிலும் இவ்வாறான சோதனைகள் நடை பெற்று வருகிறது. சில ஊர்களில் அருகாமையில் உள்ள நீதித்துறை நடுவர்களிடம் சோதனை உத்தரவு பெற்றும், பல ஊர்களில் அத்தகைய எந்த உத்தரவும் இல்லாமலும் இந்த சோதனை களில் தமிழக காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். அந்த சோதனைகள் அனைத்தும் சட்டத்திற்கு புறம்பானவை. சில ஊர்களில் நீதித்துறை நடுவர்களிடம் கோவை கார் சிலிண்டர் வெடிப்பை குறிப்பிட்டு, தமிழக காவல்துறை வசம் விசாரணையில் இல்லாத பழைய தேசிய புலனாய்வு முகமையின் வழக்கு களின் முதல் தகவல் அறிக்கை எண்களை குறிப்பிட்டு, அதனோடு தமிழக உளவுத்துறை ADGP அவர்களின் கடிதம் எனக் குறிப்பிட்டு காட்டி உள்ளூர் காவல்துறையினர் அந்த சோதனை உத்தரவுகளை சட்ட விரோதமாக பெற்றுள்ளார்.

ஏனெனில் கோவை வழக்கை தேசிய புலனாய்வு முகமையின் விசாரணைக்கு மாற்றி விட்ட பின்னர் தமிழக காவல்த்துறையினர் அந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்க முடியாது. மேலும் அந்த வழக்கை விசாரிக்க தேசிய புலனாய்வு முகமைக்கான வழக்குளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் சென்னை பூந்தமல்லியில் உள்ள நிலையில் தமிழக காவல்துறையினர் சம்பந்தம் இல்லாத அதற்கான அதிகாரம் ஏதும் இல்லாத உள்ளூர் மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் பொய்யான தகவல்களை கொடுத்து இந்த சோதனை உத்தரவுகளை பெறுகின்றனர். தேசிய

புலனாய்வு முகமையின் ஒரே வழக்கில் உள்ளவர்களின் வீடுகளில் கூட வேறு வேறு நாட்களில் சோதனைகள் நடத்துகின்றனர். இதன்மூலம் தங்கள் வீடுகளில் சோதனை செய்ய வருவார்கள் என்பதை உணர்ந்தால் உண்மையில் ஏதேனும் தவறு செய்பவர்கள் இருந்தால் குற்றத்திற்கான பொருட்களை மறைத்து வைத்து விட மாட்டார்களா, இது கூட தெரியாதவர்களா தமிழக காவல் துறையினர் என்ற சந்தேகம் அனைவர் மனதிலும் இயல்பாக எழுகிறது. உண்மையில் இந்த சோதனை நல்ல எண்ணத்தில் நடத்துவதாக இருந்தால் ஒரே வழக்கில் உள்ளவர்களின் வீடுகளில் மட்டுமாவது ஒரே நாளில் சோதனைகள் நடத்தி இருப்பார்கள்.

தேசிய புலனாய்வு முகமைக்கு தமிழகத்தில் கடந்த ஒரு மாதம் முன்பாகத்தான் ஒரே ஒரு காவல் நிலையம் சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. அந்த காவல் நிலையத்தின் முதல் வழக்கே மேற்படி கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்குதான். அந்த வழக்கு தேசிய புலனாய்வு முகமை விசாரணைக்கு மாற்றப்பட்ட சில நாட்களில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் 43 இடங்களில் சோதனைகள் நடத்தினர். ஆனால் இலட்சக்கணக்கான காவலர்களை, ஆயிரக்கணக்கான காவல் நிலையங்களை, புறக்காவல் நிலையங்களை வைத்துள்ள தமிழக காவல் துறையினர் தினசரி ஒன்றிரண்டு இடங்களில் சோதனை நடத்தியதாக தொடர்ந்து மோசமான செய்திகளை ஊடகங்களில் பரப்பி வருகின்றனர் என்பதை இங்கு ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

## எதிர்ப்பு தெரிவித்த அமைப்புகள்

1. **ஜோ.கென்னடி**, தமிழ்தேச மக்கள் முன்னணி
2. **ஜீவா**, மக்கள் கலை இலக்கிய கழகம்
3. **S.சம்சுதீன்**, ஜனநாயக சமூக நலக் கூட்டமைப்பு
4. **ஷைனி**, அமைப்பு சாரா தொழிலாளர் இயக்கம்
5. **அ.முகமது இக்பால்**,
   மாநில தலைவர் - மக்கள் கட்சி
6. S.வசீம்ராஜா (தாருல் இஸ்லாம்)
7. **க.கமருதீன்**, வழக்கறிஞர், Citizen Rights Forum,
8. R. மருது, AIMC-Trichy Dist. Secretary
9. B.முகமது அலி ஜின்னா, மக்கள் உரிமை இயக்கம்
10. **S.ரவிக்குமார்**, சமூக நீதிப் பேரவை
11. **மா.சிவசங்கர்**, மக்கள் அதிகாரம்

கொடுத்திருப்பதாக தெரியவருகிறது.

இரகசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய இத்தகைய சோதனைகள் ஊடகங்களுக்கு முன் கூட்டியே தகவல்கள் தெரிவிக்கப்பட்டே ஊடகங்கள் முன்னிலையிலேயே பெரும்பாலான சோதனைகளை நடத்தி வருகின்றனர். பொதுவாக இவ்வாறான சோதனைகள் நடத்தப்படும் போது வழக்கறிஞர்கள் உள்ளிட்ட வெளிநபர்கள் எவரும் சோதனை நடத்தப்படும் வீட்டுக்குள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஆனால் தற்போது சோதனைகள் நடந்து கொண்டிருக்கும் போதே சில வீடுகளின் உள்ளேயே தமிழக காவல்துறையினரால் ஊடகத்தினர் அனுமதிக்கப்பட்டு, அந்த சோதனைகளை பத்திரிகையாளர்கள் தங்கள் கேமராக்காளில் பதிவுசெய்ய சொல்லி அவற்றை ஊடகங்களில் செய்தியாக வெளியிட்டு பரப்பும் மோசமாக செயல்பாடுகளிலும் சில ஊர் காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதுவே இவர்களின் கெட்ட உள்நோக்கத்தை தெளிவாக விளங்கச் செய்யும்.



சோதனை செய்த சில இடங்களில் செல்போன், பென் டிரைவ் போன்ற பொதுவாக அனைவரிடமும் இருக்கக் கூடிய பொருட்களை மட்டும் கைப்பற்றிய தாகவும், பெரும்பாலான இடங்களில் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் செய்திகள் வருகின்றன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட செல்போன் போன்றப் பொருட்களையும்

அவசர அவசிய தேசிய பாதுகாப்பு என்ற காரணத்தினாலேயே சட்டத்திற்கு முரணானதாக இருப்பினும் சில இடங்களில் மாஜிஸ்திரேட்கள் தங்களுக்கு அதிகாரம் இல்லாத நிலையிலும் சோதனை உத்தரவுகளைக் காவல்துறையினருக்கு

எந்த வழக்கும் இல்லாத நீதிமன்றங்களில் சட்ட விரோதமாக ஒப்படைத்ததாகவும், பல இடங்களில் அவ்வாறு கூட செய்யாமல் கைப்பற்றபட்ட செல்போன் உள்ளிட்ட மின்னணு சாதனங்களை தொடர்ந்து சட்ட விரோதமாக காவல் துறையினரே தங்கள் கைவசம் வைத்துக்கொண்டு சம்பந்தப்பட்ட நபர்களை அலைகழித்து வருவதாக தெரிய வருகிறது.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் தலைமையிலான அரசு அரசியலமைப்பு சட்டப்படியான சாதி மத பேதமில்லாத ஒரு சமூக நீதி காக்கும் அரசாக செயல்பட்டு வருகிறது. ஆனால் தமிழக காவல்துறையில் ஊடுருவியுள்ள சில புல்லுருவிகள் மேற்கண்டவாறு வேறு வேறு நாட்களில் அடிக்கடி சோதனை நடத்தி ஊடகங் களில் அது பற்றிய செய்திகளைத் தொடர்ந்து பரப்பி வருவதில் இருந்து, இந்த சோதனை களுக்கு பின்னணியில் இஸ்லாமியர்கள் மீது ஒரு தவறான பார்வையை ஏற்படுத்தி, அண்ணன் தம்பிகளாக, மாமன் மச்சான்களாக ஒற்றுமை யுடன் வாழும் தமிழக மக்களிடையே நல்லிணக் கத்தை கெடுத்து திமுக தலைமையலான தமிழக அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் பெரும் சதித்திட்டம் இருப்பதை தெரிந்து கொள்ளலாம்.

எனவே இத்தகைய அவசியமற்ற, சட்ட விரோத, தமிழ்நாட்டு மக்களிடையேயான நல்லிணக்கத்தை கெடுக்க வேண்டுமென்ற கெட்ட உள்நோக்கம் கொண்ட இந்த சோதனைகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டியதும், இந்த சோதனை சதித்திட்டத்தின் பின்னணியில் உள்ள காவல்துறை கருப்பாடுகளை கண்டறிந்து, அவர்கள் மீது சட்ட ரீதியான குற்றவியல் மற்றும் துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதும் தற்போதைய அவசர அவசிய தேவை ஆகும்.

இங்கு குறிப்பிட்டு சொல்ல வேண்டிய ஒரு விஷயம், திருச்சியை சேர்ந்த பல இஸ்லாமிய இளைஞர்களை கவுன்சலிங் கொடுக்கிறோம் என்று சொல்லி மிரட்டி உளவுத்துறை காவல் துறை போலிசார் சென்னைக்கு அழைத்துச் சென்று சில நாட்கள் சட்ட விரோதமாக அடைத்து வைத்து பலவாறு மிரட்டி அனுப்பி வருகின்றனர். இவ்வாறு கவுன்சலிங் என்ற ஒன்றே குற்றவியல் சட்டம் எதிலும் இல்லை. அவ்வாறு கவுன்சிலிங் கொடுக்கிறேன் பேர்வழி என்று கடந்த ஏழெட்டு மாதங்களுக்கு முன்பாக திருச்சியில் இருந்து உளவுத்துறை ISயை சேர்ந்த ஒரு காவல் அதிகாரி ஒருவரால் சென்னைக்கு அழைத்து செல்லப்பட்ட இரண்டு இஸ்லாமிய இளைஞர்களை கோவை செல்வபுரம் காவல் நிலையத்தில் இந்துத்துவ நபர் ஒருவரை கொலை செய்யும் திட்டத்துடன் தீவிரவாத எண்ணத்துடன் சென்றவர்களை வாகன சோதனையில் கைது செய்ததாக ஒரு பொய்யான வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தனர். அந்த வழக்கை NIAவுக்கு மாற்றவும் முயற்சித்தனர். அந்த வழக்கில் ஒருவருக்கு ஜாமீன் வழங்கிய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் எந்த தீவிரவாத செயல்பாடுகளும் இல்லாத யாரும் புகார் கொடுக்காத நிலையில் இந்த வழக்கில் UAPA தீவிரவாத தடுப்புச் சட்டம் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறி அவர்களுக்கு ஜாமீன் வழங்கினார்கள். அந்த தீர்ப்புக்கு பின்னரும் மேற்படி வழக்கில் பொய்யான வழக்கை ஜோடித்த குற்றம் செய்த திருச்சி உளவுத்துறையை சேர்ந்த அந்த நபர் உள்ளிட்ட கோவையை சேர்ந்த எந்த போலிசார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

இந்த நிலையில்தான் திருச்சியில் மட்டும் இதுவரையில் வெவ்வேறு நபர்களின் வீடுகளில் நேற்று வரையில் அடிக்கடி சோதனைகள் நடைபெற்று வருவதாக ஊடகங்களில் செய்திகள் வருகின்றன. அதிலும் வேறு எங்கும் இல்லாத வகையில் திருச்சி மாவட்டத்தில் ஒரு ழிமிகி வழக்கில் சாட்சியாக, NIAவுக்கு வழக்கில் உதவி செய்யும் உள்ள ஒருவரின் வீட்டில் மோப்ப நாய் மற்றும் வெடிகுண்டு சிறப்புப் படையுடன் சோதனைகளை நடத்தியதாக மேசமான செய்திகள் வெளிவருகின்றது. இவை அனைத்தும் மேற்சொன்னபடி கெட்ட உள்நோக்கம் கொண்டவை ஆகும்.

இங்கு குறிப்பிடப்பட்ட வேண்டிய ஒரு விஷயம் இன்றைய நவீன தகவல் தொழில்நுட்ப மின்னணு உலகில் இதுபோன்ற பழைமைவாத காட்டுமிராண்டித்தனமான சோதனைகள் இன்றியே எவரையும் காவல்துறை உளவுத் துறை யினரால் கண்காணிக்க முடியும். அதற்கான தொழில்நுட்பங்களை தமிழக காவல்துறை பெற்றுள்ளது. ஆனால் தமிழக காவல்துறையை சேர்ந்த சிலர் அவைகளை விடுத்து மேற்கண்ட வாறு தவறான பாதையில் செல்கிறார்கள் என்பது மிகவும் வேதனைக்குரியது ஆகும்.

எனவே தமிழக அரசு இஸ்லாமியர்கள் வீடுகளில் மேற்குறிப்பிட்டவாறு இத்தகைய அவசியமற்ற, சட்டவிரோத, நாட்டு மக்களிடை

யேயான நல்லிணக்கத்தை கெடுக்க வேண்டுமென்ற கெட்ட உள்நோக்கம் கொண்ட தமிழக காவல்துறையின் இந்த சோதனைகளை உடனடியாக தடுத்து நிறுத்தவும், இந்த சட்ட விரோதமான சோதனைகளை நடத்தி பொய்ச் செய்திகளை பரப்பிவரும் தமிழக உளவுத்துறை மற்றும் காவல் துறை அதிகாரிகளைக் கண்டறிந்து அவர்கள் மீது தக்க குற்றவியல் மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுத்து பணிநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கவும், இவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க நிவாரணம் அளிக்கவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தங்களை கீழே கையொப்பமிட்டுள்ள நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

**கென்னடி,**

தமிழ்தேச மக்கள் முன்னணி

5

பாதிக்கப்பட்டவர்களுக்கு தாக்க நிவாரணம் அளிக்கவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தங்களை கீழே கையொப்பமிட்டுள்ள நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

(1) ஜோ. கென்னடி - தமிழ்தேச மக்கள் முன்னணி 94430-79552

இணைப்பு:

1. கோவை பொய் வழக்கு பற்றிய சென்னை உயர்நீதிமன்ற ஜாமீன் உத்தரவு
2. பொய்யான வழக்குகளைக் காட்டி மாஜிஸ்ட்ரேட் பெறப்பட்ட வீட்டு சோதனை உத்தரவு

| COLLECTORATE - MONDAY GDP (COLLMGDP) PETITION | |
|---|---|
| மக்கள் குறை தீர்க்கும் நாள் (COLLMGDP) | |
| மனு எண் மற்றும் நாள் | TN/REV/TRY/I/COLLMGDP/28NOV22/4674208 & Date : 2022/11/28 |
| குறை தொடர்பான அரசுத் துறை | Revenue and Disaster Management Department (REV) |
| குறையின் வகை | Land Records - CRA |
| குறையின் உட்பிரிவு | Copy of Land Records - CRA |
| பொறுப்பு அலுவலர் | PA General To District Collector |
| மனுதாரர் பெயர் | ஜோ கென்னடி |
| குறை: பொது/ தனிநபர் | Individual Grievance |
| முகவரி : Thiruchirapalli-West (1), Trichy Rdo (92), Thiruchirappalli (TRY), Tamil Nadu, India. கைப்பேசி எண் : 9443079552 | |
| இது கணினி வழியாக உருவாக்கப்பட்ட அறிக்கை. அலுவலரின் கையொப்பம் தேவையற்றது. | |
| குறிப்பு: தங்களது மனு ஒப்படைப்பு மற்றும் அதன் மீதான இறுதி நடவடிக்கைக் குறித்து தங்களுடைய கைப்பேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படுகிறது. மனுவின் நிலை அறிய முதலமைச்சரின் உதவிமைய செயலியினை பதிவிறக்கம் செய்யவும்: https://zurl.to/cmhelpline | |



# தமிழகமெங்கும் காவல்துறையின் ரெய்டுகள்...

## கள ஆய்வு

திருச்சி மாவட்ட ஆட்சியரிடம் தரப்பட்ட மனுவில், "ஓர் உளவுத்துறை அதிகாரி - என்று குறிப்பிட்டுள்ளதே" என்பதை நமது நிருபர்கள் விசாரித்தபோது, பெயரைக் குறிப்பிடாவிட்டாலும், அண்மையில் சதாம் ஹூசைன் என்பவரின் வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம், நான்கு முறை தனது பிணை ஆணையில் குறிப்பிட்டுள்ள I.S. சுரேஷ் என்ற உளவுத்துறை அதிகாரிதான் எனத் தெரியவந்தது. அந்தப் பிணை ஆணையை மனுவோடு இணைத்துள்ளார்கள் எனத் தெரியவந்தது.

*28-11-2022* அன்று முதல்வர் ஸ்டாலின் அவர்கள் திருச்சி வரவிருந்ததால், மாவட்ட ஆட்சியர் அதில் ஈடுபட்டிருந்தார். இதனால் மூத்த அதிகாரி ஒருவர் அந்த மனுவைப் பெற்றுக் கொண்டு நகலில் கையெழுத்திட்டு, சமூக ஆர்வலர்களின் பிரதிநிதிகளிடம் தந்தார்.

"உடனடியாக இந்த மனுவை முதல்வர் அவர்களுக்கு அனுப்புகிறேன்" என்று உறுதியளித் திருக்கின்றார். - பொறுத்திருந்து பார்ப்போம்.

பின்னர், பத்திரிகையாளர்களுக்கு, சமூக ஆர்வலர்களின் பிரதிநிதி மூத்த வழக்கறிஞர் கென்னடி அவர்கள், பேட்டி அளித்தார்கள்.

(பேட்டியின் விபரம் - வைகறை வெளிச்சம், முகநூல் மற்றும் யூட்டுபில் வெளியிடப்பட்டுள்ளது)

அந்தப் பேட்டியில், மாநில காவல்துறை தமிழக முஸ்லிம்களை, ஆளும் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எதிராகத் திருப்பிட விரைந்து செயல்பட்டு வருகின்றது.

அது முழுக்க, முழுக்க ஒன்றிய அரசின் பிடிக்குள் போய்விட்டது என்றும் குறிப்பிட்டார்.

**திருவாரூரில் -** திருவாரூர் மாவட்ட ஆட்சியரிடமும் இதுபோன்றதொரு மனுக் கொடுக்கப் பட்டது.

**அதிராம்பட்டினம் -** அதிராம்பட்டினத்திலும் இதுபோன்ற சட்டத்திற்குப் புறம்பான பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அதில் ஒருவர் நீதிமன்ற காவலின் கீழ் வைக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் பிணைக்காக மூத்த வழக் கறிஞர் சின்னசாமி அவர்கள்தாம் வாதாடினார். நீதிபதியே எதிர்க்கட்சி வழக்கறிஞரைப்போல் வாதிட்டது பெரும் அதிர்ச்சியாக இருந்தது, என்றார் வழக்கறிஞர்.

குறிப்பிட்ட நபர் செல்போன் கடை வைத் திருக்கிறார். அவருடைய செல்போன் கடையி லிருந்து பல லட்சம் மதிப்புள்ள செல்போன்கள் எடுத்துச் செல்லப்பட்டதாக சம்பந்தப்பட்ட



சோதனை செய்துள்ளார்கள். வீட்டி லிருந்தவர்களின் மொபைல்களை யும், 1 லேப்டாப்பையும் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

இந்த சோதனையில் வீட்டில் ஏதேனும் வெடிமருந்துகள் உள்ளதா? என்பது போன்ற சோதனைகள் நடைபெற்றுள்ளது.

வரின் உறவினர்கள் நமது நிருபரிடம் தெரிவித்தார்கள்.

வழக்கை தஞ்சை தலைமை நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் சின்னசாமி நடத்துவார் என கைது செய்யப்பட்டவரின் குடும்பத்தார் கூறினார்கள்.

**நமது நிருபர்கள் வழக்கறிஞர் சின்னசாமி அவர்களிடம் கேட்டபோது, "இதுபோன்ற அநீதிகள் முஸ்லிம்கள் மீது பாயும் போது தட்டிக் கேட்க வேண்டிய நீதிமன்றங்கள் தலையாட்டு கின்றன. முஸ்லிம்கள் எச்சரிக்கையோடு இருந்து கொள்ளுங்கள்" என்றார்.**

- அதிரை, தஞ்சை, திருச்சி நிருபர்கள்.

**பரங்கிப்பேட்டை –** கடலூர் மாவட்டம், சிதம் பரத்திற்கு புதிதாக பொறுப்பில் வந்துள்ள ASP ரகுபதி அவர்களின் தலைமையின் கீழ்மட்ட அதிகாரிகளை வைத்து பரங்கிப்பேட்டையில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கோவையில் நடைபெற்ற கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் கடந்த 27.10.2022 அன்று காவல்துறை அதிகாரிகள் சுமார் 35க்கும் மேற்பட்டோர் சோதனை என்கிற பெயரில் எந்தவிதமான நீதிமன்ற அனுமதியின்றி வீட்டிற்குள் நுழைந்து சோதனை செய்துள் ளார்கள். காலையில் சுமார் 4:45 மணியளவில் பரங்கிப்பேட்டையை சேர்ந்த குத்புதீன் என்பவரின் வீட்டிற்கு சென்று குத்புதீன் எங்கே இருக்கின்றார் என்று பலமுறை திரும்ப திரும்ப கேட்டுள்ளார்கள். எதற்காக என்று வீட்டிலுள்ள வர்கள் கேட்டபோது எந்த பதிலையும் காவல் துறையினர் சொல்லவில்லை.

காவல்துறை அதிகாரிகள் சிலர் வீட்டில் முறையான அனுமதியின்றி நுழைந்து வீட்டை

காவல்துறையால் வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட மொபைல்களை இப்போது தருகிறோம் நாளை தருகிறோம் என்று சொல்லி அலைக்கழிக்கப்பட்டு இன்று 30.11.2022 வரையில் கொடுக்கப்படவில்லை.

இந்த சோதனையை அடுத்து குத்புதீன் இருக் கின்ற அவரது மாமியார் வீட்டிற்கு அழைத்து செல்ல வேண்டுமென்று காவல்துறையினர் அவரது தம்பியிடம் கூறியிருக்கின்றார்கள். அங்கேயும் எந்தவிதமான அனுமதியுமின்றி வெடிமருந்துகள் ஏதேனும் இருக்கின்றதா? என்று சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். அதை வீடியோவாக பதிவும் செய்துள்ளனர். இந்த சோதனையில் 8 மொபைல் போன்களில் 2 மொபைல்கள் வேலை செய்யாத மொபைல்கள் இதை மட்டும் திரும்ப கொடுத்துள்ளார்கள். இந்த 6 மொபைல்களும் 6 நபர்கள் தனிப்பட்ட முறையில் பயன்படுத்திக் கொண்டிருந்த மொபைல்கள். தமிழக அரசால் இலவசமாக வழங்கப்பட்ட 1 லேப்டாப்பையும் எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். இந்த தகவல்கள் தெரியாமல் ஏதோ 6 மொபைல்கள் கைபற்றப் பட்டதாக பொய்யான தகவல்களை சில பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றார்கள்.

குத்புதீன் அவர்களுக்கும் கோவை கார் சிலிண்டர் வெடிப்பிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று தெரிந்தும் அனாவசியமாக ஒருவருடைய மொபைலை காவல்துறை வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? அந்த மொபைலில் உள்ள போட்டோக்கள் மற்றும் அதிலுள்ளவைகளை காவல்துறையினர் காப்பி செய்துள்ளார்கள் என்று சொல்லப்பட்டது.

இந்த திடீர் சோதனையின் காரணமாக இருதய நோயில் பாதிக்கப்பட்ட குத்புதீன் அவர்களின் தாயார் மீண்டும் உடல்நிலை சரியில்லாத நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.



காவல்துறையின் இந்நிகழ்வினால் குத்புதீன் அவர்களும் அவர்களது குடும்பத்தாரும் மன வேதனையில் உள்ளார்கள்.

ஒன்றுமே இல்லாத விசயத்திற்காக காவல் துறையின் அடுத்தகட்ட நடவடிக்கையாக காவல் துறை அதிகாரிகள் சிலர் கடந்த 28.10.2022 அன்று குத்புதீன் அவர்களின் வீட்டிற்கு வந்து வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட மொபைல்கள் எடுக்கப்பட்ட இடத்தையும், வீட்டையும் வரைபடம் எடுத்து சென்றிருக் கின்றார்கள். சம்மந்தமே இல்லாதவரை கோவை கார் சிலிண்டர் குண்டுவெடிப்பில் சம்மந்தப் படுத்தும் செயல்களை செய்யும் சிதம்பரம் ASP ரகுபதி அவர்களின் இந்த நடவடிக்கை கண்டிக்கத் தக்கது.

NIA அதிகாரிகள் மற்றும் உளவுப் பிரிவுகளின் கண்காணிப்பில் உள்ள ஒருவராக குத்புதீன் இருக்கிறார். அவர் எங்கே செல்கிறார் எங்கே இருக்கிறார் என்று அவ்வப்போது உளவுப் பிரிவு அதிகாரிகளுக்கு தகவல்கள் கொடுத்து வருவது வழக்கம். இப்படியிருக்கையில் இவரின் வீட்டை திடீர் சோதனை செய்ததின் நோக்கம் என்ன? என்று புரியவில்லை. இதில் குத்புதீன் அவர்களது வீட்டிலிருந்து ASP ரகுபதி அவர் களின் தலைமையில் வந்த காவல்துறை அதிகாரி களால் எடுத்துச் செல்லப்பட்ட 8 மொபைல்கள் மற்றும் 1 லேப்டாப்களுக்கு முறையான ஆவணங் களில் கையெழுத்து வாங்கிக் கொண்டு செல்லவில்லை இதுதான் பல இடங்களில் நடந்துள்ளது. இதில் எந்த ஒரு ஆவணமும் கொடுக்காமல் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

**காவல்துறையின் கவனத்திற்கு**

தமிழகமெங்கும் நடக்கும் இந்த திடீர் சோதனையின்போதும், புதியதாக பதவிக்கு வந்திருக்கும் சிதம்பரம் ASP ரகுபதி அவர்கள் புகழுக்காக செய்கிறாரோ என்கிற சந்தேகம் எழுந்துள்ளது. ஒன்றுமே இல்லாத ஒரு விசயத்தை ஊதி பெரியதாக்கி தான் பெயர்வாங்க வேண்டு மென்ற நோக்கத்தில் தனிதனி நபர்களாக பயன் படுத்திக் கொண்டிருந்த மொபைல்களை கைப் பற்றியதாக சொல்ல வேண்டிய எந்த அவசியமு மில்லை.

காவல்துறையாலும், NIA போன்ற உளவு அமைப்புகளால் தமிழகத்தில் திடீர் சோதனை கள் நடைபெறுவது வழக்கம். அதுபோன்ற சோதனைகளில் சோதனை செய்யப்பட இருக் கின்ற வீட்டில் உடல்நலம் சரியில்லாதவர்கள் இருப்பார்கள். அவர்களின் உடல்நலன் கருதி பதற்றம் ஏதும் ஏற்படாமலும் சிரமம் கொடுக்கா மலும் தங்களின் மேல்மட்ட அதிகாரிகளின் ஆணைக்கு இணங்க தாராளமாக உங்களது சோதனைகளை செய்துக் கொள்ளுங்கள் இது யாரும் தடுக்க மாட்டார்கள் விமர்சனத்திற்கு உள்ளாகாது. இதுபோன்ற நிகழ்வுகளில் சோதனை செய்ய இருக்கின்ற வீட்டில், வீட்டில் உள்ளவர் களிடத்தில் முறையான அனுமதியோடு சோதனை செய்யுங்கள், இதோடு வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும் பொருட் கள், ஆவணங்கள் எதுவாக இருந்தாலும் சரி முறையாக என்ன எடுக்கப்பட்டது என்பதை பதிவு

செய்து வீட்டிலிருப்பவரிடத்தில் கையெழுத்து பெற்று அதன் ஒரு நகலை கொடுத்துவிட்டு எடுத்துச் செல்லுங்கள் NIA போன்ற அமைப்பு களைப் போன்று.

இந்த செயல்பாடுகள் மேற்சொன்ன சோதனையில் பின்பற்றப்படவில்லை.

(வாசகர்கள் நமது "வைகறை வெளிச்சம்" கள ஆய்வுகளை படிக்குமாறு கேட்டுக் கொள்கின் றோம்) – நமது நிருபர் பரங்கிப்பேட்டை

**சென்னையில்** – சென்னையிலும் இவை போன்று சட்ட வரைமுறைகள் எதையும் பின் பற்றாமல், பல சோதனைகளை நமது காவல் துறையினர் நடத்தியுள்ளார்கள். கையில் கிடைத் ததை யெல்லாம் அள்ளிச் சென்றுள்ளனர்.

இலக்கியங்களும் முஸ்லிம்களின் வீட்டில் இருந்தால் தீவிரவாதத்தை தூண்டுபவையாகக் கருதுப்படும்.

இதில் வேடிக்கையும், வேதனையும் என்ன வெனில் V.D. சாவர்க்கர் - இவர்தான் இந்துத் துவ சிற்பி என அறியப்படுபவர். இவர் எழுதிய நூல் 'எரிமலை' பெரிதாகப் பீற்றப்படும் இந்த நூலில் என்னதான் சொல்ல வருகின்றார் என்பதை அறிந்திட ஒருவர் அந்த நூலை வாங்கி வைத்திருக்கின்றார். அந்த நூலையும் அள்ளிச் சென்றிருக்கின்றார்கள். காரணம் என்னவென்றால் அதில் 'எரி' என்ற இரண்டு எழுத்துக்கள் இருக்கின்றன. அது முஸ்லிம்கள் வீட்டில் இருக்கின்றன அதுதான் தவறு.

சென்னையிலிருந்து நமது நிருபர் மற்றும் வழக்கறிஞர்கள்.

இந்த இதழ் அச்சுக்கு செல்லும்வரை இன்னும் சில கள ஆய்வுகளுக்காக காத்திருந்தோம், வரவில்லை. அவற்றை விளக்கமாக அடுத்த இதழில் வெளியிடுவோம்.










# சங்கப்பரிவாரத்தின் வெடிகுண்டு பயிற்சி முகாம்கள் ஆய்வறிக்கை !

**எஸ்.எம்.முஷ்ரிஃப்**

முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை

குண்டுகளை வைத்திடும் பயிற்சிகள் நீண்ட நாள்களாகவே வழங்கப்பட்டு வருகின்றன. இது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வழங்கப்படுகின்றது. இந்தப் பயிற்சிகள், ஆர்.எஸ்.எஸ். அபிநவ் பாரத், பஜ்ரங்தளம், ஜெய் வந்தே மாதரம், வி.ஹெச்.பி. விஷ்வ இந்து பரீஷத் ஆகிய அமைப்புகளின் சார்பில் வழங்கப்படுகின்றது.

### ஜெலட்டின் வெடிகுண்டு பயிற்சி முகாம் பூனா (2000)

பஜ்ரங் தளம் என்ற சங்கப்பரிவார அமைப்பு, பூனாவில் தனது தொண்டர்களுக்கு ஜெலட்டின் ஸ்டிக் – என்ற வெடி குண்டுகளை எப்படி கையாள்வது என்ற பயிற்சியை வழங்கியது. இதில் மாநில அளவிலான தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்கள் 40 முதல் 50 பேர் வரை கலந்துகொண்டார்கள். இந்த பயிற்சி முகாமிற்கு ஹிம்மான்ஷு பாண்டே என்பவர்தான் தலைவர். இவர் நந்தேத் என்னுமிடத்தைச் சார்ந்தவர். இவர் 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் குண்டுகளைச் செய்துகொண்டிருக்கும் போது இறந்து போனார்.

நந்தேதில் இந்த குண்டு செய்யும் பயிற்சி முகாமை ஏற்படுத்தியவர் மிலிண்ட் பாண்டே என்பவர். இந்த மிலிண்ட் பாண்டே, அகில இந்திய அளவில் இதுபோன்ற பயிற்சிகளை வழங்கிடும் தலைமைப் பயிற்சியாளர். இந்த உண்மை நந்தேத் குண்டு வெடிப்பை புலன் விசாரணை செய்தபோது கண்டுபிடிக்கப்பட்டது.

### ஆயுதங்களை பயன்படுத்துவது, குண்டுகளை தயாரிப்பது, இவற்றிற்கான பயிற்சி முகாம், நாக்பூர் 2001

இந்த பயிற்சி முகாம் 40 நாள்கள் நாக்பூர் போன்ஸலா மிலிட்டரி பள்ளிக்கூடத்தில் வைத்து வழங்கப்பட்டது. இதில் பஜ்ரங் தளம் என்ற இந்துத் தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் கலந்துகொண்டார்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 115 தீவிரவாதிகள் இதில் கலந்துகொண்டார்கள். மராட்டிய மாநிலத்திலிருந்து மட்டும் 54 பேர் கலந்துகொண்டார்கள்.

இந்தப் பயிற்சியை, இப்போது நமது இராணுவத்தில் பணிபுரியும் இராணுவ அதிகாரிகள், நமது இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள் ஆகியோர் வழங்கியுள்ளார்கள். அதேபோல் 'IB' என்ற மத்திய உளவுத்துறையைச் சார்ந்த அதிகாரிகளும், இந்தப் பயிற்சியை வழங்கினார்கள். இந்த உண்மைகள், நந்தேத் குண்டு வெடிப்பு 2006, மாலேகான் குண்டு வெடிப்பு 2008 ஆகியவற்றை புலன் விசாரணை செய்தபோது, கண்டு பிடிக்கப்பட்டன.

**ஆர்.டி.எக்ஸ் வகை உயர்தர வெடி பொருள்களைக் கொண்டு குண்டு தயாரிக்கும் பயிற்சி முகாம். ஆகான்ஷா (Akansha Resort) உல்லாச பயண விடுதியில் வைத்து வழங்கப்பட்ட பயிற்சி 2003**

ஆகான்ஷா உல்லாச பயணிகள் விடுதியில் (பூனா) வைத்து ஓர் தீவிரவாத பயிற்சி முகாம் நடத்தப்பெற்றது. இதில் ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருள்களைக் கொண்டு எப்படி வெடி குண்டுகளைச் செய்வது என்பதும், அவற்றை எப்படி வெடிக்கச் செய்வது என்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் 50 இளைஞர்கள் கலந்து கொண்டார்கள். இந்தப் பயிற்சிகளை மித்துன் சக்கரவர்த்தி என்பவர்தான் வழங்கினார். அத்தோடு ஏராளமான ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருள்களையும் கொடுத்தார். இந்தப் பயிற்சி முகாமிலும் முன்னாள் இன்னாள் இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டார்கள். அத்தோடு குண்டுகளை செய்வதிலும், அவற்றை வெடிக்கச் செய்வதிலும் மிகப்பெரிய நிபுணர் என அறியப் பட்ட ராகேஷ் டிவாடி (பூனா) என்பவரும் பயிற்சி களை வழங்கினார். இவரோடு இன்னும் இரண்டு இராசயண பேராசிரியர்கள் கலந்துகொண் டார்கள். அவர்களை டாக்டர் ஷரத் குந்தி, பேராசிரியர் டியோ என்றும் அடையாளப்படுத்து கின்றார்கள். இருவரும் பூனாவைச் சார்ந்தவர்கள்.

**ஆயுதங்கள், லத்திகள் போன்றவற்றில் இந்து ராஷ்டிராவுக்காகப் பயிற்சி! இந்தப் பயிற்சி நாடெங்கும் கொடுக்கப்படுகின்றது மே 2002!**

சங்கப் பரிவாரத்தைச் சார்ந்த 154 உறுப்பினர் களோடு பூனாவில் வைத்து இந்த இந்து ராஷ்டிராவுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் 15 முதல் 45 வயது வரை உள்ளவர்கள் கலந்துகொண்டார்கள். இந்தப் பயிற்சிகள் 21 நாள்களுக்கு வழங்கப்பட்டன. பயிற்சி அரங்கத் திற்கு வெளியே பூட்டுப் போட்டுப் பூட்டி விட்டார்கள். பயிற்சி எடுப்பவர்கள் யாரும் பயிற்சி காலம் முடியும் வரை வெளியே செல்லக்கூடாது, முடியாது. அதேபோல் பார்வையாளர்கள் யாரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இதில் லக்கி, லெசிம் (தீவிர உடற்பயிற்சி) யோகா, கபாடி போன்றவையும் பயிற்சியின் அங்கங்களாக நடந்தன. 71 பயிற்சி முகாம் ஒரே நேரத்தில் 21, நாள்களுக்கு நாடெங்கும் நடத்தப்பட்டன.

மூத்த குடிமக்களுக்கு அதாவது 45 வயதிலி ருந்து 60 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தனியாக இதேபோன்ற பயிற்சி முகாம் நடத்தப்பட்டன. இத்தகையதொரு பயிற்சி முகாம் மராட்டிய மாநிலம் லத்தூரில் நடத்தப்பட்டது.

(Source : Pune Newsline, The Indian Express 15 May -2002)



### பஜ்ரங்தள் ஆயுத – பயிற்சி!
### (போபால் மே 2002)

வெடி பொருள்கள், வெடி குண்டுகள் இவற்றில் ஒருவார பயிற்சி முகாம். போப்பாலில் (மத்திய பிரதேசம்) பஜ்ரங்தள் சார்பில் நடைபெற்றது. இதில் 150 பஜ்ரங்தள் இளைஞர்கள் கலந்து கொண்டார்கள். வெளி உலகிற்கு பாகிஸ்தானோடு போர் வந்தால் போர் செய்யத்தான் இந்தப் பயிற்சி எனப் பிரகடனப்படுத்தப்பட்டது.

(Source : Times of India, Pune, 31 May 2002)

### விஷ்வ ஹிந்த் பரிஷத்தின் பெண்களுக்கான கத்தி, வாள், கராத்தே பயிற்சி! மே 2003

இந்தப் பயிற்சி மும்பையில் வைத்து வழங்கப் பெற்றது. மே–17, 2003 முதல் பெண்களுக்கு வழங்கப்பட்டது.

### ஆர்.எஸ்.எஸ். நாடு தழுவிய பெண்களுக்கானப் பயிற்சி! மே–2003

இந்தப் பயிற்சி நாடெங்கிலுமிருந்து பெண் களைத் தருவித்து, கான்பூரில் 25,மே 2003இல் நடைபெற்றது. ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள், 70 பெண்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சியைத் தந்தார்கள். இதில் துப்பாக்கிகளில் எப்படி குண்டுகளை நிரப்புவது? எப்படி குறிபார்ப்பது? எப்படிச் சுடுவது? என்பனவற்றிற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஜூடோ பயிற்சியாளர்கள்! சண்டைப் பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தார்கள். இன்னும் ஆறு பயிற்சி முகாம்கள் உத்திரப் பிரதே சத்தின் பல பகுதிகளில் வழங்கப்பட்டது. நாடு முழுவதும் இந்தப் பயிற்சிகள் 73 இடங்களில் வழங்கப்பட்டன.

(Source : Sunday Express, Pune, 1 June,2003)

### <u>ஆர்.டி.எக்ஸ் வகை வெண் குண்டுகளைத் தயாரிக்கும் பயிற்சி முகாம். பாக்லி மத்திய பிரதேசம் 2006</u>

2006 மாலேகான் குண்டு வெடிப்பு, அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பு, மக்கா மஸ்ஜித், குண்டு வெடிப்பு ஆகியவற்றை புலன்விசாரணை செய்து கொண்டிருந்த அதிகாரிகளுக்கு, ஓர் பயிற்சி முகாம் பற்றி தெரியவந்தது. அது, இந்தக் குண்டு வெடிப்புகளை நிகழ்த்திட முன் தயாரிப்பாக, பயிற்சி முகாம் நடத்தப்பட்டி ருக்கின்றது. இந்தப் பயிற்சியில், ஆர்.எஸ்.எஸ். அபிநவ்பாரத், ஜெய் வந்தே மாதரம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த



தீவிரவாதிகள் கலந்துகொண்டு பயிற்சி எடுத் தார்கள். இதுபாக்லி மத்தியப் பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்த முகாமில் சுனில் ஜோஷி இராமச்சந்திர கல்சங்கரா, சந்தீப் டாங்கே, லோகேஷ் ஷர்மா ஆகிய தீவிரவாதிகள் ஆர்.டி.எக்ஸ் வகை குண்டு களைத் தயாரிக்கப் பயிற்சி தந்தார்கள்.

### ஆர்.எஸ்.எஸ். அபிநவ் பாரத் ஆகிய அமைப்பைச் சார்ந்தவர்களுக்கு பயிற்சி 2007–2008

இந்தப் பயிற்சி மத்தியப் பிரதேசத்தைச் சார்ந்த பஞ்சாமதி என்ற இடத்தில் வைத்துத் தரப்பட்டது. இதுவும் ஆர்.டி.எக்ஸ் வகை குண்டுகளைத் தயாரிப்பதற்குத் தரப்பட்டதே! குண்டுகளைத் தயாரிப்பதற்கு தரப்பட்ட பயிற்சியோடு ஆயுதங் களை கையாளுவதற்கான பயிற்சிகளும் தரப் பட்டன. மேலே சொன்ன அமைப்புகளைச் சார்ந்த தீவிரவாதிகள் இதில் கலந்துகொண்டார் கள். பயிற்சியின் முடிவில், காலோனல், பிரசாத் புரோகித் மிகவும் ஆக்ரோஷமானதொரு உரையை நிகழ்த்தினார். இந்த தகவல் புரோகித் இன் மடிக் கணினி கைப்பற்றப்பட்டபோது கிடைத்தது.

## தடை செய்வதற்குத் தகுதியானவை

ஆக, மேலே சொன்ன அமைப்புகளுக்கு எதிராக, மறுக்க முடியாத உருப்படியான ஆதாரங்கள் இருக்கின்றன. தடை செய்வதற்குத் தேவையான ஆதாரங்களைவிட அதிகமாகவே ஆதாரங்கள் இருக்கின்றன.

இந்த ஆதாரங்களின் அடிப்படையில் ஆர்.எஸ்.எஸ்., அபிநவ்பாரத், விஷ்வ ஹிந்து பரீஷத், ஜெய் வந்தே மாதரம், பஜ்ரங்தள், சனாதன் சாஸ்தா ஆகியவற்றை உச்ச நீதிமன்றம் தடை செய்திருக்க இயலும். ஆனால், தடை செய்ய வில்லை.

இந்த அமைப்புகளைத் தடை செய்திருந்தால், நாட்டில் குண்டு வெடிப்புகள், அதனால் அப்பாவி மக்கள் மடிந்துபோவது, இவை யெல்லாம் அடியோடு நிறுத்தப் பட்டிருக்கும்.

இந்த அமைப்புகள் ஈடுபட்ட குண்டு வெடிப்புகள், அவற்றின் செயல்பாடுகள் எல்லாம் நம் நாட்டிலிருக்கும் எல்லாச் சட்டங்களுக்கும் எதிரானவை, பொதுமக்களைக் கொலை செய்து, பொது அமைதிக்குப் பக்கம் விளைவிப்பவை. நிரந்தரமாக இந்தியாவின் அமைதியைக் குலைத் துக் கொண்டிருப்பவை. 'ஊபா' என்ற சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு எதிரான சட்டத்தின் கீழ் தடை செய்திருக்க வேண்டியவை. ஆனால், உச்ச நீதிமன்றம், இந்தத் திசையில் கனைத்துக் காட்டிடவில்லை.

(இத்தோடு வாசகர்கள், வேர்கள் வெளியீட்ட கத்தின் 'இந்துத்துவா' தீவிரவாதிகள், நாட்டின் செல்லப்பிள்ளைகளா? என்ற நூலைப் படிக்கவும்)

## உச்ச நீதிமன்றத்தில் "மிகவும் குரூரமான பாரபட்சம்"

நிலைமை இவ்வாறிருக்க, சிமி என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் செப்டம்பர் 2000இல் தடை செய்யப்பட்டது. அதன் உறுப்பி னர்கள் மீது நூற்றுக்கணக்கான வழக்குகள் புனை யப்பட்டன. அனைத்திலும் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் ஒவ்வொரு வழக்கிலிருந்தும் விடுதலை செய்யப்படும் போதும் அவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கில் நம்பகத் தன்மையுள்ள எந்த சாட்சியமுமில்லை என்றே நீதிமன்றங்கள் தீர்ப்புக் கூறியுள்ளன.

அஜித்ஷாஹி என்ற மிகச் சிறந்த பத்திரிகை யாளர் ஒருவர் 'சிமி' என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தைப் பற்றி மிகவும் ஆழமானதொரு கள ஆய்வை ஆராய்ச்சியை மேற்கொண்டார். முடிவில் அந்தக் கள ஆய்வை தொடர் கட்டுரையாக "தெஹல்கா" பத்திரிகை யில் வெளியிட்டார். அவை ஜூலை இதழில் தொடங்கி ஆகஸ்ட் 2008 வரை வெளிவந்தது. (தெஹல்கா ஆங்கில வார இதழ் என்பது குறிப்பிடத்தக்கது).

பின்னர் 'ஊபா' சட்டத்தின்கீழ் அமைக்கப் பட்ட தீர்ப்பாயம் 2008ஆம் ஆண்டு சிமி (எ) இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் மீதான தடையை நீக்கியது. தீர்ப்பாயம் தந்த உத்தரவை எடுத்துக்கொண்டு (காங்கிரஸ் அரசு) உச்ச நீதிமன்றம் சென்றது, அதற்கு உச்ச நீதிமன்றம், கண்ணைப் பொத்திக்கொண்டு, ஒரு தடை (Stay)யைத் தந்தது. அதாவது, தீர்ப்பாயம் சிமி மீதான தடையை நீக்கியதைத் தடை செய்தது. (தற்காலிகமாக நிறுத்தி வைத்தது) அது அந்தத் தடை இன்றளவும் தொடருகின்றது. இது மிகவும் குரூரம் நிறைந்த ஒரு பாரபட்சமாகும். நடுவுநிலை தவறிய செயல். அடிப்படை உரிமையை அப்பட்டமாக மீறியச் செயல்.

## உச்ச நீதிமன்றம் வாய்ப்பைத் தவற விட்டுவிட்டது

அஸ்மி – சுவாந்த் ஆகிய இருவரும் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்த இந்த மனு உச்ச நீதி மன்றத்திற்கு மிகச் சிறந்ததொரு வாய்ப்பினை நல்கியது. அது, நாட்டின் தீவிரவாத செயல்களைக் குறைப்பதற்கு அல்லது ஒரேயடியாக நிறுத்து வதற்குரிய வாய்ப்பாகும். ஆமாம், இந்த மனுவை தீர விசாரித்து, தீவிரவாதங்களையும், குண்டு வெடிப்புகளையும் தடுக்க வேண்டும் என்ற அக்கறையுடன் தீர்ப்பு வழங்கி இருந்தால் நிச்சயமாக நாட்டில் தீவிரவாதம் வேரோடும், வேரடி மண்ணோடும் பிடுங்கி எறியப்பட்டி ருக்கும். அத்தோடு தானாகவே நீதிமன்றம் இன்னொரு முடிவுக்கும் வந்திருக்கும். அது, நீதித்துறையையே ஓர் ஒழுங்குக்கு உள் கொண்டு வந்திட வேண்டும் என்பதே அந்த முடிவு.

ஆனால், இந்த அரிய வாய்ப்பை நீதிமன்றம் தவற விட்டுவிட்டது. 27 ஆகஸ்ட் 2012இல் வாக்களித்தபடி கிடப்பில் கிடக்கும் தீவிரவாத வழக்குகளை மறு ஆய்வுக்கு உட்படுத்த ஒரு



ஆணைப் பிறப்பித்திருந்தால், நிச்சயமாக அப்பாவிகளுக்கு நிரம்பவே நிவாரணங்கள் கிடைத்திருக்கும். அதேபோல் இந்திய அரசுக்கு ஒரு தாக்கீதை அனுப்பி அதில் ஆர்.எஸ்.எஸ்., அபிநவ்பாரத், இன்னும் இவற்றின் இணை அமைப்புகள் கிளை அமைப்புகள் இவற்றைத் தடை செய்திட பரிசீலிக்க வேண்டும் எனக் கேட்டிருந்தால், அந்த தாக்கீதே இவர்களை பீதியில் ஆழ்த்தி இருக்கும். குண்டுகளை வைத்து அப்பாவி மக்களைக் கொலை செய்வதை குறைத் திருப் பார்கள் அல்லது கைவிட்டிருப்பார்கள். பல அப்பாவி முஸ்லிம் இளைஞர்களின் வாழ்க்கை காப்பாற்றப்பட்டிருக்கும்.


இந்தியாவில் தீவிரவாதத்தைச் செய்து கொண்டிருப்பது யார் என்ற உண்மை உலகுக் குத் தெரிய வந்திருக்கும். 2012க்குப் பின் குண்டு வெடிப்புகளால் ஏற்பட்ட விளைவுகள் தடுக்கப் பட்டிருக்கும். கீழே உள்ள நீதிமன்றங்கள் இதுபோன்ற வழக்குகளில் ஏனோ, தானோ எனச் செயல்படுவதை நிறுத்தி இருப்பார்கள். இவையெல்லாம் தானாக விளையும் சில நன்மைகள் தாம் உண்மையில் இன்னும் பல நன்மைகள் விளைந்திடும்.

அடுத்து என்ன?

அஸ்மி – சுவாந்த் ஆகியோரின் மனுவின் கீழ் இன்னொரு ரிட் மனுவை அல்லது பொதுநல வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தொடுக்க இயலுமா? அதில் 2012க்குப் பின் நாட்டில் நடந்த தீவிரவாத செயல்களையும், இணைத்து தந்திடலாமா? உச்ச நீதிமன்றம் அஸ்மி சுவாந்த் ஆகியோரின் மனுவில் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டி, இந்த மனுவை அக்கறையுடன் விசாரிக்க வேண்டும் எனக் கோரலாமா? அல்லது தலைமை நீதிபதியிடம் ஒரு மனுவைத் தரலாமா? அந்தக் கோரிக்கையில், கீழ் நீதிமன்றங்களைப் பற்றிய ஒரு விசாரணையை மேற்கொள்ள வேண்டும், குறிப்பாக தீவிரவாத வழக்குகளை அவை விசாரித்த முறையை மீட்பார்வைக்கு உள்படுத்த வேண்டும் எனக் கோரலாமா? அதில் கீழ் நீதிமன்றங்கள் நாம் நூலில் சுட்டிக் காட்டியபடி செய்த தவறுகளை யும், குளறுபடிகளையும் சுட்டிக்காட்டலாமா? இதில் தேசிய மனித உரிமை ஆணையத்தை அணுகிடலாமா? இதில் குடியரசு தலைவர் பிரதம அமைச்சரையும் ஒன்றிய உள்துறை அமைச்ச ரையும் இணைத்திடலாமா? அவர்களிடமும் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைச் சொல்லிடலாமா?

இத்தனை கேள்விகளையும் முன் வைத்து, தன்னார்வ குழுக்கள், சமுதாய ஆர்வலர்கள், வழக் கறிஞர்கள், நாட்டின் ஒற்றுமையிலும் ஒருமைப் பாட்டிலும் ஆர்வம் உள்ளவர்கள் ஆகிய அனை வரும் சீர்தூக்கிப் பார்த்திட வேண்டும்.

அடுத்து என்ன? என்பதில் ஒர் முடிவுக்கு வந்திட வேண்டும். எல்லாம் எப்படி வேண்டு மானாலும் ஆகட்டும் என விட்டுவிடுவது நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டை யும் சிதைத்து, நாட்டை சின்னாபின்னமாக்கி அழித்துவிடும்.





# உளவுத்துறைக்கு வேலை போச்சா

அப்பாஸிய மன்னர் அல்காதிர் பில்லாஹ் ஓர் இரவில், நாட்டு மக்களின் சூழ்நிலையை அறிந்துகொள்ள பக்தாதின் சந்தைகளில் மாறு வேடத்தில் வலம் வந்தார். ஒரு நபர் மற்றொரு நபரிடம் இவ்வாறு கூறுவதை செவிமடுத்தார். "நமக்கு நேர்ந்த கதி இந்த மன்னரது ஆட்சிக் காலம் நீண்டுக் கொண்டே செல்கிறது. எந்தவொரு நபருக்கும் அவரிடம் எந்தவொரு இலாபமும் கிடைப்பதில்லை"

அடுத்த நாள் இவ்வாறு பேசிய மனிதனை அரசவைக்கு அழைத்து வருமாறு மன்னர் ஆணையிட்டார்.அந்த மனிதன் அரசவைக்கு அழைத்து வரப்பட்டார். வந்த மனிதனிடம் நீ என்ன பணி செய்கிறாய்? என்று மன்னர் கேட்டார்

அதற்கு அந்த மனிதன்:

"நான் ஒற்றர்களில் (உளவாளி)

ஒருவன். மக்களின் இரகசியங்களை, சூழ் நிலைகளை, அரசாங்கத்திற்கு எதிராக செய்யக் கூடிய சதிகளை எங்களின் மூலம் அரசு அதிகாரிகள் தெரிந்துக் கொள்வார்கள். ஆனால் இப்போது புதிய மன்னன் நல்ல முறையில் ஆட்சி செய்வதால் எங்களை போன்ற ஒற்றர்களுக்கு வேலையில் லாமல் போய்விட்டது. எங்களது வாழ்கை மிகப்பெரிய சிரமத்தில் சென்றுக்கொண்டி ருக்கிறது."

இதனை கேட்ட மன்னர் "உன்னை போன்ற மற்ற ஒற்றர்களை உனக்கு தெரியுமா?" எனக்கு நிறைய நபர்களை தெரியும் என்று அவன் கூறினான். உடனே அவர்கள் அனைவரது பெயர் களும் எழுதப்பட்டது. அவர்கள் அனைவரும் அரசவைக்கு வரவழைக்கப்பட்டனர்.

அனைவருக்குமே சம்பளம் குறிப்பிடுமாறும், அவர்கள் அனைவருமே இஸ்லாமிய பேரரசிற் கும் அதன் எதிரி நாடுகளுக்கும் மத்தியில் உள்ள எல்லைகளுக்கு இடமாற்றப்படுமாறும், இஸ்லாத்திற்கு எதிராக இஸ்லாமிய பேரரசிற்கு எதிராக எதிரி நாடுகள் தீட்டும் திட்டங்களை கண்டறியும் உளவாளிகளாக நியமிக்கமாறும் மன்னர் உத்தரவு பிறப்பித்தார்.

அதற்கு பின்னர் மன்னர் தன்னை சுற்றி இருந்தவர்களை நோக்கி திரும்பி இவ்வாறு கூறினார்

"அறிந்துக் கொள்ளுங்கள்!!!! நிச்சயமாக இவர்களது உள்ளங்கள் காழ்ப்புணர்ச்சியால் நிரம்பி உள்ளது. முஸ்லிம்களின் மீது கொண்டி ருக்க கூடிய இந்த காழ்ப்புணர்ச்சியை வெளி யேற்றியே ஆக வேண்டும். இந்த உணர்வு எதிரிகளின் பால் எதிரொலிப்பதே சாலச்சிறந்தது. இவர்களை கொண்டு முஸ்லிம்களை புண்படுத்த நாம் விரும்பவில்லை".

மூலம் : வஃபாதுல் வஃபயாத்

**தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**




ஐரோப்பாவின் உக்ரைன் நாட்டுக்கும், ஐரோப்பா - ஆசியா ஆகிய இரு கண்டங்களிலும் பரவி இருக்கும் ரஷ்யாவிற்கும் இடையில் பிப்ரவரி 24-2022 முதல் போர் உக்கிரமமாக நடந்து வருகிறது .

உக்ரைன் ஒரு ஏழை நாடு. அதன் அதிபர் செலன்ஸ்கி. இவர் ஒரு யூதர். சிரிப்பு நடிகர் கூட.

இவரைக் கொண்டு மேற்கத்திய வெள்ளை கிறிஸ்தவ உலகம் ரஷ்யாவுடன் மறைமுக போர் செய்து வருகின்றது. இவ்வாறு நாம் இந்த முடிவுக்கு வர காரணம், ஒரு ஏழை நாட்டுக்கு எந்தவித நிபந்தனையுமின்றி பண பரிவர்த்தனையுமின்றி தங்கு தடையில்லாமல் வெள்ளை உலகம் அதிநவீன ஆயுதங்களை

# துருக்கியின் இரக்கமும் இஸ்ரேலின் கெடுபிடியும்

## (உக்ரைனின் தானிய ஏற்றுமதி உடன்பாடு)

கொடுத்து, போரைச் செய்கின்றது. அதிலிருந்து இதை புரிந்து கொள்ளலாம். இப்போருக்கு பல காரணங்கள் உள்ளன.

இந்த ஏழை நாடு, தானிய உற்பத்தியை சார்ந்து இருக்கும் விவசாய நாடு. இதன் தானியங்கள் உலகின் பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. போர் உக்கிரமாக நடக்கும் கிழக்கு உக்ரைன் - அதாவது ரஷ்யாவின் எல்லைப் பகுதியில் தான் அதிக அளவு தானிய உற்பத்தி நடக்கிறது. இத்தானியங்கள் அருகே இருக்கும் கருங்கடல் வழியே ஏற்றுமதி செய்யப்படுகிறது. உக்ரைனின் இக்கருங்கடல் பகுதியில் 90% சதவிகிதத்தை ரஷ்யா கைப்பற்றியுள்ளதால் உக்ரைனின் தானிய ஏற்றுமதி தடைப்பட்டது. மேலும் துறைமுக கடல் பகுதியில் உக்ரைனே கன்னி வெடிகளைப் புதைத்து உள்ளதால் இதன் ஏற்றுமதி முற்றாகத் தடைப்பட்டது.

இச் சூழலில் வெள்ளை ஐரோப்பிய கிறிஸ்தவ உலகத்தை சேர்ந்த அனைத்து நாடுகளும் - பெலாரஸ் நாட்டை தவிர்த்து - உக்ரைனை உசுப்பேற்றி வருவதால், உக்ரைனின் தானியத்தை சார்ந்து வாழும் ஆப்பிரிக்க மற்றும் ஆசிய நாட்டு மக்கள் பட்டினி கிடந்து இறப்பதை கண்டு கொள்ளவில்லை. போப்பும் சில சம்பிரதாய முயற்சியோடு நிறுத்தி கொண்டார். இவருடைய தடபுடலான எந்த காரியத்தையும் மீடியாவில் காண முடியவில்லை.

இதற்கு முன் 2016 மார்ச் மற்றும் 2019 ஏப்ரல் மாதத்தில் முறையே அகதிகள் சந்திப்பில் அகதிகளின் செருப்புகளையும்தெற்கு சூடான் அதிபரின் செருப்பையும் முத்தமிட்டு உணர்ச்சிபூர்வமாக



போப்-இன் பணிப்பும் பாசமும்

நடந்து கொண்ட போப் பிரான்சிஸ், இந்த தானிய ஏற்றுமதி பிரச்சினையால் பட்டினி சாவை எதிர் நோக்கிய பல கோடி மக்களை மறந்து விட்டார்.

இதுபோன்ற உணர்ச்சிபூர்வ நடவடிக் கையை உக்ரைனின் யூத அதிபர் செலன்ஸ்கி யிடமும், ரஷ்ய அதிபர் புதினிடமும் காட்டி அவ் விருவரையும் சமாதானத்திற்கு பணிய வைக்க முடியாது என உணர்ந்திருப்பார் போலும்.

இதற்கிடையில் அண்டை முஸ்லீம் நாடான துருக்கி இந்த அக்கிரமத்தை பொறுக்க முடியாமல், உக்ரைன் மற்றும் ரஷ்யாவிடம் பேச்சுவார்த்தை நடத்தி இரக்கத்துடன் நடந்து கொள்ள பொறுப் பேற்க வேண்டுகோள் விடுத்தது. இருதரப்பும் பச்சை சமிக்ஞை காட்டவே துரிதமாக களத்தில் இறங்கியது துருக்கி. மற்றவர்களை போல் "பத்திரிகைகளுக்கு நல்லெண்ண அறிக்கை" விட்டுவிட்டு நாங்களும் உலகில் இருக்கிறோம் என காட்டிக் கொள்ளவும் அத்தோடு நிறுத்திக் கொள்ளவுமில்லை உக்ரைன்.

துருக்கியின் முயற்சி பயனளித்தது. வல்லர சான ரஷ்யா எதிரியான உக்ரைன் துறைமுகத்தி லிருந்து தானியங்கள் ஏற்றுமதி செய்ய அனுமதித் தது. தானியங்களை ஏற்றி செல்ல வரும் கப்பல் களிடம் தன் அதிகாரத்தை காட்டுகிறேன் என்ற தொனியில் தொல்லைகள் தந்தும், கெடுபிடிகள் காட்டியும், காலதாமதம் செய்வித்தும் தன் ஆணவபோக்கைக் காட்டாமல் நடந்து கொண்டது ரஷ்யா . சுருக்கமாக சொன்னால் ஏற்றுமதிக்கு உகந்த சூழலுக்கு உறுதுணையாக இருந்து, துருக்கி கேட்டுக்கொண்டதைப் போல் மனிதாபிமானத்தை காட்டி வருகிறது ரஷ்யா.

இது இஸ்ரேலுக்கும் மகிழ்ச்சியை அளித் துள்ளது. இஸ்ரேலைத் தவிர வேறொரு நாட்டை யூதர் ஒருவர் ஆட்சி செய்கிறார் என்றால், அது உக்ரைன் மட்டும் தான். ஆதலால் செலன்ஸ் கியின் ஆட்சி இஸ்ரேலின் செல்லப் பிள்ளையாக இருக்கிறது . போரால் பல இழப்புகளையும், வேதனைகளையும் கண்டு வரும் உக்ரைனின் மக்களுக்கு துருக்கியின் மனிதாபிமான முயற்சி மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. இஸ்ரேல் வரவேற் றுள்ளது பாராட்டியுள்ளது.

இதுபோன்ற ஒரு மனிதாபிமான பொருளா தார உதவியின் வரலாற்றை இங்கு நாம் நினைவு கூறுவது நல்லது. சுமார் 12 வருடத்திற்கு முன் 2010ல், வறுமை பட்டினி என சிக்க வைக்கப்பட்ட பாலஸ்தீனத்தின் காஸா முஸ்லிம்கள் மீது மீண்டும் மீண்டும் பொருளாதார தடையையும் நெருக் கடியையும் இஸ்ரேல் செயல்படுத்திட்ட போது, இதுபோன்ற மனிதாபிமான முயற்சியை துருக்கி கையில் எடுத்தது . அந்த வரலாற்று சம்பவம் flotilla போலாட்டிலா என்ற பெயரில் பிரபலமானது.

இது பெரிய வியாபார கப்பல் (ராணுவ கப்பல் அல்ல) ஒன்றில் காஸா மக்களுக்கு வேண்டிய மருத்துவ மற்றும் வாழ்வாதார பொருள்களை அனுப்பி வைத்தது துருக்கி. ஆனால் யூத பயங் கரங்களின் கடும் பிடியில் இருக்கும் இஸ்ரேல் , தனது திடீர் ராணுவ நடவடிக்கையால் கப்பலை நடுக்கடலில் தாக்கி சேதாரத்தை ஏற்படுத்தியது. சமூக சேவகர்கள் மற்றும் அதில் பயணித்த சர்வதேச பத்திரிக்கையாளர்கள் பலரையும் படுகொலை செய்தது. மனிதாபிமான பொருள் களை சுமந்த கப்பல் காஸா மக்களின் பசியாற்ற அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறான ராணுவ நடவடிக்கை துருக்கியுடனான ராஜ்ஜிய உறவை முறிக்க செய்யும் என தெரிந்திருந்தும், தனது இரக்கமற்ற அரசு பயங்கரவாதத்தை செயல் படுத்தி துருக்கியை பகைத்துக் கொண்டது இஸ்ரேல். முஸ்லிம்களை பட்டினி போடுவதில் அப்படி ஒரு ஈனப் புத்தி பாலஸ்தீனத்தின் காஸா மக்கள் இன்றும் யூதர்களின் பொருளாதார தடையால் சொல்ல முடியாத, விவரிக்க முடியாத, சிக்கல் நிறைந்த துயரங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதையெல்லாம் அறிந்தவர் தான் உக்ரேனின் யூத அதிபர் ஜெலன்ஸ்கி. இவர் தனது இனத்தின் மரியாதையை காப்பாற்றும் நேரமிது. துருக்கியின் உதவியால் தாக்குப் பிடித்து வரும் செலன்ஸ்கி தனது யூத இனவாத நாடான இஸ்ரேலை நிர்பந்தித்து காஸா மீதான பொருளாதார தடையை நீக்குவாரா? நன்றியுடன் நடந்து கொள்வாரா? இல்லை "விஞ்சினால் கெஞ்சு வோம். நீங்கள் கெஞ்சினால் விஞ்சுவோம்" என்ற ஆணவப் போக்கை கை கொள்வாரா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**மனிதனின் நல்லுணர்வை தட்டி எழுப்பும் இக்கட்டுரையை சமூக ஊடகங்கள் வழியே சர்வதேச அளவில் பரப்பி விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும்.** - A. **ஜாகிர், மதுரை.**

# கோவை கார் சிலிண்டர் வெடிப்பு

Follow Up



**கோவை கார் சிலிண்டர் வெடிப்பு (அல்லது) கார் குண்டுவெடிப்பு (அல்லது) தற்கொலைப்படை தாக்குதலை ! உண்மையிலேயே! நடத்தியவர்கள் கொஞ்ச நஞ்சமல்ல நிறையவே குழம்பி போயிருக்கிறார்கள்.**

வடமாநிலங்களில் இதுபோன்று தாக்குதல்களை நடத்தி வெற்றி கண்டவர்கள் தமிழ்நாட்டையும் அதே போன்று கணக்கிட்டது மிகப் பெரிய தவறு என்பதை உணர்ந்திருப்பர்! தற்போது இச்சம்பவம் பற்றிய புலனாய்வு அமைப்புகளின் போக்கும் அறிவிப்புகளும் கண்டுபிடிப்புகளும் மக்கள் காவல்துறையின் மீதும் அதனுடைய புலனாய்வு அமைப்புகளின் மீதும் வைத்த நம்பிக்கை சிதைந்து கொண்டிருப்பதுதான் பரிதாபத்திலும் பரிதாபம்.

### தட்டுத்தடுமாறும் வழக்கின் போக்கு

*23.10.22 சம்பவம் குறித்து உக்கடம் காவல் நிலையம் முதல் தகவல் அறிக்கை 20-7-2022 பதிவு செய்தது. என்.ஐ.ஏ. இந்த வழக்கை 27.10.22 அன்று மறுபதிவு செய்தது. அதில் முபீன் ஐ.எஸ். ஐ.எஸ் ஆதரவாளர் என்றும் அதற்கு ஆதாரமாக முபீன் வீட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ் கொடி வரைந்த சிலேட் கிடைத்ததாகவும் அறிவித்தது. ஆனால் 23.10.22 அன்றே பிஜேபியின் மாநில தலைவர் 8:46 மணிக்கு முபீனை ஐஎஸ்ஐஎஸ் ஆதரவாளர் என்று அறிவித்தார். அந்த அறிவிப்பை (அல்ல) உத்தரவை என்ஐஏ 27ம் தேதி அமல்படுத்தியது.*

*ஆனால் முபீன் வீட்டிலிருந்து என்.ஐ.ஏ கண்டுபிடித்ததாக கூறப்படும் சிலேட் எங்கள் வீட்டை சேர்ந்ததல்ல என்று முபீனின் மைத்துனர் எங்களிடம் தெரிவித்தார்.*

### முரண்பாடுகள்

**காவல்துறையின் அறிக்கை:** *காரில் இருந்த சிலிண்டர் வெடித்து கார் சிதறியது ஒருவர் உயிரிழப்பு. 6 தனிப்படைகள் அமைப்பு. காரை ஓட்டி வந்த ஜமேஷா முபீன் சிலிண்டர் வெடித்ததில் உடல் கருகி உயிரிழந்தார் என்றும் அறிவித்தது. இரண்டு சிசிடிவி ஆதாரங்களையும் வெளியிட்டது. பிரேத பரிசோதனை அறிக்கையின் படி முபீனின் உடலில் ஏழு ஆணிகள் இறங்கியதாகவும் அதில் இருதயத்தை துழைத்த ஒரு ஆணியால் தான் முபீனுக்கு மரணம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறுகிறது.*

**தடயவியல் அறிக்கை:** *"மக்கள் கூடும் இடம் ஒன்றில் காரை வெடிக்க வைக்கலாம் என முபீன் காரை ஓட்டிச் சென்றதாகவும் கோட்டை ஈஸ்வரன் கோயில் அருகே போலீஸார் வாகனத் தணிக்கை செய்ததாகவும் இதற்கு மேல் செல்ல முடியாது என திட்டமிட்டு அங்கேயே காரை வெடிக்க வைத்து விடலாம் என காரில் இருந்து இறங்கிய முபீன் காரில் இருந்த காஸ் சிலிண்டருக்கு தீ வைத்து விட்டு தப்ப முயன்றிருக்கலாம்";*

*(பாலிமர் செய்திகள்: 12.11.22)*

*1) விடியற்காலை 4 மணிக்கு மக்கள் கூடுவார்களாம்?*

*2) வழக்கமாக ஈஸ்வரன் கோயிலருகே காவல் பணியில் ஈடுபடும் காவலர் அன்று 3:30 மணிக்கு சென்று விட்டதாக கோவை காவல் ஆணையர் தன்னுடைய பேட்டியில் கூறியிருக்கின்றார். ஆனால் தடயவியல் அறிக்கையோ 4 மணிக்கு ஈஸ்வரன் கோயில் அருகே வாகனத் தணிக்கை நடைபெற்றதாக சொல்கிறதே? காவல் ஆணையாளருக்கே தெரியாமல் கோவை நகருக்குள் என்னென்னமோ நடக்கின்றது. ஜாக்கிரதை.*

*3) காரில் இருந்து இறங்கிய முபீன் காரில் எத்தனையோ வகை வகையான வெடி பொருட்கள் இருக்க அதையெல்லாம் விட்டுவிட்டு காஸ் சிலிண்டருக்கு மட்டும் தீ வைத்தானாம்!*

*4) நன்றாக கவனிக்கவும். காரில் இருந்து இறங்கி தான் தீ வைத்தான் முபீன்! வெடித்த காஸ்சிலிண்டரோ அதில் இருந்த வெடி பொருட் களோ மரணத்தை ஏற்படுத்தவில்லையாம்! அந்த காரில் இருந்த 7 ஆணிகள் இவனுடைய உடலில் பாய்ந்துள்ளது. அதில் ஒரு ஆணி இவனுடைய இருதயத்தை துளைத்ததினால் தான் இவனுடைய உயிர் பிரிந்துள்ளது!*

*மாயாஜால படமாடா ஓட்டுறீங்கன்னு கேட்கத் தோன்றுகிறதா? தப்பில்லை.*

*5) உடல் எப்படி கருகியது?*

*சம்பவம் நடந்த கோவை கோட்டை ஈஸ்வரன் கோயில் பகுதிக்குள்ளே இதுபோன்ற எண்ணற்ற கேள்விகள் எழுந்து கொண்டே இருக்கும் நிலை யில் என்.ஐ.ஏவின் சோதனை திருவள்ளூர், நீலகிரி, செங்கல்பட்டு, கேரளா என 43 இடங் களில் சோதனை நடத்தியது தான் வேடிக்கை. ஆக 6 தனிப்படை அமைத்த காவல்துறையும் என்.ஐ.ஏவும் கோட்டை விட்டது கோட்டை ஈஸ்வரன் பகுதியில் தான்.*

**NIAயின் போக்கு**

*என்.ஐ.ஏ. யாரை வேண்டுமானாலும் விசார ணைக்கு அழைக்கலாம் என்ற பரந்த எல்லையற்ற அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கும் ஒரு அரசாங்க அமைப்பு. முபீன் இறப்பு சான்றிதழை விண்ணப்பித்தது வாங்கியது என்.ஐ.ஏ தான்! தடயவியல் அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை என அத்துனையும் வாங்கியது கூட என்.ஐ.ஏ. தான்! ஆனால் அதனுடைய ஒரு நகலை கூட முபீனின் குடும்பத்தாரிடம் தரவில்லை!*

*முபீனுக்கு இரண்டு செல்போன்கள் உண்டு. 1) ரெட்மி என்ற (8778520669) ஆன்ட்ராய்டு போன். 2) 7010843297 என்ற நோகியாவின் பட்டன் போன். இந்த இரண்டும் முபீனுடைய மனைவியின் போனையும் விசாரணைக்காக பறித்துச் சென்றது தரவேயில்லை. இதில் முபீனின் இரண்டாவது போனான நோகியா நீண்ட நாட்களாக உபயோகித்தில் இல்லாமல் இருந்துள்ளது. இந்த தகவலை இங்கு தர வேண் டிய அவசியம் என்னவென்றால் கண்டிப்பாக மைசூர் ஆட்டோ (அல்லது) குக்கர் (அல்லது) பார்சல் குண்டுவெடிப்புடன் முபீனோடு தொடர்புபடுத்த வாய்ப்பு உண்டு. காரணம் கர்நாடகாவின் பொம்மை மைசூர் குண்டு வெடிப் போடு தொடர்புள்ளவன் கோயம்புத்தூரில் தான் சிம் கார்டு வாங்கினான் என்ற தகவலை பதிந்துள்ளார்.!*

**காவல் ஆணையரின் விஷமத்தனமான கவிதை**

*மாவட்ட காவல் ஆணையர் என்பவர் ஒட்டு மொத்த மக்களுக்கும் (சாதி சமய பாரபட்சமற்ற) காவல் காக்கும் பணியைச் செய்யும் மரியாதைக் குரியவர். ஆனால் அவரே (கோவை மாவட்ட காவல் ஆணையர் பாலகிருஷ்ணன்)*

*“இறைவனின் பெயரால் இரத்தம் குடிப்பது” என்று கவிதை எழுதியிருப்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தை இழிவுபடுத்தும் நோக்கிலா அல்லது இவரது எதிர்கால அரசியலுக்கு அடித்தளம் இடுகிறாரா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்று.*

*காவல்துறையை தன் கைவசம் வைத்திருக்கும் முதல்வரும் இத்தனை நாட்களாக கண்டும் காணாமல் இருப்பதும் அவருக்கு துணை நிற்கும் முஸ்லிம் சமூகத்திற்கு சற்றே கவலையை தரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.*


*கார் வெடிப்பு ஒரு திட்டமிட்ட தாக்குதல் என எல்லா தரப்பினரும் கூறுவதை கேட்க முடிகிறது. வைகறையும் நிச்சயமாக ஒத்துக் கொள்கிறது இது திட்டமிட்ட தாக்குதல் தான் என்பதை. திட்டமிட்டது யார் என்பது தான் இங்கு கேள்விக்குறி?*

*மாலை 4 மணிக்கு கார் வெடிக்கின்றது. இரவு 8 மணிக்கு கார் வெடிப்பில் இறந்தவன் முபீன் என்று அறிவிக்கின்றது காவல்துறை. 8:46 (அதாவது 46 நிமிடங்களுக்குள்ளாக) பி.ஜே.பி யின் அண்ணாமலை, “இவன் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை சேர்ந்தவன்” என்று ட்வீட் செய்கின் றார். இவனுடைய (முபீனுடைய) ஸ்டேடஸ்ஸில் என்னவெல்லாம் இருந்தது என்பதை சொல்ல முடிகிறதென்றால் இது யார் திட்டமிட்ட செயல்?*

*அண்ணாமலை எதை சொன்னாரோ அதைத் தானே என்.ஐ.ஏயும் 27ம் தேதி கக்கியது. மீண்டும் கேட்கிறோம், “இது யார் திட்டமிட்ட செயல்?”*

**– கோவையிலிருந்து நிருபர்கள்**

ஆங்கிலம் : **JOHN FEFFER**
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




**அன்பார்ந்த வாசகர்களே!**

**இந்தப் பகுதியில், இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும், வெறுப்பை வளர்க்க என்னென்ன பொய்களையெல்லாம், மேலை நாட்டவர்கள் கட்டிவிட்டார்கள் என்பதை ஜான் பெஃபர் விளக்கிச் சொல்லி வருகின்றார்.**

இதை மேலை நாட்டவர்களின் ஒப்புதல் வாக்குமூலம் என்றால், அஃது மிகையாகாது. இஸ்லாமிய ஆட்சி, அதாவது, இஸ்லாமியக் கொள்கைகளின் ஆட்சி உலகில் தலைக்காட்டிட தலைப்பட்டபோதெல்லாம் அதை - தட்டிக் கவிழ்த்தார்கள்.

இதனை பல ஆதாரங்களுடன் சென்ற வைகறை வெளிச்சம் இதழ்களில் வெளியிட்டி ருந்தோம்.

இங்கே 'கிலாபத்' என்ற கொள்கையை நாங்கள் எப்படியெல்லாம் பூதாகரமாகச் சித்தரித்து, அதை எப்படி உலகமெல்லாம் வெறுக்கும்படி செய்தோம் என்பதை விளக்கு கின்றார் ஜான் பெஃபர்.

"இஸ்லாத்திலிருக்கும், இந்த "கிலாபத்" என்ற கொள்கை, இந்த உலகை மீண்டும் இஸ்லாம் கைப்பற்றிட எடுக்கும் முயற்சியாகும்.'

"நாங்கள் முதல் சிலுவைப் போரில், முஸ்லிம் களைக் கண்ட துண்டமாக வெட்டிச் சாய்த்தது. இந்த உலகை இந்த 'கிலாபத்' என்ற கொள்கை யிலிருந்து காப்பாற்றிடத்தான்"

"அன்று முதல் உலகப் போருக்கு கிறிஸ்தவ உலகை, போப் அர்பன்-II பயன்படுத்திய சொற்கள் இன்றைக்கும் அப்படியே பொருந்தும். அன்று போப் சொன்னார்,"

"நமக்குச் சொந்தமான இந்த உலகின் சிறிய பகுதி, போர்க்குணம் கொண்ட துருக்கியர்களா லும், அரபுக்களாலும் ஆட்கொள்ளப்பட்டு விட்டது. ஒன்றிரண்டு நாள்களல்ல, முன்னூறு ஆண்டுகள். அவர்கள் ஸ்பெயின் நாட்டையும், "பல்லேரா" தீவுகளையும் (பார்க்க அடிக்குறிப்பு) தங்கள் கைகளில் வைத்திருந்தார்கள். அவர்கள் இப்போதும் இந்த உலகத்தைக் கைப்பற்றிட இயலும் என்ற நம்பிக்கையிலேயே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இப்போது, அப்போது கைப்பற்றியதைப்போல் அல்லாமல் இந்த மொத்த உலகையும் ஆட்கொள்ள முடியும் என நம்புகின்றார்கள்."

"தொடக்க நாட்களில் இஸ்லாமிய சாம் ராஜ்யம் விரைவாக விரிவடைந்து கொண்டே செல்லும் என அவர்கள் எண்ணினார்கள். முதல் சிலுவைப் போருக்குப் பின்னால் இந்த எண்ணமும் ஆசையும் சுருங்கிப்போனது. உள்ளதைச் சொன்னால் இந்த தொடக்க நாள்களிலிருந்த உற்சாகம் முனை மழுங்கிப் போனது."

"ஒரு கட்டத்தில் ஐபீரிய தீபகற்பத்தில் இஸ்லாமிய உலகம் அதன் முழு வளர்ச்சியை எட்டிப் பிடித்திருக்கின்றது." "கிலாபத் - இத்தாலியில் தன் பிடியை இழந்திருந்தது."

அன்று முஸ்லிம் உலகம் எந்த அளவுக்குப் பிரிந்து பிளந்துக் கிடந்தது என்றால், ஜெரூ சலம் என்ற பைத்துல் முகத்திஸ்-ஐ காப்பாற்றிட

ஒன்று சேருங்கள் என பல முஸ்லிம்கள் குரல் கொடுத்த குரலை முஸ்லிம் உலகில் செவி மடுப்பார் யாருமில்லை. ஆனால், பெர்நார்டு லூயிஸ் என்பவர், முதல் சிலுவைப் போர்களின் போதே இஸ்லாம் ஒரு கிடுக்கிப்பிடியை ஐரோப்பாவில் வைத்திருந்தது என்கின்றார்.

(Faith and Power by Bernard Lewis, Oxford University Press)

"அதே நேரத்தில் கிருஸ்தவ மேலை நாடுகள் இந்த உலகின் ஒவ்வொரு மூலையிலும் தனது ஆதிக்கத்தை நிலைபெறச் செய்ய ஒரு பெரும் ஆதிக்க வெறியை வளர்த்துக் கொண்டிருந்தது."

"கிருஸ்தவ மிஷினரிகளின் பணிகள் கிருஸ்தவ மேற்கின் ஒரு யுக்தி! அதை அவர்கள் உலகெங்கும் தக்க வைத்துக் கொண்டே இருக்கின்றார்கள். சார்லஸ்மிய்ன் என்ற கிருஸ்தவ மன்னன் - தன்னால் முடிந்தவரை ஐரோப்பாவை கிருஸ்தவ மயமாக் கிட தொடர்ந்து முயற்சிகளைக் கொட்டிக் கொண்டே இருந்தார்கள்".

"கிருஸ்தவத்திற்கு ஆள் சேர்த்திட வேண்டும் என்பதில் அவர் காட்டிய வெறி, அனைத்தையும் தாண்டியது. முதல் சிலுவைப் போரில் முதலில் பெற்ற வெற்றிகளின் வெறியில், முடிந்த வரைக்கும் யூதர்களை கட்டாயப்படுத்தி கிருஸ்தவத்தில் சேர்த்தார்."

"அத்தோடு பல கிருஸ்தவ பிரச்சாரகர்களை, பிரான்சிஸ்கேன் என்பவரும் "மொமினிசியன்" என்பவரும், முஸ்லிம் உலகில் கிருஸ்தவத்தைப் பிரச்சாரம் செய்ய அனுப்பி வைத்தார்கள். இது 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடந்தது."

(இன்ஷாஅல்லாஹ்) தொடரும்.

<u>அடிக்குறிப்பு</u>

### 1. பல்லேரிக் தீவுகள்

இவை மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள பல தீவுகள். இவை கிழக்கு ஸ்பெயி னுக்குப் பக்கத்திலுள்ளவை. ஏசுப்பானிய நாட்டுக்குச் சொந்தமானவை. இந்தத் தீவு கூட்டத்தில் நான்கு தீவுகள் உள்ளன. இந்த நான்கு தீவுகளிலும் சேர்த்து 10 லட்சம் மக்கள் வாழுகின்றார்கள். இந்த நான்கு தீவுகளும் ஸ்பெயினில் இஸ்லாம் ஆட்சிச் செய்தபோது, இஸ்லாத்தின் ஆட்சியின் கீழிருந்தன. இதையே போப் அர்பன்-2 குறிப்பிடுகின்றார்.

2) போப் அர்பன்-2 இன் விரும்பத் தகாத முன் மாதிரி என்னவெனில் அவர் அன்று இல்லாதவற்றையும், பொல்லாத வற்றையும் சொல்லி கிருஸ்தவர்களை வெறியூட்டி முஸ்லிம்களின் மேல் ஏவி விட்டார். அவர்கள் முதல் சிலுவைப் போரில் கையில் கிடைத்த முஸ்லிம்களை யெல்லாம் வெட்டிச் சாய்த்தார்கள். அங்கு ஒரு மோடியின் குஜராத்தை நடத்திக் காட்டினார்கள். அதே முன் மாதிரியை, அதாவது போப் அர்பன்-2 இன் முன் மாதிரியைப் பின்பற்றி அமெரிக்க அதிபர்கள் பின்கிளிண்டன், ஜார்ஜ்புஷ் சீனியர், புஷ் ஜூனியர் ஆகியோர் இன்று 9/11 ஒன்றை உருவாக்கினார்கள். முஸ்லிம் உலகில் மேல் ஒரு பெரும் போரைத் தொடுத்தார்கள். அதற்கு Modern Crusade நவீன சிலுவைப் போர் எனப் பெயர் வைத்தார்கள்.

(ஆதாரம் - புஷ் ஜூனியரின் 13-9-2001 உரை)

அன்றைய சிலுவைப்போரில், முதலில் கிடைத்த சில சில்லரை வெற்றிக்களுக்குப் பின் நிரந்தரமான தோல்வியை சந்தித்தது கிறிஸ்தவ உலகம்.

அதேபோல் Modern Crusade என்ற நவீன சிலுவைப் போரும். Awe and Shock அச்சமும் அதிர்ச்சியும் என்ற கூப்பாட்டிற் குப்பின் ஒரு பெரும் தோல்வியைச் சந்தித்தது. ஆனால் முதல் சிலுவைப்போர் களின் போது பெற்றத் தோல்விக்குப்பின் எந்தப் பாடத்தையும் கற்றுக் கொண்ட தாகத் தெரியவில்லை. மேற்குலகம் தொடர்ந்து "இஸ்லாமோ போஃபியாவை" வளர்த்தார்கள்.

Modern Crusade என்ற நவீன சிலுவைப் போரில் கிடைத்தத் தோல்விக்குப் பின்னும் பாடம் பயின்றதாகத் தெரிய வில்லை. இப்போது புதுப் பெயரில் ஒரு சிலுவைப் போரைத் தொடங்கி இருக்கின் றார்கள். அதுதான் சிலுவைப் போர் 2.0 இந்தத் தொடரில் பார்த்து வருகின்றோம்.

# ஓர் நீதிபதியின் நீதியான தீர்ப்பு

**நீதி உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் சரியே எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகை உங்களை நீதியிருந்து பிறழச் செய்து விடக்கூடாது. - திருமறை.**



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
களச்சல்

*நீதிபதி பொறுப்பு ஓர் நாட்டில் மிகவும் முக்கியமானது. நபிகள் நாயகம் ஓர் ஆட்சித் தலைவராக மதீனாவை நிர்வகித்த போது அவர்களுடைய நீதியான தீர்ப்பின் விளைவு யூதர்கள் அவர்களிடையே எழுந்த பிரச்சினை களுக்கு நபிகள் நாயகத்தின் தீர்ப்பினை நாடினர். அவர்களின் நீதியான தீர்ப்பு பார்த்து யூதர்கள் திருப்தியடைந்தனர் அவர்கள் சார்பான வழக்கு களை யூத சட்ட அடிப்படையில் தீர்ப்பு நல்கினர் நபிகள் நாயகம்.*

*நீதிபதி பதவியிருப்போர் வசதிபடைத்தவர் வறியவர், நிர்வாகி எனப்பாராமல் காய்தல், உவத்தலன்றி தீர்ப்பு நல்க வேண்டும். வாதி, பிரதிவாதி இருவரும் நீதிபதியை மதிக்கும் படியாக நீதி வழுவாதவராக நம்பிக்கைக்குரிய வராக இருக்க வேண்டும்.*

*ஓர் வழக்கு சம்பந்தமாக செய்து பின் தாபித் (ரலி) நீதிபதியாக இருக்கும் பொழுது கலீபா உமர் (ரலி) நீதிமன்றம் போனார்கள். உமர் (ரலி) அவர்களைக் கண்ட நீதிபதி இருக்கையிலிருந்து எழுந்தார்கள். கலீபா மீது வழக்குப் போட்ட வரும் கோர்ட்டில் அவ்வமயம் ஆஜராயிருந்தார். கலீபா உமர் (ரலி) நீதிபதியின் இச்செயலை கண்டித்து இந்நீதிபதியிடம் உமக்கு நீதி கிடைக் குமா என்பதை ஆற ஆலோசித்து இவ்வழக்கை இவரிடம் நடத்தவும் என வாதியிடம் கலீபா உமர் சொன்னார்கள்.*

*ஆட்சியாளராக சாதாரணமானவராக யாராக இருந்தாலும் வழக்கில் வாதி பிரதிவாதி என்று வரும் பொழுது நீதிபதி நீதிமன்றத்தில் எழுந் திருப்பது நீதிபதி பதவிக்கு உகந்த செயலல்ல என்பதை உணர்த்தவே கலீபா உமர் (ரலி) நீதிபதியை கண்டித்து, உபதேசமும் செய்தனர். இது நீதிமன்றம் என்றும் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கயிலாகும்.*

*ஹஸ்ரத் அலீ கலீபாவாக இருக்கும் பொழுது அன்னார் உருக்குச்சட்டை களவு போகிறது. அவ்உருக்கு சட்டை ஒரு யூதனிடம் இருக்கிறது என்பதை அறிந்து நீதிமன்றத்தில் அவ்வூருக்குச் சட்டை தன்னுடையதென உறுதி செய்ய தன் மகனையும் பணியாளையும் சாட்சியாக போட்டு யூதன் மீது நீதிமன்றத்தில் வழக்குப் போட்டனர் ஹஸ்ரத் அலி (ரலி)*

*நீதிபதி இவ்வழக்கை விசாரித்தபோது இவ்வழக்கில் கலீபா தன் மகனையும் பணி யாளையும் சாட்சியாக போட்டிருப்பது நபிகள் நாயகத்தின் நல்லுரையை மேற்கோள் காண்பித்து ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஆகவே இவ்வழக்கை தள்ளுபடி செய்கிறேன் எனக் கூறி வழக்கினை தள்ளுபடி செய்தார். கலீபாவாக இருந்தாலும் நீதி என வருகிற போது நாடாளும் கலீபாவும் சாதாரண நாட்டு மக்களும் நீதிமுன் ஒன்றே என்பதே இந்நிகழ்வு நமக்கு சொல்லும் செய்தியாகும்.*

*நீதிபதி இறையச்சம் உடையவராக நேர்மை யானவராக இருந்தால் நீதிபதிக்கு சிக்கலான வழக்குகளில் நேர்மையான தீர்ப்பிற்கு வழிவகை*

இறைவன் காண்பிப்பான் இது குர்ஆன், நபிமொழி மூலம் அறிய முடிகிறது.

நபிதாவூத் நபிகாலத்தில் ஒருவர் தன்னுடைய ஆட்டினை ஒருவர் அறுத்து உணவு சமைத்து தின்றுள்ளார் என வழக்கு தொடுத்து தாவூத் அலைஹியிடம் முறையிட்டார். வழக்கினை விசாரித்த தாவூத் நபி ஆட்டினை அறுத்து புசித்தவரை அழைத்து விசாரித்த போது அவர் சொன்னார் நான் இறைவனிடம் நாடோறு ஹலாலான உணவு சாப்பிட பிரார்த்திப்பது வழமை. ஒருக்காலும் இறைவன் எனக்கு ஹறாமான உணவை புசிக்கும் படி செய்ய மாட்டான் இதை நான் உறுதியாக நம்புகிறேன் என்றார். வாதி பிரதிவாதங்களை தாவூத் அலைஹி ஹிகேட்டு நாளை தீர்ப்பு சொல்கிறேன் என்றார்கள்.

நபிதாவூத் (அலை) இவ்வழக்கில் உண்மை குற்றவாளியை இறைவனே! எனக்கு வெளிப்படுத் திதா என பிரார்த்தித்தார்கள் இறைவன் இல்ஹாம் மூலம் ஒருகாட்டுப் பகுதியை காண்பித்து இதில் பொதிந்துள்ள இரகசியம் பற்றி உணர்த்தினான். மறுநாள் நபி தாவூத் அலைஹிவாதி, பிரதிவாதி உடன் செல்ல இறைவன் உணர்த்திய காட்டுப் பகுதிக்குச் சென்றனர். அக்காட்டின் பெயரை கேட்டதும் வாதி நாதளுதளத்ததை நபி தாவூத் அலைஹி பார்த்தார்கள்.

ஒரு பெரிய மரம் அக்காட்டில் உள்ளது. அம்மரத்தின் இடது புறத்தில் தோண்டிய போது பிரதிவாதி தந்தை உடலும் வலது பாகத்தில் தோண்டிய போது தலைப்பாகமும் கிடைத்தது. இது கண்ட வாதி வழக்கு போட்டு வம்பில் மாட்டி விட்டோமே என நடுங்கினார். தாவூத் அலைஹி பிரதிவாதி, தந்தை சொத்தையும் கன்று காலி களையும் அபகரிக்க வாதி திட்டம் போட்டு இக்காட்டில் கொலை செய்து மறைத்து சொத்து கன்று காலிகளை அபகரித்து பிரதிவாதியை துரோகம் செய்த நிகழ்வுகளை சொல்லி வாதிக்கு சட்டபடி தண்டனை நல்கினரென பார்க்கிறோம். முஸா நபி காலத்தில் சொத்திற்காக சிறிய தந்தையை கொன்றவனுக்கு தக்க தண்டனை முஸா நபி மூலம் கொடுக்கப்பட்ட நிகழ்வு அல்பகறா சூஸாவில் இறைவன் குறிப்பிடுகிறான்.

வல்லஅல்லாஹ் நீதிபதி நேர்மையானவராக, நீதியானவராக இருந்தால் வழக்கில் எத்தகை சிக்கல் ஏற்பட்டாலும் தீர்ப்பு வழங்க வழிவகை காண்பிப்பான்.

கலீபா உமர் (ரலி) ஹஸ்ரத் அலி போன்றோர் நீதிவிசயத்தில் நாடாண்டபோது நடந்துள்ள முன் மாதிரியான ஆட்சி நெறி நம் நாட்டில் நாடுபூரா அவசர நிலைப்பிரகடனத்திற்கு காரணம் அன்றைய பிரதமர் இந்திராகாந்திக்கு எதிராக அலகபாத் நீதிமன்றம் தீர்ப்பு சொன்னதால் நாட் டில் அவசர நிலைமை ஏற்பட்டது என்பதை நாம் ஒப்பிடும் பொழுது கலீபாக்கள் நீதியில் தலை யிடாமல் நீதிக்கு தலை வணங்கி ஆட்சி செய்தன ரென்பதை அறிகிறோம். அது தான் நீதிக்கு தலை வணங்கு ஆட்சியென பார்க்கிறோம். நீதியான ஆட்சி இறை காக்கும் வையகம் எல்லாம் அவனை முறைகாக்கும் முட்டாச் செயின் என்ற படி நீண்ட நாள் நாட்டை ஆளவும், இறைவன் நீதி இருக்கும் நாட்டை பெருமையும், சிறப்பும் கொண்ட நாடாக திகளச் செய்வான். இது இறை நியதியுமாகும்.

இறை அன்பு ஒரு நாட்டிற்கு கிடைக்கப் பெற்றால் எல்லா வகை பேரும், பெருமையும் நாட்டிற்கு கிடைக்கும்.



# மருத்துவம்

டாக்டர் **வி.எஸ்.நடராஜன்**

அன்புள்ள உங்களுக்கு... வணக்கம்.

சென்னையிலுள்ள ஒரு ஹோட்டலுக்கு என் நண்பர்போயிருந்தார். இரண்டு இட்லி ஒரு வடை கேட்டார். "காம்போ (சேர்க்கை சலுகை) எதும் சாப்பிடுறீங்களா?" சார் என்று கேட்டார் சர்வர். அவருக்குப் புரியவில்லை. "அப்படின்னா சார்?" என அப்பாவியாகக் கேட்டார். காம் போன்னா, அதை மினி டிபன் என்றும் கூறுவதுண்டு. இட்லி, வடை, கொஞ்சம் பொங்கல் இருக்கும்" அத்துடன் ஒரு மினி பூரி அல்லது சின்ன மசால் தோசை, மினி காபி இவ்வளவும் வரும் என்றார். புதுசாக இருக்கே என வாங்கிச் சாப்பிட்டார். இன்று இந்த ஹோட்டலில் மட்டுமல்ல, காம்போ இல்லாத ஹோட்டல்களே இல்லை என்றே கூறலாம்.

இரண்டு நாட்களுக்கு முன்பு திடீரென நெஞ்சு வலி. சென்னையில் உள்ள பிரபல மருத்துவமனை ஒன்றில் எனக்குத் தெரிந்தவர் ஒருவர் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

அவருக்குப் பரிசோதனைகள் முடிந்ததும், மருத்துவமனை தரப்பிலிருந்து பேசினார்கள். உடனடியாக அவருக்கு ஆஞ்சியோ செய்யணும், காம்போவாக எடுத்துக்குறீங்களா? என்று கேட்டார்.

இந்த காம்போவில் ஆஞ்சியோகிராம், ஆஞ்சியோ பிளாஸ்ட், ஐ.சி.யு., சி.சி.யு. டாக்டர் பீஸ் எல்லாம் சேர்த்து மூன்று லட்சம் ரூபாய் வரும்! இதுவே நீங்க தனித்தனியா எடுத்துகிட்டா அதிகம் ஆகும்! என்று சொன்னார்கள். அந்த மருத்துவ மனையில், ஹார்ட்டுக்கு, டெலிவரிக்கு, கிட்னிக்கு லங்ஸ்க்கு எனத் தனித்தனி காம்போ இருக்கிறது.

அந்த மருத்துவமனையில் மட்டுமல்ல. சென்னையில் பல மருத்துவமனைகளில் இந்த காம்போ சிஸ்டம் இருக்கிறதாம்!

ஒரு கல்யாணம் காட்சி என்றால், மண்டபம், புரோகிதர், சாப்பாடு, அலங்காரம், வாழைமரம், சிட்டிங் அரேஞ்மென்ட், வரவேற்பு வரை காம்போ தான். சாப்பிடும் போது தண்ணீர் பாட்டில் முடியைத் திறந்து கொடுப்பதும் காம்போவில் அடங்கும்!

எதற்கு இந்தக் கட்டுரையை எழுதுகிறேன் என்றால், அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

சமீபத்தில் என்னுடைய நோயாளி ஒருவருக்கு நீரிழிவு நோய்க்கான பரிசோதனையை மட்டும் செய்து வரும்படி எழுதி அனுப்பிவைத்தேன். அவர் ஒரு மருத்துவப் பரிசோதனைக்கூடத்திற்குச் செல்ல, அங்குள்ள ஓர் ஊழியர் "சார் இப்போ சலுகை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். அதில் ரூ.2,500 கட்டினால் சுமார் 60 பரிசோதனைகள் செய்து தரப்படும். சாதாரணமாக ஒவ்வொரு பரிசோதனைக்கும் தனித்தனியாகச் செய்தால் ரூ.4,000 ஆகும். இதன்மூலம் ரூ.1.500 லாபம் மற்றும் 60 பரிசோதனைகளும் செய்து தரப்படும்' என்று கூற, அவரும் அப்படியே காம்போ சலுகை மூலம் சுமார் 60 பரிசோதனைகளைச் செய்து கொண்டு எனது கிளினிக்கிற்கு வந்தார். நான் அந்தப் பரிசோதனைகளைப் பார்த்ததும் சற்று திடுக்கிட்டுப் போனேன். நான் செய்யச் சொன்னது நாலே பரிசோதனைகள் தான். அதற்கு சுமார் ரூ.1.000- த்திற்கும் குறைவாகத்தான் ஆகும். ஆனால் இவர் தேவையில்லாமல் ரூ.1,500 அதிகம் செலவு செய்துள்ளார். அந்தப் பரிசோதனைகளில் எதுவும் இதற்கு ஏற்றதாக இல்லை.

உதாரணமாக உடலில் புற்றுநோய் வர வாய்ப் புண்டா, ஹார்மோன்| பரிசோதனை மற்றும் தேவை யில்லாத பல பரிசோதனைகளைச் செய்துள்ளார். இதில் இன்னொரு வேதனை என்னவென்றால்

அந்த 60 பரிசோதனைகளையும்

நான் ஒன்றுவிடாமல், எனது நேரத்தைத் தேவை யில்லாமல் செலவழித்துப் பார்த்து சரி என்று சொல்ல வேண்டும்!

சமீப காலமாகப் பல பரிசோதனைக்கூடங்களில் நோயாளிகளிடமிருந்து பணத்தைப் பறிக்க இந்தச் 'சலுகை' முறை செயல்பட்டு வருகிறது. ஹோட்ட லுக்கோ, மருத்துவச் சிகிச்சைக்கோ இந்த காம்போ முறை சரிவரலாம். ஆனால், உடல் பரிசோதனை களில் இச்சலுகை முறை கூடவே கூடாது. இதில் நோயாளிகளுக்குப் பண விரயம், தேவையில்லாமல் பலவிதமான பரிசோதனைகள், மேலும் மருத்து வரின் பொன்னான நேரம் போன்றவை தேவையற்ற பல பரிசோதனைகளால் வீணாக்கப்படுகிறது.

அதனால், மருத்துவப் பரிசோதனைகளில் காப்போ முறையைத் தவிர்ப்பது நல்லதே!

- நன்றி : முதுமை எனும் பூங்காற்று

# பெற்றோர்களின் கவனத்திற்கு

குழந்தைகளை நல்லொழுக்க முடையவர்களாக வளர்ப்பத்தில் பெற்றோர்களின் பங்கு மிகவும் முக்கிய மானதாகும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக செல்வத்தை சேர்க்க வேண்டும் என்பதில் ஆர்வமாக உள்ளனர். தங்கள் பிள்ளைகளை படிக்க வைத்து உயர்ந்த வேலையில் நல்ல சம்பாதியத்தில் இருக்க வேண்டும் என்பதில் ஆசை கொண்டவர்களாக உள்ளனர். ஆனால், தங்கள் பிள்ளைகள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதில் கவனக் குறைவாக இருக்கின்றார்கள். நல்லொ ழுக்கமும், இறையச்சமும் இல்லாத கல்வியும், செல்வமும் எந்த பயனை யும் அளிக்காது. நம்முடைய பிள்ளைகள் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாளை மறுமையில் பெற்றோர்களுக்கும் பயன் தர வேண்டுமென்றால் இறையச்சத்தை யும், நல்லொழுக்கத்தையும் பெற்றோர் கள் கற்றுக் கொடுக்க வேண்டும்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"ஒரு தந்தை தன் குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தை விடச் சிறந்ததாக வேறு எதையும் விட்டுச் செல்வது கிடையாது" (திர்மிதி)

இன்றைய காலக்கட்டங்களில் பிள்ளைகள் வயது வரம்பிற்கு அப்பாற் பட்டு சிறு வயதில் இருந்தே தவறான பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி உள்ளார்கள். மேற்கத்திய கலாச்சாரங் களில் மூழ்கிக் கிடக்கிறார்கள். இறை வனையும் அவன் மீது உள்ள அச்சத் தையும் இறைவனை நினைவுப்படுத்தும் காரியங்களில் தங்கள் பிள்ளைகளை பயிற்று வைக்க பெற்றோர் இதன் விஷயத்தில் கவனக் குறைவாக இருக்கின்றார்கள்.

முஹம்மத் நபி (ஸல்) கூறினார்கள் :

"உங்கள் குழந்தை ஏழு வயதை எட்டி விடும்போது தொழுகையை நிறை வேற்றும்படி அவர்களை ஏவுங்கள். அவர்கள் பத்து வயதை எட்டிவிடும் போது தொழுகையை தவறவிடாமல் அவர்களை அடியுங்கள். இந்த வயதை அடைந்ததும் அவர்களின் படுக்கையை தனித்து அமையுங்கள்" (முஸ்லிம்)

சிறு வயது முதலே குழந்தைகளுக்கு தொழுகையை கற்றுக்கொடுக்க வேண்டும். அதன்மூலம் இறையச்சம் பயிற்சி அளிக்க வேண்டும்.

அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்

"நிச்சயமாக தொழுகையானது மானக்கேடான, கேவலமான செயல் களிலிருந்து மனிதனைப் பாதுகாக் கின்றது" (அன்கபூத் : 45)

பெற்றோர்கள் தங்கள் குழந்தை களுக்கு ஒரு முன்மாதிரியாக திகழ வேண்டும். உண்மையென்றால் பிள்ளை கள் தங்கள் சிறு வயது முதலே பெற்றோர் களைப் பார்த்துதான் வளர்க்கிறார்கள். நாம் நன்மைகளை செய்யும் போது, அதைப் பார்த்து அவர்களும் அதை செய்வார்கள். அதே போன்றே தீமைகளை செய்யும் போது அதை செய்வதற்கு துணிவார்கள். பயப்பட மாட்டார்கள்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

விளையாட்டிற்குக்கூட குழந்தை களிடம் பொய் கூறாதீர்கள்.

"ஒரு குழந்தையை அழைத்து அக்குழந்தையிடம் நான் இன்னதை

உனக்குத் தருவேன் எனக் கூறுபவர். அதைத் தரவில்லையென்றால் அவர் அங்கே ஒரு பொய்யைச் சொல்லிவிட்டார் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பெற்றோர்களே! உங்களுடைய பிள்ளைகள் இந்த உலகிலும் நாளை மறுமையிலும் உங்களுக்கு பயனளிக்க வேண்டுமென்றால் அது உங்களின் நல்ல வளர்ப்பில்தான் உள்ளது. இல்லையென்றால் இந்த உலகில் மட்டுமல்ல நாளை மறுமையில் கூட நமக்கு எதிரானவர்களாக மாறிவிடுவார்கள்.

நம்மை படைத்த இறைவனிடம் நாங்கள் வழிகெட்டுப் போனதற்கு எங்கள் பெற்றோர்கள்தான் காரணம். அதனால் அவர்களை நரகத்டதில் புகுத்திவிடு, எங்களை மன்னித்து சுவனத்திற்கு அனுப்பு என பெற்றோர்களுக்கு எதிராக மாறிவிடுவார்கள்.

“அந்த நாளில் மனிதன் வெருண்டோடுவான்.

தன் சகோதரனை விட்டும்

தன் தாயை விட்டும், தன் தந்தையை விட்டும்

தன் மனைவியை விட்டும், தன் மக்களை விட்டும்

வெருண்டோடுவான்.

அன்று, ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் நிலையே போதுமானதாயிருக்கும் (அபஸ 34,35,36,37)


முஹம்மத் நபி (ஸல்) கூறினார்கள் :


மனிதன் மரணமடையும் போது மூன்றினைத் தவிர பிற செயல்பாடுகள் அனைத்தும் அறுந்து விடுகின்றன. அவை

1) அவன் புரிந்த நிலையான தர்மம்

2) அவன் பரப்பிய பயனுள்ள கல்வி

3) அவனுக்காகப் பிரார்த்திக்கின்ற நல்லொழுக்கமுடைய பிள்ளைகள் (முஸ்லிம்)




Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002